உ

திருச்சிற்றம்பலம்.

# விக்கிரகாராதனம்.

இஃது

திருநெல்வேலிப்பேட்டை

தருமசிவன்பிள்ளையவர்கள் குமாரர்

த. ஆறுமுகநயினார்பிள்ளையவர்களால்

இயற்றி

[illegible]டிபேட்டை ஸ்ரீமான் வே. முத்துசுவாமிப்பிள்ளை

அவர்கள் குமாரரும் சிவநேசப்பெருந்[illegible]வரும்

திருநெல்வேலி V. M. [illegible]

வெ. [illegible]பிள்ளையவர்களின்

பொருளுதவியின் [illegible]

திருநெல்வேலி வாணி விலாஸ அச்சாபீஸில்

[illegible]க்கப்பெற்றது.

---

*Registered Copyright.*

[விலை]  191[illegible]  [அணா 8.


THANJAVUR SARASWATHI MAHAL LIBRARY 29 DEC 1982

[illegible] அருணாசலம் அவர்களின் நினைவாக அளிப்பவர்: திருமதி சியாமளா அருணாசலம் சீர்காழி (1982)

உ

# அறிவிப்பு.

இப்புத்தகம் வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்குத்தெரிவித்தால் வி. பி. யில் அனுப்பிக்கொடுக்கப்படும். இஃது இந்நூலாசிரியர் அரும்பெரும்பிரயாசைக்காக சொற்பக்கிரயம் (அணா எட்டு) யேற்படுத்தப்பட்டிருக்கிறது. வி. பி. சார்ஜ் வேறு.


தி-ஆறுமுகநயினார் பிள்ளை

திரிபுரசுந்தரியம்மன் மேலத்தெரு

பேட்டை.


---


இது ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருப்பதால் வேறொருவரும் பதிப்பிக்கக்கூடாது.

# முகவுரை.

"விக்கிரகாராதனம்" என்னும் இஃது அமிர்தவசனியென்னும் திருவனந்தபுரத்துப்பத்திரிகையில் சென்ற 1911–ம்வூத்தில் வெளியாய்க்கொண்டுவந்தது. அப்பத்திரிகை மாதசஞ்சிகையானபடியால் விஷயமுழுவதும் சீக்கிரத்தில் ஒருசேர அறிந்துகொள்ளக்கூடாத நிலைமையில் சிறிதுசிறிதாகவே வந்து கொண்டிருந்தது. அந்தவிஷயமோமுழுவதும் என்போலிகள் தெரிந்துகொள்ளத்தக்கதோர் ஆவசியகமுள்ளதென எனக்குத்தோன்றிற்று. ஆதலின் இவ்விஷயதானரை நேரிற்கண்டு அமிர்தவசனியில் வெளிப்படுத்திவரும் அவ்விஷயத்தை ஒரு புஸ்தகமாக்கி விடலாமென்றுநினைக்கிறேன்; அவ்விஷயமுழுவதும் என்னிடத்தில் தரலாமா? வென்றுகேட்டேன். பத்திரிகைமூலமாக வெளிவந்தமட்டிலும் அச்சிற்பதிப்பித்துக்கொண்டு தெரிவித்தால் மேலுள்ளவற்றைத்தருகிறேனென்று வாக்களித்தனர். அப்படியேநானும் பத்திரிகைமூலமாய் வெளிவந்ததெல்லாம் அச்சிற்பதிப்பித்தேன். அப்பாலுள்ளவற்றையும் வாக்களித்தபடிவாங்கிமுழுவதும் அச்சடிப்பித்து புஸ்தகமாக்கினேன். ஆனல் இது என்னுடைய முயற்சையின்பேரில் ஆனது போற்காணப்பட்டாலும், ஸ்ரீமான் வெ. மு. அம்மனதபிள்ளையவர்களது சிவபுண்ணியவிருப்பத்தால் கொடுத்தபொருளுதவியினுலேதான் இதுவெளியாயிற்றென்பதுந்திண்ணம்.

அன்றியும் சிவநேசப்பெருஞ் செல்வராகிய ஷெ வெ.மு.அ.அவ
ர்கள் ஆவணிமூலமகோற்சவ தெரிசனைக்காக மதுரைக்குப்
போகும்போது இவ்விஷயதானராகிய த, ஆறுமுகநயினார்பிள்
ளையவர்களையும் கூடஅழைத்துக்கொண்டுபோய் அங்கேதிருஞா
னசம்பந்தசுவாமிகள் ஆதீனமடாலயத்திலெழுந்தருளியிருக்கும்
மகாசன்னிதானத்தின் திருக்கண்சாத்துதற்கும் ஒருபுஸ்தகம்
கொடுக்கும்படிசெய்தார்கள். மகாசன்னிதானமும் கருணைநோ
க்கத்தோடுகைக்கொண்டு திருக்கண்சாத்திமேல் (அடியில்) விவ
ரித்திருக்கிற பிரகாரம் நல்லபிப்பிராயமும் கொடுத்தருளினார்
கள். இங்ஙனம் (இப்புஸ்தகத்தை அச்சிற்பதிப்பிக்கவேணுமெ
ன்றதோர் ஆதரத்தை யென்பாலெழுப்பியும், பொருளுதவி
யை ஸ்ரீமான் வெ. மு. அ. அவர்களைக்கொண்டு செய்வித்தும்
திருக்கண்சாத்திவாங்கும்படி இந்நூலாசிரியரை மகாசன்னி
தானத்திற்குச்சேர்ப்பித்தும், மகாசன்னிதானத்தின் திருவுள்
ளத்தினின்று நல்லபிப்பிராயங்கொடுத்தருளியும், நின்றது: எ
ல்லாம் வல்ல இறைவனது திருவருட் செயலேயாம். ஆகவே
இவ்வாறு நிகழ்தலைக்கொண்டு சிவபுண்ணிய உண்மை
யையினிதே தெளிவிக்கவல்ல இந்நூலினது அருமைபெரு
மைகள் அறிஞர்க்கெல்லாம் நன்குவிளங்கும். சைவராவார் ஒவ்
வொருவரும் தெரிந்துகொள்ளவேண்டிய ஆலயவழிபாட்
டை நன்கு வலியுறுத்தக்கூடியது இந்நூலேயாம். சிவபுண்
ணியத்தெளிவு அருளும் இந்நூலை வெளிப்படுத்தவேண்டுமெ
ன்று யேதோ ஒருதவமிருந்து என்னையியக்கினாலும் அதனை
அட்சரப்பிழைகளன்றிச்சரிபார்த்துப் பதிப்பிக்கும் பயிற்சி தெ

னக்கு இப்போது இதிற்றுனே துவக்கமானபடியால் இப்புத்தகத்தில் சிறிது அச்சரப்பிழைகளுங் காணப்படலாம். அவற்றை அடுத்தபதிப்பில் திருத்திச்சுத்தமாக வெளியிடப்படும். இப்புத்தகம் உபந்யாசரூபமாகவே காணப்பட்டது. ஒவ்வோரவசரங்களிலும் ஆறுதலான சமாதானங்களுடனேயும், உயர்ந்த மேற்கோள்களுடனேயும், நடைபெற்றுள்ள இப்பிரசங்கம்அன்பருக்கெல்லாம் இன்பந்தருமென்பதும் நிச்சயம். அத்தகைய இந்நூலைச்சம்மதித்தோ ஆட்சேபித்தோ யெழுதப்பிரியமுள்ளவர்களும் பலர் இருக்கலாமென் றோரபிப்பிராயமுமெனக்கு உண்டு. அப்படியெழுதிவெளிப்படுத்துகிறதாகயிருந்தால் எனக்காவது இந்நூலாசிரியருக்காவது ஒருபுஸ்தகம் அல்லது பத்திரிகையைஅனுப்பிக்கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மா. ச. மாறியாடும்பெருமாள்செட்டியார்,

பேட்டை,

ஸ்ரீமத்சைவசமயஸ்தாபகரும், பரசமயகோளரியும், செகத்குருவும் ஆகிய மதுரைத்திருஞான சம்பந்த சுவாமிகள், ஆதீனமடாலயத்தில் எழுந்தருளியிருக்கும் மகாசந்நிதானத்தின் அபிப்பிராயமாவது :—

திருநெல்வேலிப்பேட்டை தருமசிவன்பிள்ளை குமாரரும் சைவசமய உபந்யாசகருமாகிய, ஆறுமுகநயினார்பிள்ளையால் அச்சிடப்பட்ட விக்கிரகாராதன மென்னும் புத்தகம் நமது பார்வைக்கு வந்தது. நான்கு தினம் வரை அப்புத்தகத்தை

ஷை பிள்ளையால் படிக்கச்சொல்லிக்கேட்டோம். அது ஆலய வழிபாட்டின் அருமை தெரியாது புறச்சமயிகள் போதனைக் குட்படும் நவீனநாகரீகிகள் உண்மைதெரிந்து கோடற்குமிக உபகாரமாயுள்ளது. புறச்சமயத்தாரால்நிகழும்ஆக்ஷேபங்களை ஆறுதலோடு எடுத்துக்காட்டி தக்க சமாதானம் கூறியிருப்பதும் நமக்கு மிகவும் திருப்திகரமாயிருக்கிறது. இப்படியே சைவசமயிகள் சமய ஆராய்ச்சி விஷயத்திலும், சைவசமயப்பிரசங்க விஷயத்திலும், ஊக்கமுடையவர்களாயிருப்பின் உலகத்துக்கு மிகவும் உபகாரமாயிருக்கும். இப்போது இப்புத்தகம் எழுதிய நமது பிள்ளைக்கு சிவஞானமும் தீர்க்காயுளும் அபிவிர்த்தியாகும்படி ஆலவாய்ப்பெருமான் அருள்புரிவாராக.

பரீதாபி௵ சிம்மரவி 26௳
திருஞானசம்பந்தசுவாமிகள் மடாலயம் மதுரை. } ஸ்ரீஜ்ஞானஸம்பந்ததேசிகா

இந்நூலாசிரியர்க்கோர் போதகாசிரியரும் பேட்டை கனம் கி. மு. சொக்கலிங்கம்பிள்ளையவர்கட்குப் பாட்டனுரும், பால்வண்ணேசுவரரை மறவாத பரமாப்தரும், முத்தமிழ்வல்லாரும் ஆகிய கனம கி. மு. சுப்பிரமணியபிள்ளையவர்களாலியற்றியது.

வெண்பா.

முக்கணிறை வன்கழல்சேர் முத்திதருஞ் சைவநெறி
விக்கிரகா ராதனத்தைவேண்டிநிற்போர்—ஒக்குவண்ணம்
ஆறு முகநயினர்அன்பா வுரைத்த இன்னூல்
மாறுபடாதோர்வாருய் வார்.

# விக்கிரகாராதனம்.

## வெண்பா.

சொக்கரருளார்ந்த சுருதிவல்லார் போற்றுகின்ற
விக்கிரகா ராதனத்தின் மெய்மைசொல் வேன்-தக்கவினை
தீர்த்த விநாயகர்க்குச் சிந்தைதளி யாக்கொடுத்தம்
மூர்த்தியருள் கொண்டுவந்து முன்.

விக்கிரகாராதனம் என்றபதம் வி+கிரகம்+ஆராதனம் எனப்பிரிந்து வி=கண், கிரகம்=கிரகணம் (கிரகித்தல்), ஆராதனம்=ஆர்ச்சனம், எனப்பொருள்தரலானே. கண்களால் கிரகிக்கப்படுகிற ஆர்ச்சனம் அல்லது, கண்களால் கிரகித்து ஆர்ச்சிக்கப்படுவது என்று பொருள்படும். அதுவுமன்றி வி=விசேஷம், கிரகம்=கிரகணம் (கிரகித்தல்), ஆராதனம்=சாதனம், எனவும் பொருள்படுதலால் அதற்கு விசேஷக்கிரகண சாதனம் என்றொரு பொருள்கோடலுமாம். ஆகவே-விக்கிரகாராதனமென்றபதத்திற்கு

விலோசனக்கிரகணார்ச்சனம்
விசேஷக்கிரகணசாதனம்-என்பனபிரதிபதங்களாதலறிக.

இவ்விரண்டு பதங்களுளொன்றாகிய-விலோசனக்கிரக
ணார்ச்சனம் என்றபதம்கண்களாற் கிரகித்துஆர்ச்சிக்கப்படுவ
என்றர்த்தமாதலால்காதுகளாற்கிரகித்துஆர்ச்சிக்கப்படுவதெ
ன்றனுண்மையுஞ் சூசிப்பிக்கப்பட்டது. அது (காதுகளாற் கி
கித்து ஆர்ச்சிக்கப்படுவது) சாமான்யக்கிரகணசாதனமென
படும். அதனை வலியுறுத்துவானே விக்கிரகாராதனம் விசே
ஷக்கிரகணசாதனமெனப்பட்டதாம். அதுகொண்டு காதுகளை
க்காட்டிலும் கண்களே விசேஷக்கருவியாதல் ஸ்பஷ்டமாம்.
அந்தவுண்மை:—

"சர்வேந்திரியாணாம் நயனம் பிரதானம்"
"கண்ணிற்சிறந்தவுறுப்பில்லை"

என்ற சுருதிபோதங்களாற்போதரும். இங்கே கண்களா
ற்கிரகிக்கப்படுவது தான் ஆலயசேவையால் வருந்திருவருட்
பேறும். ஆகவே சுருதி விசாரத்தால் வரும் அறிவின் விசே
ஷமே காதுகளாற் கிரகிக்கப்படுவதென்பார் பெரியோர்.
ஆதலால், சுருதிவிசாரமும் ஆலயசேவையும் நாமமும் உருவ
மும்போல அனன்னிய பாவமுடையனவாக்காண்க. நாமமும்
உருவமுங்கூடியே ஒருபொருளாம். நாமமோ ஒலிமயமாயி
த்தலால் அது காதுக்கே விஷயமாம். அது (நாமம்) பொருள
ன்பெயரேயல்லாமற் பொருளாக மாட்டாது. மெய் பொய்யெ
னவும் எது? என்னும் வினவாற் பொருளின்மேற்றேயா

ஆதலின் நாமம் (பெயர்) பொருளினதேயாம் என்பா பெரியோர். நாமமில்லாத ஒருபொருளுமுலகத்திலுண்டாயிருக்கவில்லை. உருவமில்லாத ஒருபொருளுக்சேனும் நாமமுண்டாயிருக்கவுமில்லை. ஆதலின் நாமமும் உருவமுங்கூடியே ஒருபொருளென்றும். ஆகவே நாம மாத்திரத்தில் ஒரு பொருளறிவுண்டாமென்ன எவராலுமுடியாது. அப்படியே ஒரு பொருளின் தருவவுணர்ச்சியும் நாமத்தைவிட்டுண்டாயிருப்பதாகக் காட்டுவாருமிலர். உருவமெல்லாம் கட்புலனுக்கே விஷயமாம். ஆனபடியால் மனுடாளெவரும் காதுங்கண்ணுங்கொண்டே பொருளையறிகிறவராயிருக்கின்றனர். இருந்தாலும் உருவத்தைக்காட்டியே நாமம் படிப்பிக்கவேண்டியதாயிருக்கிறது. ஆதலின் உருவவுணர்ச்சியே முந்தியதாம். அந்தவுண்மை பற்றியே "சர்வேந்திரியாணும்நயனம்பிரதானம்" என்ற சுருதியெழுந்தது. ஆதலின் நாமமும் உருவமுங்கொண்டே எந்தப்பொருளுமுண்டாயிருத்தல் ஸ்பஷ்டமாதலால் நாமமுமுருவமும் அனன்னியபாவமுடையவேயாயிற்று. அதுபோலவே சுருதிவிசாரத்திற்கும் ஆலயசேவைக்கும் அனன்னிய சம்பந்தஞ்சித்தித்திருப்பது முண்மையேயாம்.

சுருதிவிசாரம் என்றல், எல்லாம் வல்ல இறைவரின் இயற்கை, குணம், தொழில்களின் பெயர்களைமாத்திரம் தொகை வகை, விரியிற்கேட்டறிதலாம். ஆகவே அந்தப்பரமேசுவரரு

டைய திருவருட்காட்சி வடிவத்தையும், அவரது திருமுன்பில் நடைபெறுகின்ற பஞ்சகிருத்திய விசேஷங்களையும், காண்டலே ஆலயசேவையெனப்படுகிறது. இவ்விரண்டனுலுமே அறிவுடையோருக்குக் கடவுளுண்மையில் நம்பிக்கை (ஆஸ்திகத்துவம்) நிலைபெற்றதென்னலாம். சுருதிவிசாரம் ஒன்றனுலேயே ஒருவனுக்கு ஆஸ்திகத்துவம் பூரணமாகிறதில்லை. அதுபோலவே ஆலயசேவைமாத்திரத்தால் ஒருவனுக்கு ஆஸ்திகத்துவம் நிலைபெறுதலும் ஸ்திரமாகாது. ஆதலின், ஆலயசேவையும் சுருதிவிசாரமும் ஆகிய இரண்டுமுடையோரே ஆஸ்திகராயினர். ஆஸ்திகரென்றுல் கடவுளுண்மையைச் சம்மதித்தவராவார். அதினுந்தெரிந்துசம்மதிக்கிற ஆஸ்திகத்துவந்தான் விலையேறப்பெற்றதாம். தெரியாது சம்மதிக்கிற உடக்கொள்கை சந்திரனுண்மையைச் சம்மதிக்கும் அந்தகன்கொள்கையைப்போன்றிருக்கும். இருந்தாலும் அவன் கண்ணுடையார்வாக்கை நம்புகிறவோர் விசுவாசியேயாவன். அதனுல் மேலோர் வாக்கைவிசுவாசிக்கிற அவன் ஐதிகனெனப்படுகிறுன். அவனுக்கு விசுவாசத்தளவில் இரட்சிப்புண்மையும் கேட்கப்படுகிறது அத்தகைய ஐதிகன்மார்க்கு உண்மைபோதிப்பவரே வைதீகரெனப்படுகிறுர். அவர்தாமே ஆஸ்திகரெனப்பட்டார். வைதீகமென்றுல் வேதசம்பந்தமென்பது பொருளாம். வேதமென்பது வரிவடிவெழுத்துக்களாலமைத்திருக்கப்பட்ட புத்தகமல்ல. அப்புத்தகத்தையருளிய ஆசிரியன் வாக்கினின்று

ண்டாகும் ஒலிவடிவெழுத்துக்களாலாய பதங்களேயாகும். ஆகவே வேதம் ஆசிரியவசனமாயிற்று. ஆசிரியருள் மூலாசிரியரே கடவுளெனப்படுகிறார் அந்தவுண்மை:

"ஆரண ஆகமங்களருளினாலுருவுகொண்டு
காரணனருளானாகில்கதிப்பவரில்லையாகும்"

என்றதாதிய சுருதிபோதங்களாற் போதரும். அங்ஙனம் பெருங்கருணைத்தடங்கடலாகிய பரமேசுரர்வெளிப்படுத்தியருளியவேதமானது அவரது (கடவுளது) இயற்கைகுணம் தொழில்களின் விசேஷங்களைச்சொன்மாத்திரத்தாற்செவிவழியறிவுறுத்தற்கருவியாமென்பதே ஆன்றோர் கொள்கையாம்.

அந்தவேதத்திற் கேட்கப்படும் பொருளினது சுரூப உண்மையை உருவடிவெழுத்திலமைக்கப்பட்டிருப்பதே ஆலயமாம். அது மாத்திரமன்று. எல்லாம் வல்ல இறைவருடைய பஞ்சகிருத்திய விசேஷங்களையும் ஆலயத்திற்காணலாம். அங்கே காணப்படுகிற உருவங்களெல்லாம் பிரதிமாரூபங்களாதலால் சித்திரிக்கப்பட்ட அவை தாம் உருவடிவெழுத்துக்களென்றும். எதாவது ஒருபொருளின் வடிவத்தைப்போலவே வடிவமைத்திருப்பதுதான் உருவடிவெழுத்தெனப்படும். படவே ஒருபொருளின் இயற்கை குணம் தொழில்களை எழுதிவைத்திருப்பதுதான் வரிவடிவெழுத்தாயிற்று. அவ்வரிவடி

வெழுத்தும் அவ்வெழுத்தமைத்திருக்கப்பட்ட புத்தகமும் புத்தகத்தில் கேட்கப்படும்பொருளாகிறதில்லை. அதுபோலவே உருவடிவெழுத்தாகிய பிரதிமாரூபமும் அஃதமைத்திருக்கப்பட்டஆலயமும் கடவுளாகமாட்டாது. ஆயினும் சுருதிவிசாரத்தால் கடவுளினிலக்கணங்கள் செவிவழிமனசிலாவதுபோல், ஆலயசேவையால் கடவுளின் அருட்டிருமேனியினுண்மையும் நேத்திரேந்திரியத்தின் வழியால் மனசிற்பதிந்துவிடுகின்றது. அதுகொண்டு அறிவாளியான ஒருவன் அறிதல் தியானித்தல் சமாதித்தல் சாட்சாத்கரித்தல் என்னுஞ்சோபனக்கிரமத்தால் ஈசுரசாட்சாத்காரம் பெறுவானருகனாகின்றான். அவன்பொருட்டே ஈசுவரனும் வெளிப்பட்டனுக்கிரகிக்கின்றார். அவ்வனுக்கிரகம் பெறுதலைத்தானிங்கே விக்கிரகாராதனமென்றது.

அங்ஙனம் ஈசுவரசாட்சாதி (சமூகத்தி) லாகவும்வணக்கமுடைத்தாத (தற்போதமுனைப்படங்கிநிற்ற) ல் பற்றி விக்கிரகாராதனம் என்றபதத்திற்கு சுரூபவழிபாடு என்ற ஓர் அர்த்தமுங்கேட்கப்படுகிறது. சுரூபவழிபாடென்றது–சு-ரூபம்-வழிபாடு, எனப்பிரிந்து சு=நன்மையே வடிவாய கடவுளின், ரூபம்=திருமேனியை, வழிபாடு=வழிபடல், என்று பொருடரலானே கடவுட்டிருமேனியை வழிபடுதல், அல்லது கடவுட்டிருமேனி வணக்கம் என்று பொருள்படும். படலான்ஈண்டு, முறையே அறிவுறுக்கப்பட்ட

(a) விக்கிரகாராதனம்,
(b) விலோசனக்கிரகணார்ச்சனம்,
(c) விசேஷக்கிரகணசாதனம்,
(d) சுரூபவழிபாடு.

என்றபதங்களின் முடிவில் ஆராதனம், ஆர்ச்சனம், சாதனம், வழிபாடு, என்று சூட்டப்பட்ட மகுடவாசகங்களால் ஆலயங்களிலே ஈசுவரப்பிரதிமாரூபவுண்மையுடன் பஞ்சகிருத்திய விசேஷங்களுண்மையையும் கண்டுளங்கோடலே விக்கிரகாராதனமாக் காண்க.

ஈண்டுப் பிரஸ்தாபிக்கப்பட்ட கிரமங்களிலிருந்து வேதத்திற் பிரதிபாதிக்கவும், ஆலயங்களிற் பிரதிமாரூபமாக அமைத்துவைக்கவும், யோக்கியமாகவுள்ள அப்பொருள் "கடவுள்" என்று கேட்கப்படுதலால்

1. அவர் எப்படிப்பட்டவர்?
2. எவ்விடத்திலிருக்கிறார்?
3. ஏனையோர் (நாஸ்திகர்) என் அவரைஒப்புக்கொள்கின்றிலர்?
4. ஒருபொருளை அறிதற்கு ஆலயசேவையும், சுருதிவிசாரமும் ஆவசியகந்தானா?

5. அப்படியானல் பெரியோர் ஏன்விக்கிரகாராதனத்தை யுறுத்திருக்கிறார்கள்?

6. சுருதிகளிலே விக்கிரகாராதனம் மூடருக்கு உரியதென்று சொல்வானேன்?

7. அங்ஙனம் கேட்கப்படும் சுருதிகளால் பிரதிமாரூபமன்றேவிக்கிரகமெனப்படும்?

8. சுருதிவிசாரஞ்சாமான்யமென்றால்வேதாந்திகள் சம்மதிப்பார்களா?

என்பனவாதிய ஐயவினுக்கள் கிளம்புவது திண்ணமாம். ஆகவே அவ்வினுக்களுக்குத் தக்கசமாதானங்களளித்து எடுத்துக்கொண்ட விஷயத்தைச் சரசப்படுத்தவேண்டியதென்னுடையகடமையேயாயிற்று. ஆதலின்அதன்மேற்போகின்றேன்.

## 1-வது வினு கடவுள் எப்படிப்பட்டவர்?

விடை-அவர் அளவிடப்படாதவர். அது அவரது பெயர்ப்பொருள் விசாரத்தானே நன்குபோதரும். அதனை விசாரிப்பாம். கடவுள்என்றபதம், கடத்தல் என்னுந்தொழிற் பெயரினின்று வந்ததாம். ஆகவே தொழிற்பெயரே கர்த்தாவுக்குத் தொழிலாகு பெயராயிற்றென்னலாம். ஆதலின் கடத்தலென்னுந்தொழிற் பெயரடியாகப்பிறந்த (கட)என்னும்பகுதியாய

து (உள்) என்னுந்தொழிற் பெயர் விகுதிபெற்றுச்சடவுள் என்றாயிற்றென்பார் பெரியோர். அந்த உண்மை செய்தலென்னுந் தொழிற் பெயரினடியாப்பிறந்த செய் என்னும் பகுதியாயது. உள் என்னும் தொழிற்பெயர் விகுதிபெற்றுச் "செய்யுள்" என்றாயவாறு போலவாம். ஆகவே, கடவுளானவர் மனத்தால் இத்தன்மையரென நினைத்தற்கும், வாக்காலின்னரெனவுரைத்தற்கும், காயத்தாலடுத்துப்பற்றற்கும், இயையாதவண்ணம் அதீதராய் நிற்பவராகின்றார். அவ்வுண்மையை வலியுறுத்துவானே, எமது தாயுமானாரும்,

"புகலக்கருதவெட்டிடாநிறைபொருளளவையார்சாண்பார்"

எனத்திருவாய்மலர்ந்தருளினர். ஆனபடியால் மனம் (மானதக்காட்சியளவைக்கும்), வாக்கு (வேதாதிகளாகியவுரையளவைக்கும்), காயம் (நேர்பார்வைக்கும்) ஆகிய மூன்றனுக்கும் அப்பாற்பட்டவராயிருக்கிற அவரை (கடவுளை) அளவிடப்படாதவரென்று தானே அறிஞர் கூறுவர்.

உண்மையங்ஙனமாகவும், சடவுள் என்றபதத்தை சடம்-உள் எனப்பிரித்து, சடத்தினுள்ளால் நிற்கும்பொருளே கடவுள் எனப்படுவரென்று சிலர்பேசிக்கொள்ளுகின்றனர். அதனை, ச்சேர்தூக்குமிடத்து, சைவபுராணம் வித்தியேசுரசங்கிதையில்

"அநாத்ம நப்பரோ சர்வே சீவாஏவம்நசம்சய:"

அதாவது தேகாதிக்கு மேலுள்ளனவெல்லாம் சிவர்களே சந்தேகிக்கவேண்டாம். என்று கேட்கப்படுகிற சத்போதத்தோடு அது முரணுறுகின்றது. ஆதலால் அவர்கூற்றுத்துச் சமேயாயிற்று. மேலும் பசுபதி என்னப்பட்ட நிமலராகிய அவர் (கடவுள்) கடத்தினுட்பந்திக்கப்பட்ட பொருளாயினரெ ன்பதுஉலகம்பரிகசிக்கத்தக்கதுமொன்றும். அவ்வியற்கையை யுணராதே ஆங்ஙேராட்சியினின்றும் வழீஇயினரை மேலோர் (கடத்துட்படுவது சிவப்பிரமமாகாத சிவப்பிரமமேயாமென் னுமுண்மையுணர்ந்தோர்) என்ன சொல்லுவரோ அதெம் பொறுப்பன்று. அதிருக்கட்டும். வாஸ்தவத்தில் யாதொருக ளங்கரகிதராய் விளங்குகின்ற பரம்பொருளெதுவோ அதுவே தம்மால்வெளிப்படுத்தப்பட்ட ஆன்மதத்துவ, மிருபத்துநான் கும் பிரகிருதியிலொடுங்கவும், புருடதத்துவமுதலியன விந்து விலொடுங்கவும், சத்திசிவங்களின் கூறாகிய அபரவிந்து, அபர நாதங்கள் சுத்தமாயையிலொடுங்கவும், இவை யெல்லாங்கட ந்து நின்றகோரதீதவஸ்துவாம். அந்த வஸ்துவே சர்வமுங்கட ந்து நிற்குமோர்காரணத்தாற் கடவுள் என்றாயிற்று. ஆதலின், சுத்தசிவமாகிய முழுமுதற்பொருளை (கடவுளை) 'அளவிடப்ப டாதவரென்றும்.

இனி 2-வது வினு-கடவுள்எவ்விடத்திலிருக்கிறார்?

விடை—அவர் எங்கும்எவற்றினுமிருக்கிறார். அந்த உண்மையை சர்வவியாபகர் (பரிபூரணர்) என்கிற அவருடைய திருநாமமேவலியுறுத்திற்று. அங்ஙனம் நிறைவுற்றிருப்பதும், முன்னரளவிடப்படாதவரென்றறிவுறுத்தவுண்மையுடன் விரோதமில்லாத நிலைமையில் (சாமானியரறியொணாதவிதத்தில்) மறைவாயே நிறைவுற்றிருக்கிறார். இங்கே மறைவுற்றிருக்கிறாரென்பதற்கு சுவர்முதலியவைகளான் மறைபட்டஸ்தலம்போன்றதோரிடத்தில் அல்லது தூரதேயத்தில், இருக்கிறாரென்று பொருள் கொள்ளப்படாது. அதுபோலவே நிறைவுற்றிருக்கிறாரென்பதற்குக் குடத்தினுள்ளால் ஜலம் நிறைவுற்றிருந்தவாறு ஒன்றனுள் அல்லதுபலவினுள் மாத்திரம்நிறைவுற்றிருக்கிறார் என்றுகருதுவதும் தவறாம். பின்னை? எப்படியென்றால் அங்குமிங்குமெங்கும் எவற்றினும் நிறைவுற்றிருத்தலால் அவர் அண்டசாசரங்களினுண் மறைவாகியெவற்றும் நிறைவாகியிருக்கிறாரென்றுணர்க. ஆதலின் அவர் (கடவுள்) எங்குமெவற்றினுமிருக்கிறாரென்ற பெரியோர் பக்ஷமே எமது பக்ஷமாக் கொண்டாம். இனி,

3வதுவினா-ஏனையோர்ஏன் அவரையொப்புக்கொள்கின்றிலர்?

விடை-அளவிடப்படாதவராயும், சர்வவியாபகராயுமுள்ள கடவுளை அறிந்துகொள்ளும் வழியைக் கண்டுபிடித்து, அந்தவழியைப்பின்பற்றியொழுகி அறிந்துகொள்ளும் வலியின்மை

யாலும் அவராயினும் (கடவுளாயினும்) அபக்குவிகளாகியவனே யோருக்கு (அந்நியருக்கு) வலிதே வெளிப்பட்டுத் தாமுண்மையை அறிவுறுத்தாமையினாலும், எனையோர் (நாஸ்திகர்) தாம் காணப்பெறாத கடவுளுண்மையை அங்கீகரிக்கின்றிலரென்றறிக.

அன்னோர் கொள்கையை ஆராயுமிடத்து, கண்டுகொள்ளாத ஒருபொருளை உண்டுமென்றதை அவர்களை மெய்யர்களென்று தானே சொல்லவேண்டும். அங்ஙனஞ் சத்தியமே பேசுகிற அவர்களிடத்தில் என்றைக்கும் நமக்கு யாதொரு விரோதமுமில்லை. ஆயினும், அவர்கள் (உலோகாயதன்மார்) ஆன்மலாபத்தை இழந்துபோகின்றார்களே என்ற பரிதாபமாத்திரம் நம்மிடத்திலுண்மையேயாம். அதுகொண்டு ஆவதொன்றுமில்லையாதலின் அன்னோரை (நிரீச்சுரவாதிகளை) நம்மவர் அதிகமாக நேசிக்கவொட்டார்கள். அந்தஉண்மையை விசாரிக்குங்கால் சாவகாசதோஷத்தால் தொத்துவியாதிபோன்று அவர்களுடையவாதமானது நம்மவரையும் பற்றிக்கொள்ளுமென்ற பயமொன்றேயல்லாமல் வேறொன்றுமில்லை. நேசிக்கவொட்டார்களென்றால் ஆன்மார்த்த விஷயத்தில் அவர்களுபதேசங் கட்டுச் செவிசாய்க்க வொட்டார்களென்பதேயாம். அந்தக்கட்டாயமும், சவலைப்புத்தியுடையவர்களைக் குறித்துமாத்திரமுண்டாயதாதலின் என்போலிகட்கன்றும். இதனாலே நாஸ்திகரையும் நல்லவராக்கிவிடும் ஆஸ்திகப்போலிகளை நே

சித்தாலுங்கூட என்போலிகள் கெட்டுப்போகமாட்டார்களெ ன்பதும்குசிப்பிக்கப்பட்டது. இங்கே, ஏனையோர் கடவுளுண் மையையொப்புக்கொள்ளாததற்குக் காரணமும், அவரன்னியரா கக்கருதப்படுவதனுண் மையும், அவரிடத்தில் நமக்கு விரோ தமில்லையென்பதும், நிச்சயப்படுத்திவிட்டாம். இனி,

4-வது வினா ஒரு பொருளையறிதற்கு ஆலயசேவையு ம், சுருதிவிசாரமும் ஆவசியகந்தானா?

விடை—ஒருபொருள் விஷயத்தில், அதினும் கடவுள்விஷ யத்தில் அங்ஙனமில்லையெனின் அறியமுடியாதானபடியா ல் ஆலயசேவையும், சுருதிவிசாரமும் கடவுளை யறிதற்கு ஆவசி யகமேயாம். அந்தவுண்மைமனுடரியற்கை விவேசனத்தாலன் றிப் புலப்படமாட்டாது. ஆதலின் தலைவனைக்கிரகித்தற்கு (அறிந்துகொள்ளுதற்கு) அருகாயிருக்கிற மனிதரியற்கையை, ஈண்டுச்சிறிதெடுத்துப்பேசுவாம்.

மனிதர் அசுத்தரென்றும், சுத்தரென்றுமிருதிறப்படுவர். அவ்விருதிறத்தருள் மனம் போன போக்கிலே சென்று ஹிதத் தை நாடி நிற்கிற மனிதரே அசுத்தராயினர். ஆகவே மனம் போனபோக்கிற் றும்போகாமல், மனதைத் தம்வசத்திலாக்கி க்கோடலால் புண்ணியபாவங்க ளற்றுப்புநிதரெனப்படுவோ

ர் தாம் சுத்தராகின்றனர், இவ்விருதிறத்தரும், பிரமசிருஷ்டியிலேயே வேறுவேறாகப்படைக்கப்பட்ட வருமல்லர். பின்னை? தாயுமானுர்

"சித்திநெறி கேட்டல் சேதமய்க்கஞ்சன்மமற
முத்திநெறிகேட்டல் மூறைநர்ண்பராபரமே?

என்றபடி உலகவாழ்வினிச்சைமேலிட்டு சித்திநெறிகேட்டு நிற்றலான் அவரது கன்மங்காரணமாகப் பிறப்பிறப்புக்களிற் பட்டுழலுவோரையே அசுத்தரென்றும், அங்ஙனமுண்டாம் பிறப்புக்களான்வரும் துன்பத்திற்கு அச்சுற்று சகமயக்கத்தினீங்குவான் முத்திநெறிகேட்டற்கு வந்தோரையே சுத்தரென்றும் கேட்கப்படுதலான் மனிதர் தாமே மனிதராயும் புனிதராயும் இருக்கின்ருரெனவறிக.

அவ்விருவருள், இறைவனருள்வழி, விடயமறைப்பு நீங்கப்பெற்று அழிதலையே சகசமாகவுடைய உலகப்பொருள்களை (சடபதார்த்தங்களை) மாத்திரமே காணுகின்ற மனிதர்கட்கு, சத்தாயுள்ள சித்துப்பொருளாங்கன்னையுந் தலைவனையும் அறிய ஒட்டாதுள்ள சொரூப மறைப்பொன்றனுண்மையும் பிரத்தியட்சமாதலால் அது காரணமாகவே மனிதர் அசுத்தரெனப்பட்டார். ஆதலான், அத்தகைய சொரூபமறைப்புமீங்கப்பெற்றுத்தன்னையுந் தலைவனையும் அறிந்துகொண்டவரைத்தாம் சுத்

தரென்பார் பெரியோர். அத்தகை சுத்தாத நிலையோ!

"அத்துவிதமான வயிக்கியவநுபவமே
சுத்தநிலையந் நிலையார் சொல்வார் பராபரமே".

என்றபடி சொல்லமுடியாததாயிற்று. ஆதலின், சொல லமுடியாத அந்தமேனிலை கைவந்த புனிதாரது முந்திய நிலை யாயும் மனிதரிடத்தியாண்டுங் காணப்படுவதாயுமுள்ள நிலை யே மனிதரியற்கையாம். அது (மனிதரியற்கை) அறிவிக்கஅறி யுமுண்மையொன்றேயாமென்பது சுருதி யுக்தி அநுபவம் மூன்றனாலும் நிச்சயிக்கப்பட்ட அறிஞர் கொள்கையாம். அந்த வுண்மைக்கு,

## சுருதி

"அறியாமை சாரி னதுவாயறிவாம்
நெறியான போததுவாய் நிற்கும்-குறியாற்
சதசத்தருளுணர்த்தத் தானுணரா நின்ற
விதமுற்றறிவெனும் பேர் மெய்."

"அறியாமை மேலிட்டறிவின்றி நிற்குங்
குறியேற் கறிவென்றகோலம்--வறிதேயா

நீயுணர்த்த நானுணரும் நேசத்தாலோவறிவென்
றேயெனக்கோர் நாமமிட்டதே."

என்பனவாம் தாயுமானார் திருவாக்குகளே போதியவாறுத்
திக. மேல் விரிவஞ்சிவிடுத்தாம். இனியுக்தியை நோக்குங்கால்,

யுக்தி—இப்போதுவிடய மறைப்பினின்றும் (உலகப்பொருளையுமுணராது கிடந்த உணராமையினின்றும்) நீங்கியிருக்கின்றோமே? அது போலஒவ்வொரு சரீரத்தினுமுள்ள அறிவைப்பிரகாசிப்பிப்பான் அருள்கனிந்தோங்கும் பசுபதியையும், அறிகின்ற தன்னையும் உணராதுகிடக்கின்ற சொரூபமறைப்பினின்றும் நாம் நீங்கப்பெறவில்லையன்றோ? அந்தச்சொரூபமறைப்பை இப்போது நீக்கிக்கொள்ள நம்மான்முடியுமோவானல்திருவருளுண்மையை நாம்ஒப்புக்கொள்ளவேண்டியதவசரமேயில்லை. அங்ஙனமாக்கிக்கொள்ள அசக்தராகிய நாம் திருவருளை மறந்தோமானல் கடைத்தேறமாட்டோமென்பதும் நமக்கு நிச்சயமேயாயிற்று. ஆயினும் மனுடப்பிரயத்தனத்தாலுமது கூடுமென்பார் சிலருண்டாயிருக்கலாம். அவர்கூற்று

அருளாலெவையும்பா ரென்றான்-அத்தை
யறியாதேயென் றனறிவாலே பார்த்தேன்
இருளானபொருள்கண்டதல்லால்-கண்ட
என்னையுங்கண்டிலனென்னேடி தோழி.

என்ற அநுபவஞானிகளின்சம்மதத்தோடொத்திட்டில்லை யாதலின் அது சர்வ ஜனசம்மதமன்றாம். அப்படியானால் புருடப்பிரயத்தனமென்றது சாஸ்திரங்களிற்கேட்கப்படுவானேன்? எனின் அது அருள்வழிச்செல்லும் புருஷப்பிரயத்தனமேயாமென்க. அருளையன்றி ஆன்மவறிவேதலையெடுக்கிலை யாதலின், சுதந்தரமான புருடப்பிரயத்தனமுமுண்டென்பார்கூற்றுஅஸ்திரமாதலறிக. நமக்குண்டாயிருக்கிற விஷயஞானம் எந்த சரீரத்தினின்றுந்தலை நீட்டுகின்றதோ, அந்த சரீரத்திலுள்ளபோதுதானே சொரூபஞானம் நம்மிடத்திலில்லை என்பதும், நமக்குத்தோன்றுகிறது. அந்தச்சரீரந்தந்தவனெவனோ அவனே இந்தவுலகத்தையும் நமக்கு அறிவிப்போனாகின்றான். அவன் எதனாற்றந்தானோ அந்தப்பெருங்கருணையினாலேயே ஒவ்வொரு அறிவாளியுந்தன்னையும் தலைவனையுமுண்மையாக் கருதுகின்றான். அவன் எதற்காகக்கொடுத்தானோ அந்தநித்தியஞானானந்தனுபவத்தையனுக்கிரகிக்கப்பெறுவானுள்ள முன்னேற்றமும் நம்மிடத்திலேயே காணப்படுகிறது. அந்தவுண்மை யான் முழுவதும் அசக்தராகிய எல்லாமனிதரும் தலைவன் திருவருளாலேயே அறிவாளிகளாக்காணப்படுகின்றனர்.

ஆதலான் மனிதரனைவரும் அறிவிக்க அறிவோரேயாயிருக்கின்றனரென்பதே யுக்தமாம். யுக்தியிவ்வாறாகவும், அநுபவத்தை யாராயுங்கால் தள்ளையின் கருப்பத்தினின்றும் வெளி

ப்பட்ட பிள்ளையானவன் சிலநாளிற்றள்ளையின் முகம்பார்க்கத் தொடங்குகின்றான். அது அடிக்கடி பிள்ளையின் முகத்தையுற் றுற்றுப்பார்க்கிற தள்ளையின் பார்வையினின்று முண்டாய தோர் பழக்கமாம். அப்போது அன்னைக்கு ஒருமகிழ்ச்சியுண்டா கி அடே! கண்மணீ, முகம்பார்க்கின்றாயா? என்னப்பனே. என்னடா பார்க்கிறாய்? எடா! துரையே! சுவாமி உன்கண் ணைத்திறந்து விட்டாரா? என்பனவாதியவிடைவேண்டா விளுக்களுடன் பிள்ளையின் முகத்தைப்பார்த்துப்பார்த்துக்களி க்கின்றனள். அது கண்டபிள்ளையுங்களிக்கத்தொடங்குகின் றான். கண்டுகளிக்கும் பிள்ளையின் முகத்தைக்கண்டு களிக்கின் ற அன்னையானவள் பிள்ளைபாற்பழக்கம் பேசுகிறாப்போலத் தன்னிற்றானே பலவும் பேசிக்கொஞ்சி மகிழ்கின்றனள். அது கண்டு பிள்ளையும் அன்னையிடத்திற்பேசத்தொடங்குகின்றான். அப்போது அவனுக்குப் பேசும்படியான சக்தியுண்டாயிட்டில் லையாயினும், மாதா வினங்காத்தலி (வாய்திறத்தலி) னின்றே பேச்சுண்டாகிறதென்றுமாத்திரம் தெரிந்துகொள்கின்றான். அப்பால் தானுமங்காத்தற்கு முயலுகின்றான். அந்த முயற்சி யினின்றும் அங்காத்தலுண்டாய் விடுகின்றது. அவ்வங்காத்த லால். அ-அ. என்னும் அகரோச்சாரணங்கேட்கப்படுகிறது அது சமையத்தில் அன்னையும் பயிற்றுதலால் வாய்திறத்தலு டன் மூடுதற்பழக்கமும் வந்து விடுகிறது. அதுவரவே அம் என்னுஞ் சப்தந்தோன்றுகிறது. அது முதிர்ந்தவெல்லையில்

வாய்திறந்து மூடினவுடன் திறக்கவும் பழகுகின்றான். அங்ஙனம் வாயைத்திறந்து, மூடி, திறக்கும்பழக்கமுண்டாயபோதுதான் "அம்ம" என்றவாக்கு சரியாய்வெளிப்படுகிறது. அந்த வாக்கின் பொருளே தாயென்று தெரிந்துகொள்கின்றான். அதன்பிறகு தாயுடன் தன்னிடத்துப்பேரருள்கனிந்துநிற்கும் அப்பனையும் அம்மையே அறிவிக்க அறிகின்றான். அப்போது அம்ம என்ற வாக்கைத்தானே அம்மை தனது வல்லவனாகிய நாயகனை மகவுக்கு அறிவிப்பாளாகி வலித்துச்சரிக்கப் பயிற்றுகின்றாள். அப்பயிற்சியிலிருந்து "அப்ப" என்ற சப்தமுண்டாய்விடுகிறது. அவ்வப்பவென்றபதப்பொருளாந்தந்தையையும் நன்று தெரிந்துகொள்கின்றான். அதுபோலவே அகரத்தை முதலாகவுடைய அக்காள், அத்தான், அண்ணி, அண்ணன், அத்தை, அம்மான், ஆத்தன், ஆத்தாள், (ஆச்சி) முதலியோரையுங் காண்பித்துப்படிப்பிக்கின்றனர். அங்ஙனம் படிப்பிக்கின்றவர் ஈண்டுக்கூறப்பட்டசொந்த ஜனங்களே யாவார். ஆதலின் இவரனைவரும் தாய்தந்தையரென்றே யுபசரிக்கப்படுகின்றனர். இவரயலாராற்பிள்ளையைத் தீண்டவும் சம்மதிக்கின்றிலர்-தீண்டினுற் சீர்தட்டிவிடுமாம்-அது மட்டுமா! பார்க்கவுங்கூட இடங்கொடுக்கின்றிலர் பார்த்தாற் கண்ணேறுபடுமாம்-வெளியேயுங்கொண்டு வரமாட்டார். வெளிக்கொணர்ந்தாற் பக்ஷிதோஷமுண்டாய்விடுமாம். இத்தகையதோஷங்கட்கு ஆளாக்காமல் ஒருவர்மாற்றி ஒருவர் சுமந்துகொண்டுவீட்டினுள் வைத்தே ஒரு வருஷம் வரைவளர்க்கின்றார்கள், அந்த

வருஷக்கடைசியில் ஜன்ம நக்ஷத்திரதினத்தன்று கோயிலுக்கு எடுத்துக்கொண்டு போய்ச்சுவாமியைத்தரிசிப்பித்து ஈசுரார யோச்சாரணங்களைப்படிப்பிப்பர். இனிமேல் நடமாடித்திரி யும் பழக்கமுண்டாய் விடுதலானே ஓடித்திரிந்து எல்லா விஷ யங்களையும்அவன்படிப்படியாகவே யறிந்துகொள்ளுகின்முன். அத்தகையமைந்தனின் எல்லாப்பயிற்சிகளும் பெற்ருேராலும், பெரியோராலும், உபாத்தியாயராலும் சகபாடிகளாலும் மற் றும் பிறராலுமே அவனுக்கு உண்டாயதென்பார் பெரியோ ர்இது நம்மனோரநுபவத்திலுள்ளதாம். ஆகையால் ஒவ்வொரு மனிதனும், தான் தெரிந்துகொண்ட எல்லா விஷயங்களும் அறிவிக்க அறிந்துகொண்டதாகவே ஒப்புக்கொள்ளக்கடமை ப்பட்டிருக்கிருன். அங்ஙனம் சம்மதிப்போனேமெய்யனுதலி றிக. இங்ஙனம் சுருதி, யுக்தி, அநுபவங்களாலேயும், மனித ரனைவரும் அறிவிக்க அறியும் இயற்கையுளாரென்றே போதர ல் கண்டாம்.

ஆதலின், கடவுளுண்மையைச் சம்மதிக்கிற ஆஸ்திகத்தலை வன்மாரனைவருக்கும் எவராவது ஒருவர் பிரதமையில் அறிவி த்தன்றி ஆஸ்திகஞானமுண்டாக ஏதுவில்லை. அங்ஙனம் அறி வித்தற்கர்த்தாவுங்கடவுளையன்றிவேறொருவருண்டாயிருந்ததா கவுஞ் சொல்லுவாரிலர். ஆனபடியால் கடவுளுண்மையை அறி வித்தற்கு அவரே கர்த்தாவாயிருந்தனர் என்பதும் நிச்சயமாம். அந்தவுண்மை,

"மைப்படிந்த கண்ணாளும் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையான் மாசொன்றில்லான்
ஒப்புடையனல்லன் ஒருவன் அல்லன்
ஓரூரன் அல்லன் உவமன் இல்லி
அப்படியன் அவ்வுருவன் அவ்வண்ணத்தன்
அவனருளே கண்ணாகக் காண்பதல்லால்
இப்படியன் இவ்வுருவன் இவ்வண்ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக்காட்டொண்ணாதே.

என்ற சுருதி போதத்தால் இனிது விளங்கும்.

எல்லாம் வல்ல இறைவர் தாமே தமதுண்மையை வெளிப்படுத்தும் அறிஞரைத்தடுத்தாட்கொள்ளுவான்கொண்ட அனுக்கிரகத்திருமேனியின் பிரதிமாரூபமே ஆலயங்களிற் காணப்படுவதாம். அத்திருமேனியின் வர்ணனைகளும், அத்திருமேனிகொண்டருளிய இறைவன் அருட்டிரு விளையாடற் சரித்திரங்களுமே வேதங்களிற் பிரதிபாதிக்கப்படுகின்றன. அவ்வேதத்திற் பிரஸ்தாபிக்கப்பட்ட சரித்திரங்களுண்மையை ஆலயத்தில் நடக்கிற நித்தியநைமித்தியமகோற்சவங்களிலேயும் ஸ்பஸ்ட்டமாக்காணலாம். ஆகவே, கடவுளினது நாமரூபக்கிரியைகளைச் செவிப்புலன் வழி அறிவுறுத்துகிற வேதங்களும், கட்புலன் வழி யறிவுறுத்துகிற ஆலயங்களும், கடவுளுண்மை

மை யறிவுறுத்தற்கருவியாதல் மறுக்கமுடியாத வுண்மையே யாயிற்று. அந்தவுண்மையைத்தற்காலம் வித்தியார்த்திகளுக்கு உபாத்தியாயன்மார்கற்பிக்கும் புஸ்த்தகங்களில் படமும் சரித்திரங்களுமாய் அமைக்கப்பட்டிருத்தலைக்கொண்டுந் தெரிந்து கொள்ளலாம். இருந்தாலும், வஸ்து உண்மையை அறிவுறுத்தற்கு பிரதிமாரூபமே சிறந்த கருவியென்பார் பெரியோர். அதனை,

"Drawing is the only language without words. சித்திரத்தொழிலொன்றே வார்த்தைகளில்லாதபாஷை."

"Drawing is the only language which can express all things. சித்திரத்தொழிலொன்றேஎல்லாப்பொருள்களையும் விளங்கக்காட்டக்கூடிய பாஷை."

என்ற உணர்ச்சியின் மிக்கமேல்நாட்டாரும் சம்மதிக்கின்றனர். இந்தமட்டில் இரண்டும் ஆவசியகமே என்பது வலியுறுத்தப்பட்டது, இனி,

5-வினா—அப்படியானல் பெரியோர் ஏன் விக்கிரகாராதனத்தை மறுத்திருக்கிறார்கள்?

விடை— அறிவிற் பெரியோர் ஒருவரென்கிலும் அங்ஙனம் மறுத்திருப்பதாக யாண்டும் காண்கின்றிலம். அப்படியிரு

க்கவும்.

"குருவினிடத்துபதேசங்கேளாதானூண் கோழி பன்றி நாய் வயிறு வளர்த்தலொக்கும், மருவியவன்றிருக்கோயில் தொழச்சென்றாலுமாபாவியென்று தெய்வமறைந்துகொள்ளும், உருகியவன் சிவநூல்களோதலாசா தோதுகினுமவனுரை யைக்கேட்கின்றோர்கள், வருபிறப்பில் வேடனுமவன் பின்னே சுவானங்களாயலைவர் மாவதைக்கே,?

என்ற வாக்கியத்திற்கேட்கப்படுகிறபடி சற்குருவினனுக்கிரகத்தைப்பெற்றுக்கொள்ளாததாற் கொடியகொலைத்தொழிலையே சீவனமாக்கொள்ளுகிற வேடர் பதவியைப்பெறத்தக்க தான் தோன்றிப்பண்டிதன்மார் சிலரும், அவருரைக்குச்செவிகொடுத்தலால் அவருகோர் சகாயபூதாரயெழுஞ் சுவானபதவியைப்பெறுதற்குயோக்கியராகிய சிஷியன்மாரும், ஆன்றோர் வாக்கியங்களில் ஒன்றிரண்டைமனப்பாடம் பண்ணிவைத்துக்கொண்டு பெரியோர் விக்கிரகாராதனத்தை மறுத்திருக்கின்றனரென்று பேசித்திரிகின்றனர்.

அவர் பொருட்டு விடையிறுக்கவேண்டிய தாவசியகமேயாயினும், அன்னோர் அபத்தபோதனைக்குட்பட்டொழியாதபடி ஐதீகன்மார்பொருட்டென்கிலும் உண்மையையறிவுறுத்தவேண்டிய தாவசியகமேயாயிற்று. ஆதலாற் கூறுதும்:

விக்கிரகாராதனத்தைப் பெரியோர் மறுத்திருக்கின்றன

ரென்னும் "பேதமையிற் பேதமையில்" என்பதே எமதுவிடையாம். அந்த உண்மைக்குத்தான்றோன்றிகள் பாடம் பண்ணிக்கொள்ளுகிற ஒன்றிரண்டு செய்யுள்களை மாத்திரம் ஈண்டு விவரித்து அச்செய்யுள்களில் அவர்கருத்துக்காணப்படாமல் விக்கிரகாராதனஸ்தாபகமே உள்ளமையைக்காட்டுகின்றோம்.

## பட்டினத்தார்.

"சொல்லினுஞ் சொல்லின் முடிவினுவேதச்சுருதியினு
மல்லினுமாசற்றவாகாயந் தன்னினுமாய்ந்து விட்டோ
ரில்லினுமன்பரிடத்தினு மீசனிருப்பதல்லாற் (லே"
கல்லினுஞ் செம்பினுமோவிருப்பா னெங்கள்கண்ணுத

(இதன் பொருள்) எங்கள் கண்ணுதல்-எமது பரமேசுவரர், சொல்லினும் (எவராலும் புகழப்படுஞ்சிவத்) துதியிலும்? சொல்லின் முடிவிலும்=வாக்கினதீதத்திலும், வேதச் சுருதியினும்-ஆரணங்களிலே பிரதிபாதிக்கப்படுகிற (சப்தகோடி மகா) மந்திரங்களிலும், அல்லினும்=சிவநிசியிலும், ஆசற்றஆகாயந்தன்னிலும், = இலக்கற்றபரவெளியிலும், ஆய்ந்துவிட்டோரில்லினும்=(சிதசித்துக்களினுண்மை) உணர்ந்துமுற்றத்துறந்தமுனிவருளத்திலும், அன்பரிடத்திலும் = (தமது உடல், பொருள், ஆவிகள் மூன்றனையும் ஆசிரியன்வழி யிறைவ

னுக்கு ஒப்புக்கொடுத்து அவைகளைப்பேணிக்கொண்டு திருவருள்வழிப்பட்டு நிற்கும்) மகேசுரத் திருமேனிகளிடத்திலும்? இருப்பதல்லால்=விளக்கமுறுவதல்லாமல், கல்லினுஞ்செம்பினுமோ!—சிலைதாமிரங்களிலேயுமோ!, இருப்பான்=எழுந்தருளியிருப்பர் (என்றவாறு)

இதுகொண்டு இறைவன் ஆன்மகோடிகட்கருள்செய்யும் பொருட்டு மேலே சொல்லிய தானங்களில் விளக்கமுற்றிருப்பதுமல்லாமல் அசௌரவஸ்தானங்களாய பிரதிமாரூபங்களிலேயுமா! எழுந்தருளியிருப்பனென்று வியந்து கூறியதாமென்பர் பெரியோர். ஈண்டுப்பொருள்கோடலே இறைவன்பெருங்கருணையை வலியுறுத்திற்றென்னலாம்.

இவ்வுண்மையை அறியாதே, அதிசயக்குறிப்புப்பொருடந்து நிற்கும் ஓகாரத்திற்கு எதிர்மறைப்பொருள்கொண்டு இறைவன் கல்லினுஞ் செம்பினுமிருக்கமாட்டானென்று, தான்தோன்றிகள் கூறுகின்றனர். இறைவனில்லாவிடத்தையுங் கண்டு பிடித்துக்கொண்ட அவர்கூற்றிற்குச் செவிகொடுப்போரும் அவரைப்போலவே இறைவனுக்கு அபரிபூரணத்துவங்கற்பிப்போராய் விடுகின்றனர். அது நம்மவர்க்கு உடன்பாடாதவில்லை. ஆதலின் இறைவனுக்குச்சர்வவியாபகத்துவமுண்மையைச் சம்மதித்திருக்கிற நம்மவர்க்கே இதோபதேசஞ் செய்யு

ஞ்சிவாநுபூதிப்பெருஞ் செல்வராகியபட்டினத்து அடிகள் அங்ஙனம் கூறினரென்று கொள்ளற்க. அந்தவுண்மைக்கு,

"நல்லாயெனக்குமனுவொன்றுதந்தருள் ஞானமில்லாப்
பொல்லாவெனைக்கொன்று போடும்பொழுதியல் பூசைசெபஞ்
சொல்லார் நற்கோயினியமம்பலவகைத்தோத்திரமு
மெல்லா முடிந்தபின் கொல்லுகண்டாய் கச்சியேகம்பனே"

"சொக்கிட்டரண்மனைபுக் குட்டிருடியதுட்டர் வந்து
திக்குற்றமன்னரைக் கேட்பதுபோற் சிவநிந்தைசெய்து
மிக்குக்குருலிங்க சங்கமம் நிந்தித்து வீடிச்சிக்கு
மெக்குப்பெருத்தவர்க்கென்சொல்லுவேன்கச்சியே கம்பனே".

என்பனவாதிய அவரது திருவாக்குகளே போதிய சான்றாயிருத்தலறிக. அப்பாலும்:

"நட்ட கல்லைத் தெய்வமென்று நாலுபுட்பஞ்சாத்தியே
சுட்டி வந்து முணுமுணென்று சொல்லுமந்திரமேதடா
நட்ட கல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டு வங்கறிச்சுவையறியுமோ"

என்றதோர்கவியும், ஆசானநுக்கிரகம் பெறுததான்தோன்றிகட்குப்பாடமுண்டு. இதன்கண்ணுமவர்மயங்கிக்கிடக்கின்றனரென்பது வருமாறு:

(இதன்பொருள்)(அடா! =ஆலயவழிபாட்டினுண்மையை அறியாதுமயங்குகின்ற)பயலே, சுட்டசட்டி=(பதார்த்தங்களைவேகச்செய்தற்கருவியாயிருந்து) வேகவைத்த சட்டியும், சட்டுவம்=(கிண்டிப்பக்குவப்படுத்தற்கருவியாயிருந்த) அகப்பையும், கறி=(அறுசுவையொடுகூடிய)கறியினது, சுவை=மதுரத்தை? அறியுமோ? அறியமாட்டாது. (ஆதலின், எவர் பொருட்டுக்கறியாக்கப்பட்டதோ அவரே அதாவது கறியை உண்ணுகிறவரே கறியினது சுவையையறிவர் என்பது தாற்பரியம். அதுபோலவே, எவர்பொருட்டு ஈசுவரத்தியான மாத்திரைக்காகப் பிரதிமாரூபம் பிரதிஸ்டிக்கப்பட்டிருக்கிறதோ அவருடைய) உள்=இருதயத்திலே, நாதன்=ஈசுவரன் இருக்கையில்=இருக்கிறதினாலே, நட்டகல்லும்=பிரதிஸ்டிக்கப்பட்ட சிலாரூபமும், பேசுமோ? பேசமாட்டாது. (ஆதலின், ஆலயசேவைசெய்யும் பேரன்பினரே ஈசுவரனுடைய மகிமாதிசயங்களையறிந்து பேசுவரென்பது தாற்பரியம்: பின்னை வழிபாடுதானென்னை? எனில் ஆலயங்களிலே, நட்டகல்லை=பிரதிஸ்டிக்கப்பட்ட சிலாரூபத்தை தெய்வமென்று=கடவுளெனச்சொல்லி, நாலுபுட்பஞ்சாத்தி=தொங்குகின்றபூமாலையணிவித்து, சுட்டிவந்து=குறிக்கொண்டுவந்து, முணுமுணென்று=முணுமுணுப்பாக, சொல்லுமந்திரம்=உச்சரிக்குமந்திரம், ஏதுவடா=(ஈசுவரத்தியானம் நிலைபெறுதற்கோருபகரணமென்கிற) துணைக்காரணமடே (என்றவாறு) ஏ-அசை. ஓகாரங்கள்-எதிர்மறை.

இதனுண்மையை நோக்குங்கால், கறிசமைத்தற்கருவியாயுள்ள சட்டி சட்டுவங்கள் கறியினது உருசியை அறியமாட்டாதவாறுபோல, ஈசுவரத்தியான நிலைபேற்றிற்கோர் கருவியாகவுள்ள சிலைதாமிராதிகள் ஈசுவரனுடைய மகிமாதிசயங்களையறிந்து பேசமாட்டாது என்றும்; சமைக்கப்பட்ட கறியை சிகுவேந்திரியத்தின் வழியாக உட்கொண்டவரே அதன் சுவையையறிந்து பேசுதல்போல பிரதிமாரூபத்திற் காணப்படும் மான்மழு, அபயவரதம், சதுர்ப்புஜம், காளகண்டம், திரிநேத்திரம், சடாதாரம், கங்காதரம், சந்திரசேகரம், அரவாபரணம், எக்ஞோபவீதபஸ் மருத்திராட்சதாரணங்களோடு கூடியவராய், ஸ்ரீ பார்ப்பதிசமேதராய், அருட்டிருமேனி தரித்துக்கொண்ட சாக்ஷாத் பரமேசுவரரைநேத்திரேந்திரியத்தின் வழியாயுட்கொண்டவரே அவரது மகிமாதிசயங்களையறிந்து பேசுவர் என்றும், அறுசுவையொடுகூடிய கறிசமைக்கும் அடுக்களைத் தொழில்போலவே, ஈசுவரக்கிரகணத்தின் பொருட்டுச் செய்யப்படுவதுதான் ஆலயவழிபாடாமென்றும் புலப்படுதல் காண்டாம்.

ஆகவே சட்டியும் சட்டுவமுமில்லாதபோது கறியென்ற சத்தமே பிறவாது கறியாகாதபோது சுவையுண்டாதலுமில்லை சுவையுண்டாக்கியனுபவியாதவனைப்பொறுத்தே.

"மதுரை பாராதவன் கழுதை
கழுதைக்குத் தெரியுமோ கருப்பு ருசி"

என்பனவாதி யமுதமொழிகள் கேட்கப்படுகின்றன அதுபோலவே-பிரதிமாரூபமில்லாதபோது தெய்வக் காட்சியே யுண்மையாதலில்லை. அப்படியானால் அறிதல், தியானித்தல், சமாதித்தல், சாட்சாத்கரித்தல்களும், பொய்மையேயாய்ப் போகும். ஆதலால் பிரதிமாரூபமும், வழிபாடும், ஈசுவரக்கிரகணத்திற்கோர் உபகரணமென்கிற துணைக்காரணமட்டே என்றவுண்மைபற்றி வேண்டற்பாலதேயா மென்பார் பெரியோர்.

ஆனால்-கறிசமைத்தற் கருவியாயிருந்த சட்டியிற் பதார்த்தங்களுண்மையால், ஈசுவரக்கிரகணத்திற்கோர் கருவியாயுள்ளசிலைதாமிராதிகளி லுள்ளமையாது? எனின்:—ஈசுவரக்காட்சி வடிவமேயாமென்க.

இது-ஆலயவழிபாட்டைப் பரிகசித்து நிற்குமோரிதரனை வாதத்தில் மடக்கி அவனுக்கு நல்லறிவுச் சுடர்கொளுத்துமாறு அவன் பக்குவத்திற்கேற்ற வுபமான வுபமேயங்களோடு கூறிய ஒரு மகானுடைய அருள் வாக்கென்று கேட்கப்படுகிறது. சிலர் இதனை சிவவாக்கியர் திருவாக்கென்றுங் கூறுகின்றனர். அவரது திருவாக்குகளாக (ாக) பாடல்கள் மாத்திரங்காணப்படுகின்றன. அவற்றுளிக் கவி காணப்படாமையால் முந்தியகேள்விதானே நம்பத்தக்கதாம். அது நிற்க,

ஈண்டறிவுறுத்தப்பட்டபடி ஆன்றோர் திருவாக்குகளொ

ன்றுயினும், ஆலய வழிபாட்டை மறுக்கவில்லையென்பது அறிஞரனைவருக்கும் ஒப்ப முடிந்த துணிபாம். அந்தவுண்மை:—

"ஆலயந்தொழுவது சாலவும் நன்று"

"குருவிலிங்கசங்கமங்கள் கூத்தனுருவென்றே
மருவிதுவே நல்ல மருந்து"

"குருவிலிங்க சங்கமமாக் கொண்ட திருமேனி
கருவொன்றுமேனி நம்பாற்காட்டா-அருளென்று
கண்டவர்க்கே யானந்தங் கண்டுகொள்ளலாமலது
கொண்டவர்க்கிங்கென்ன கிடைக்கும்." (க்கோர்

"மூர்த்திதலந் தீர்த்தம் முறையாத் தொடங்கினர்
வார்த்தைசொலச்சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

"வன்றொண்டர் சம்பந்தர் வாகீசர் மற்றுமுளோர்
பொன்றரியஞானம் புகுந் திருக்கச்-சென்று
பதிதோறும் பாடிப்பணிகுவதென்மாட
மதிதோயருட்டுறையாய் வந்து"

"பெரியவிம்மானிட யாக்கைபெற்றவர்
சரியையுங் கிரியையுந் தான் செய்கின்றிலர்

சரியையுங் கிரியையுந் தான் செய்யாவிடில்
உரியயோகத்தினை யுணரலாகுமோ"

என்பனவாதிய பெரியாரருண்மொழிகளால் நன்குபோதரல் காண்க இனி:—

6-வது வினா:— சுருதிகளிலே விக்கிரகாராதனம் மூடருக்கு உரியதென்று சொல்வானேன்?

விடை— அது விரிந்த ஞானமுணர்த்துவான்றுணிந்த ஆசிரியன் அதிகாரிகளின் பக்குவம் நோக்கி சோபானக் கிரமத்திலுணர்த்துமா றுணர்த்துதனுதலிற்று, அதுகொண்டுவிக்கிரகாராதனத்தை இழித்து கூறுவதாகக் காண்பதறியாமையேயாம், அந்தவுண்மை.—

ஈசுரகீதை.

"கருத்திலாமூடர் காட்டமாதிகளிற் காண்பர்மற்றவர்களா (காயத்
தருக்களிற்புனலிற்காண்பராகுதியிலருச்சனைசெய்யுமந்தணரவ்
வெரிக்கணேகாண்பரெங்குமாய்நின்ற வெனதிலிங்கத்தினை (நேரே
யொருக்கிய பரமயோகிகளென்று மொழிவறக்காண்பர்த முளத்தே"

என்ற சுருதிபோதத்தால் விளங்கும்.

இக்கவியிற் பரமாசிரியராகிய பரமேசுவரரின் திருவாக்குகளையடங்கியிருக்கின்றமையால் இது-ஆசிரியவசன(வேத)மேயாயிற்று.

(இதன் பொருள்) எங்குமாய் நின்ற எனது லிங்கத்தின்=(மெய்ஞ்ஞானிகளுடைய காட்சியில்) எவ்விடங் (எப்பொருள்) களிலும் உண்மையாகி நிற்கிற எமது குறியி (அடையாளத்தி) னை. நேரே யொருக்கிய பரமயோகிகளென்று மொழிவறக்காண்பர் தம்முளத்தே=கிரமமாக (விஷயவாசனைகளைக்கிரகித்தலிலேயே பொழுதோட்டாதபடி) இந்திரியங்களை நிக்கிரகஞ்செய்துகொண்ட மேலான யோகீசுவரர்கள் (இடைவிடாது தியானித்து நிற்றலால்) தமதுள்ளத்தின் கண்ணே தானே யாண்டும் பிரிவின்றிக்கண்டுகொள்வார்கள். மற்றவர்களாகாயத்து அருக்கனிற் புனலிற்காண்பர் = மற்று அசை அவர்கள்=அவ்வாலயவழிபாடுடையவர்கள், (அவ்வழிபாட்டுடன் நித்திய கர்மாநுஷ்டானங்களாகிய காயத்திரி ஜெபமுங் கைக்கொண்டு நிற்கின் அவர்களாற் பிரார்த்திக்கப்படும்) சேட்பிரதேசத்திலுள்ள சூர்ய பிம்பத்திலும், வாருணகும்பத்தினும் கண்டு கொள்வார்கள், ஆகுதியிலருச்சனை செய்யுமந்தணரால் வெரிக்கணே காண்பர்=(அவ்விரண்டு வழிபாடுகளுடன்) அக்கினியில் வழிபாடியற்றும் அறவோர்கள் அந்த அக்கினியிற்றானுங்கண்டு கொள்வார்கள், (என்றவாறு) இதனாலே, இறைவனை,

கருத்திலாமூடர் காட்டமாதிகளில் காண்பர்—அகத்துட்கோடலெனப்படும் எண்ணம் அல்லது சிந்தனை செய்யாதஜனங்கள் தாருவாதிய விம்பங்களிலே தெரிசித்துக்கொள்வார்களெனப்போதரல்கண்டாம். ஆகவே,

(a) மெய்ஞ்ஞானிகள்—எவ்விடங் (எப்பொருள்) களிலும், நீக்கமிலாத பரிபூரணனாகவும்,

(b) யோகிகள்— கல்விகேள்விகளாலுண்மை யுணர்ச்சி கைவந்து புறத்தேயும் வழிபடுதலுடன் அகத்தேயும் இடைவிடாது தியானித்துக்கொண்டிருத்தலால் அம்மெய்யன்பரது இருதயகமலத்திலே அவர் நினைத்த ஸ்வரூபனாகவும்,

(c) கருத்திலா மூடர்கள்—அநிச்சயமாகிய விடயபதார்த்தங்களைக் கிரகித்தலன்றி ஈசுவரக்கிரகணத்தில் இணங்காத மனத்தோடுகூடிப் புறவழிபாட்டளவில்நிற்கும் பேதையர், தம்மால் வழிபடப்படும் பிரதிமாரூபங்களிலேயும், சூரிய விம்பம் வாருணகும்பங்களிலேயும், யாகாக்கினியிலேயும், அவரவர் காணப்பட்ட அந்தந்த ஸ்வரூபனாகவும், கண்டுகொள்வார்களென்பது வலியுறுத்தப்பட்டது. அந்தவுண்மை,

"உறைவாய் நன்மனத்தன்ப ருடல்தோறுமுயிராகி
நிறைவாயெவ்வுலகனைத்தும் நீக்கமிலாதுணர்ந்தோர்க்கு

மறைவாயுய்த்துணர்வார்க்கு மறைபயிலுங்கருவையில்வாழ்
இறைவாின்றிருவிளையாட்டியான் வழுத்தவடங்காதே."

என்றறிவுறுத்தருளிய அதிவீரராமபாண்டிய மகாராஜா
வின் திருவாக்காலும் போதரல் காண்க. இதுதானே சுருதி
யாம். சுருதி இங்ஙனமாகவும், யுக்தியை நோக்குங்கால்,

யுக்தி—பொதுவாசஜீவகோடிகளுக்குக்கேவலம், சகலம், சுத்
தம்,அதீதம், என்றுநான்கு நிலைகளுண்மையாக அறிஞரனைவரா
லுஞ்சம்மதிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள், இறைவனால் தே
கபோகங்களளிக்கப் படுதற்கு முன்னரேயுள்ள ஆணவக்கிடை
யேகேவலாவஸ்தையாம். அதனைப்பற்றிப்பேசுவது ஆவசிய
மில்லையாதலின் சகலர், சுத்தர், அதீதர் ஆகிய மூவகுப்பினரே
ஈண்டெடுத்துக்கொள்ளப்பட்டனர், அம்முத்திறத்தாருள்ளும்,

"எங்குஞ்சிவமொழியயில்லையவன் றன்றுணை
யங்கந்திரள்கருவியாணவமாம்=பொங்குமிருள்
மைசெய்தமாமாயை மாயைவினைமற்றனைத்தும்
பொய் பொய் பொய் பொய் போய் பொய் பொய்."

என்றபடி சிவத்தை யொழிய வேறொன்றனையுங்காணாத
அதீத நிலையினரைப்பற்றிப் பேசுதற்காவது, பேச்சளவிலறித
ற்காவது, எவருமருகரலர். ஆதலின் இறைவனிக்கவியில் அவ்
வதீதரைச் சுசிப்பித்துத் தோன்று நிலையில் வைத்தனர். இவ்

விருதிறத்தரும்போக நின்றவரோ சகலர், சுத்தர், என இருதி றத்தரேயாவார். இவ்விருதிறத்தருள் சகலருக்குவிரிந்தஞா னமுணர்த்துவானெழுந்ததே இக்கவியாம். இதில் சகலரை க்கருத்திலாமூடரென்றதினுல் சுத்தர் கருத்துடையரென்ரு யிற்று. ஆயினும், அவர் மெய்ஞ்ஞானியல்லர் என்பதை வலி யுறுத்துவானே பரமயோகிகளென்ருரிறைவர். யோகிகள் அக த்துட்பிரிவின்றி இறைவனைக்காணுகின்றனரன்றி இறைவனு டைய பரிபூரணநிலையைக் காணுகின்ருரிலர். ஆதலின் அவர் [யோகிகள்] அபரஞானிகளேயாயினர். அவ்வபரஞானந்தா னுங்கைவரப்பெருதவிடய ஞானிகளைக் கருத்திலாமூடரெ ன்றுதானே சொல்லவேண்டும். நமது அருமைப்பிள்ளைகளா கிய வித்தியார்த்திகள் உள்ள நாளளவும் பூமிசாஸ்திரமும் பூமிப்படமும் கைகளிலேயே வைத்திருக்கட்டும். அதுகொ ண்டு பரீட்சகரின்முன்புக்கு உத்தரஞ்சொல்லும் நேரத்திலும் எமக்குப் புத்தகமும், படமும்பார்த்துத்தான் படிக்கத்தெரி யுமென்பரேல் அவர் பாற்கொடுத்த கற்பலகை வெறும்பலகை யாகத்தானேயிருக்கும். அவர்கதியென்னும். படமும்புத்தக முங்கொடுத்துத் தம்மைப்படிப்பிப்பதானது கண்டுங்கேட்டு முள்ள வுண்மையைக்கருத்துட்கோடற்காகவன்ருே! அங்ஙன ஞ் செய்யாத மடமக்களைக் கருத்திலா மூடரென்பதிற்றடை யென்னை? அதுபோலவே,

புரஹு ஆரும் அத்தியாயம் பிராமணம் 5 வாக்கியம் 6 ல்

“பரமாத்மாவி [சிவபிரா] னது தரிசனமும், சிரவணமுஞ் மனனமும், நிதித்தியாசனமும், செய்தல்வேண்டும்,, என்றபடி ஆலயசேவையும், சுருதிவிசாரமும், கைவந்தஒருவன் அதன்மேற்படியாகிறமனனஞ்செய் (தியானித்) தலிற் பிரவேசிக்கவேண்டுமென்றோ? அங்ஙனம் பிரவேசியாதிருப்பவரை (விடயஞானிகளை) சொரூப ஞானத்தைக்கருதாதிருப்பதுபற்றிக் கருத்திலாமூடரென்றார்போலும். அது சகலவர்க்கத்தாரை சுத்தாவஸ்தைக்கீடேற்றுவான் கருதிய ஆசிரியர் கருணைத் திருவாக்கேயாம். அதுவே, பிள்ளைகளுக்குப்பெற்றோர் அறிவுறுத்தும்போது, எடா! மூடா! உன்னுடன்படித்தவன் உயர்ந்த வுத்த்தியோகத்திலிருந்து எல்லாராலும் நன்குமதிக்கப்படுகிறானே! நீ நாலுங்கற்றுக்குட்டியேயாகிக்காலங்கடத்திக்கொண்டிருக்கிறாய். நானே உன்னுடைய வாழ்க்கையிலும் பிரீதிகரமாயுனக்குஞ் சோறுபோடுகிறேன் என்பதுபோலுமாம். இதுகொண்டு ஆலயவழிபாட்டாலடையும் பெரும்பேற்றை மறந்துகிடக்கிற அறிவீனரைக் கருத்திலா மூடரென்றதாமென்னலாமேயன்றி ஆலயவழிபாடு மூடர்கொள்கையென்று பேசியதாகப் பெரியோர் கருதுகின்றிலர். ஆகவே மந்தமதியினர்க்கு அறிவெழுப்புவான் இறைவன் முன்னிலைப்படவேண்டியதவசியமாதலினது யுக்திக்குப் பொருத்தமேயாயிற்று! ஆகவும் அநுபவத்தைநோக்குங்கால்

*அநுபவம்—ஸ்மார்த்த சிகாமணிகளனைவரும்மற்றும் பிற*

ரும், ஆலயவழிபாட்டை ஒரு சிறிதும் புறக்கணியாமல் பின்பற்றி நின்றுய்வதே குன்றின்மேலிட்டதீபமாயிருக்கிறது. அத்துடன் காயத்திரியாதி செபாநுஷ்டானங்களாகியநித்தியகருமங்களில் வழுவாதொழுகுவோர்களும், அவ்விரண்டு (அவயசேவை நித்தியகர்ம) வழிபாடுகளையும், புறக்கணியா தவர்களாயிருந்து கொண்டே அநேக வேள்வி செய்த அந்தணேத்தமர்களுமே ஸ்மார்த்த ...தவ, வைணவ சைவசதாசாரசத்சமயிகளா... மதிக்கப்படுகிறுர்கள். எந்த ஆலயத்திற்பார்த்தாலும் அவ்வந்தணேத்தமர் தொகையே அதிகமாகக்காணப்படுகின்றன. ஆதலின் ஆலயவழிபாடு அறிஞானவரும் சம்மதித்ததென்று உலகாநுபவத்திலுங் கண்டதாம். இங்ஙனமாகவும்,

## உத்தர கீதையில்.

"துவிஜர்களுக்குத் தெய்வம் அக்கினியில், முனிவர்களுக்குத் தெய்வம் ஹிருதயத்தில். புத்திகுன்றியவர்களுக்குத் தெய்வம் விக்கிரகத்தில், சமதிருஷ்டியுடையவர்களுக்குத்தெய்வம் எங்கும், என்றும்,"

## சாதாதபவசனத்தில்

சாதாரண மனுஷர்களுக்குத் தெய்வம் நீரில். சற்றுத்தெரிந்தவர்களுக்குத் தெய்வம் ஆகாசத்தில் (சூரியனில்), மூடர்களுக்குத்தெய்வம்கல்லிலுங்கட்டையிலும், யோகிகளுக்குத் தெ

ய்வம் அவர்களுக்குள்ளே,"என்றும் கேட்கப்படுகிறதுகொண்டு
ண்டு,

கருத்திலாமூடரென்றது—முழுமூடரையும்,
மற்றவர்களென்றது—முக்கால்மூடரையும்,
அந்தணரென்றது—அரைமூடரையும்,
யோகிகளென்றது—கால்மூடரையும்,

குறித்து நிற்பது போலவும், அதுவே மூடமுழுவதும் நீங்கப்பெற்றவர்தாம் ஞானிகளென்று சூசிப்பிக்கிறதெனவும், அதிசமீபத்தில் காஷ்டமாதிய தாபரக்குறிகளாகிய அகௌரவஸ்தானங்களில் இறைவனைக் காணுதலால் இறைவனெளிய பொருளேயாய்ப்போவனுதலின் அவரை (ஆலயவழிபாட்டினரை) க்காட்டிலும், தூரத்திலுள்ள விண்டலத்துப் பொருளிற் காணுவானுக்கிரகித்துக்கௌரவமுள்ள சங்கமக்குறிகளாகிய சூரியபிம்பத்திலும் வாருணகும்பத்திலும் இறைவனைக் காணுகிறவர் மேலானவரேயாவர். அவரைக்காட்டிலும், பஞ்சபூதங்களிலே நடுநாயகமாகிய தேயுபூதத்திற் காண்பவருயர்ந்தவரேயாவார். இவ்வாறு சோபானக்கிரமத்தின் வைத்துப்பார்க்கின் ஆலய வழிபாடு கீழ்ப்படியே யாமெனவும், பேசுவாருமிருக்கின்றனர். இவர் கொள்கை எமதுபந்யாசத்திற்கண்ட விக்கிரகாராதனத்தை மறுத்திட்டில்லையாயினும் தார

தம்மிய பேதங்கள் கற்பிக்கின்றது. அது சரிதானாவென்ப தை மாத்திரம் ஈண்டு விசாரிக்கவேண்டியதவசியமாதலின் விசாரிப்பாம்.

பொதுவாக ஈசுரவழிபாடு எத்துணையுமுயர்ந்த சூரியபி ம்பத்திற் செய்வதனால் ஒரு விலையேறப்பெற்ற மாணிக்கத்தா லாய சுயம்புலிங்கத்தி லருச்சிப்பதுபோலாகட்டுமே. அது கொண்டென்னை? ஓடும்பொன்னும் ஒப்பநோக்கும் சீவன் முத்தர் முன்னிலையில் எத்துணையுந் தாழ்ந்த பொருளாகிய காஷ்டாதிகளும், உயர்வாய சூரியனும், தாரதம்மியப்படுவ தின்றே? அக்கினிக்கென்றோர் விசேஷமுண்டாவதின்றே? அத்தகையசமதிருஷ்டிவாய்ந்த சிவாநுபூதிப் பெருஞ் செல்வ ருங்கைக்கொண்டுள்ளது, ஆலயவழிபாடன்றோ! அவ்வாலய வழிபாடு கைக்கொண்டபெரியாரும்,

"அருக்கன்பாதம் வணங்குவரந்தியில்
அருக்கனாவானரனுருவல்லனோ
இருக்கு நான்மறையீசனையேதொழும்
கருத்தினைநினை யார்கன் மனவரே"

"எரிபெருக்குவ ரவ்வெரியீசன
துருவருக்கமதாவ துணர்கிலார்

அரியயற்கரியானையயர்த்துப்போய்
கரிவிருத்தமதாகுவர் நாடரே”

என்ற சுருதிவழி சூரிய நமஸ்காரம், யாகாக்கினிபூஜை முதலியவைகளை இகழ்ந்திட்டிலர். அப்படியிருக்கவும் மேலான ஆலயவழிபாட்டைக் கீழானபடி யென்கிற இவரது காயத்திரியாவது:—

இருக்குவேதத்தில் விசுவாமித்திரரால் தொகுக்கப்பட்ட
3-வது மண்டிலத்தில்

“அன்பினாற் செய்யப்படும் எம் வேள்விமுறைகளை நடைபெறுவிக்குந் தெய்வத்தன்மையுடைய சாவித்திரியின் விழையத்தக்க ஒளியை யாம் சிந்திக்கின்றோம்” என்பதாம். இதுவே சிறந்ததோர் காயத்திரி மந்திரமாம். இதுபோலவே,

பிராதக்காலபிராசன மந்திரத்தின் கருத்து.

“பிரேரகனாகிய பரமாத்மாவே! குரோதாபீஷ்டனாகிய எனது சர்வ இந்திரியங்களால் செய்யலான பாவங்களை நசிக்கச்செய்வதற்காக(எனது)ஆத்மாவை சமர்ப்பணஞ்செய்து எனது பாவத்தை (உனது பகவத்தேஜசுமுன்) ஹோமம் செய்கின்றேன்.”

## மாத்தியான பிராசனமந்திரத்தின் கருத்து.

"பகவத் கருணரசம் எனது சரீரத்தைப்பவித்திரமாக்கி எனது பாவங்களைப்போக்கி என்னை ரட்சிப்பாராக"

## சாயங்கால பிராசன மந்திரத்தின் கருத்து.

"அக்கினிநாமத்தால் பிரகாசிக்கும்பரமாத்மாவே! குரோதங்களால் நிறைந்த எனது சர்வ இந்திரியங்களாற் செய்த பாவங்களைப்பகவத் தேஜசின்முன் ஹோமமாகச்செய்கின்றேன்.' என்பன பிராசன மந்திரங்களாம். இவையனைத்தும் காரியசித்தியின்பொருட்டும், பாவநிவாரணார்த்தமுமாகவே குறையிரத்தல்களாகத்தானே காணப்படுகின்றன. அப்படித்தானே இவரது யாககர்மங்களும் புலப்படுதல் வருமாறு:—

நரமேதம், கோமேதம், அஸ்வமேதம், அஜமேதம், முதலியயாகங்களிலே மாமிசபக்ஷணமும், சௌத்திராமணியாகத்திலே மதுபானமும், கிரகிக்கத்தக்கதென்றதோர் நியமனமிருத்தலால் அவைகொண்டும் சரீர பலமுண்டாதலொன்றினையன்றி ஆன்மலாபமணுவளவென்கிலுமில்லையென்பது பிரத்தியட்சமாம். அந்தவுண்மை, "கள்ளு மூனும் விரும்பினல் மகங்கள் செய்" என்ற சுருதியாற் போதரல்கண்டாம். அல்லாமலும்,

சோதிஷ்டோமமுதலியன சுவர்க்காதிபோகங்களைத் தருவனவாமென்றொரு கேள்வியுமுண்டு. நூறு அஸ்வமேதயாகங்கள்முற்றுப்பெற்றால் இந்திரப்பட்டத்திற் கருகமாகலாமென்றோர்கணக்கு மேற்பட்டிருக்கிறது. அதுகொண்டென்னை? இறப்பும்பிறப்புங்கண்டால் ஒழிவதுண்டோ? ஒருக்காலும் சென்மசாபல்லியங்கிடைக்கப்போகிறதில்லை. அந்தவுண்மை,

“குடுமியங்கிரியொப்பக்குவித்தபுல்
சுடுதல்கொண்டு பிறவிசுடப்படாது
அடுபுலன்களறி வெனுமங்கியில்
சுடுதல்கொண்டு பிறவி சுடப்படும்”

என்ற சுருதியாலும் போதரல்காண்க. அந்தவுண்மையால்தானே, ஸ்காந்தபுராணம் ஞானயோககண்டம் நாடிசக்கிராத்தியாயத்தில்,

“மூடாத்மாக்கள் தீர்த்தத்திலும், தானத்திலும், தபசிலும், யக்கியத்திலும், கட்டையிலும், கல்லிலும், சிவனிருப்பதாக நினைக்கிறார்கள். ஒ! முனியே! ஞானக்கண்ணில்லாமையினாலும், மாயையின் பலத்தாலும், (அல்லவா) எங்கும் வசிக்கும் சாந்தமூர்த்தியாகிய சங்கரனைக்காண்கிறதில்லை. தனக்குள்ளேயிருக்குஞ் சிவனை விட்டு விட்டு சிவன் வெளியிலிருப்பதாகப் பூசிப்பவன் உள்ளங்கையிலுள்ள சோற்றையெறிந்துவிட்டு புறங்கையை நக்குவான்போல்வன். யோகிகள் சிவனைத்தமக்

குள்ளே காண்பார்களேயன்றி பிரதிமைகளிற்காணார். அஞ்ஞானிகளுக்குப் பாவனார்த்தம் பிரதிமைகள் கற்பிக்கப்பட்டிருக்கின்றன" என்ற போதமுமெழுந்ததாம்.

ஆகவே காஷ்டமாதிகளில், சூரியன் தண்ணீர் முதலியவைகளில், அக்கினியில், பிறவெவற்றில் பூசித்தாலும், அப்பூஜை இறைவன் வழிபாடேயானாலும், புறவழிபாட்டளவிலா கும்பட்சத்தில் அவ்வழிபாட்டாளர் அனைவரும் கருத்திலாமூடர் என்பது மறுக்கவொண்ணுதவுண்மையேயாதலறிக. அது கொண்டு ஆலயவழிபாடுமூடர்கொள்கையென்னும் "பேதமையிற் பேத...யில்" என்பது வலியுறுத்தப்பட்டது. ஆதலின் அகத்தும் புறத்தும் பூசை வேண்டுமென்றும், அதவும் இறைவன் வழிபாடாயேயிருக்கவேண்டுமென்றும், அதுதானே விக்கிரகாராதனமாமென்றும் கூறுவர்பெரியோர். அப்படியிருக்க,

சுவேதாசுவதரம் 4—18-ல்

"எப்பொழுது (சங்காரகாலமாகிய) இருட்டோ அப்பொழுது பகலில்லை, இரவில்லை, சத்து இல்லை, அசத்து இல்லை. சிவனே தனித்துளன். அவன் அக்ஷரன். அவன் கதிரவனுக்குப் பரம்பொருள்" என்ற சுருதிவழி கதிரவனுக்குப் பரம்பொருளாகிய பரமேசுவராராதனத்தைவிட்டுக் கதிரவனை நோக்கிச்செய்யும் பிரார்த்தனைகள் பேரவியாராதனையேயாம்,

அதுபோலவே,

ஸாமம் ஆக்நேயகண்டம் 6-ம் சாமத்தில்,

"வேள்விக்கு அரசனாகியஉருத்திரனையெண்ணுவோமாக"
என்ற சுருதியை மறந்தும்,

"அவிசொரிந்தாயிரம் வேட்டலினொன்றன்
உயிர்செகுத் துண்ணாமைநன்று"

"அஹிம்ஸா பரமோதர்ம:" என்பனவாதிய போதனை
வழியேயுள்ள தர்மத்தைக்கைவிட்டும்,

"தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்கதான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை"

என்ற ஈசுவர கட்டளையை மீறியும்,

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூனுண்பானை
யெங்ஙனம் ஆளும் அருள்"

என்றபடி தன் உடம்பு கொழுமைபெறுதல் வேண்டிப் பிறிதொன்றனுடம்பைச் சிதைத்து அதனூனையுண்ணுவானுக் கி[illegible]கித்து நின்று திருவருளுக்குப் புறம்பாயொழிவோரின் கொ

லவேள்விச்செயல்களும் போலியாராதனையே யாகுமென்பதும் வலியுறுத்தப்பட்டது. அப்படியானால் உத்தரகீதையும், சாதாதபவசனமும் கூறியிருள்ளது பொய்யாமோ? எனிற் கூறுதும்.

இங்கே ஒவ்வொரு சமயத்தாரும், தம்முட்டாமே முரணிக் கூறும், தேவர் தம்மை வணங்குகவென்று விதித்தல் செய்யாது அவர் தமக்கெல்லாம் ஒப்பமுடிந்த ஒரு முழுமுதற்கடவுளை வணங்குகவென விதித்தார். அப்படியிருக்கவும்,

பிறதேயங்களிலுள்ள சாதியாரெல்லாம் விரிந்தவுணர்ச்சிப்பேறின்றி அநாகரீகமுற்றுத் தோப்புகளில் மரங்களையும், வானிற்றோன்றும் ஞாயிறு முதலியவற்றையும், 2200 வருடங்களுக்கு முன்னரேவரையும் வணங்கிக்கொண்டிருந்தனர். அவர் வணங்கும் வழிபாட்டைநோக்கி அவ்வாக்கியங்களுண்டாயிருக்கலாமென்று அறிஞர் ஊகிக்கின்றனர். அந்தவுண்மைக்கு,

ஆங்கிலநாட்டுப் பிரதம பண்டிதராயிருந்த மாக்ஸ்மூலர் ஜர்மானியதொழிற்சாலை சிதர் துண்டுகள் முதற்புத்தகம் (Chips from a German Work shop Vol. I) முகவுரையில் பாதகண்டத்துள் தழுவப்படும் விக்கிரகாராதனையும் வேறே. ரோம் முதலிய தேசங்களில்தழுவப்படும் விக்கிரகாராதனையும் வேறே. முன்னையதிற் பரமான்மாவின் சரீரங்களாக வணங்

கப்படுகின்றன. பின்னையதில் விக்கிரகங்களே அவ்வாறு வணங்கப்படுகின்றன, இங்ஙனமாயின் இந்து மக்களை நாம் குறை கூறுதலென்னை? என்னும்பொருள் தருமாறுவெழுதுவாராயினர். இவர்போன்ற பலருமிங்ஙனமெழுதியிருக்கின்றனர். அவ்விதரருடைய ஆராய்ச்சியே போதியசான்றுயிருத்தலறிக. அங்ஙனமாயின் அவ்வாக்கியங்கள் அபத்தமாதலில்லை, அவ்வொழுங்கைவிட்டு அவ்வாக்கியங்களையோராதரவாக்கொண்டு ஆலயவழிபாட்டைப் போலியாராதனைகளுக்குந்தாழ்ந்தபடியாமென்று சொல்லி இடர்ப்படத் தலைநீட்டுவதுமாத்திரம் இங்கே அறியாமையாமென்றும், இனி ஆலயவழிபாடு மகான்மார் கொள்கையேயாமென்பதைச் சுருதிமுகத்தால் நிரூபிப்பாம்

## இருக்குவேதத்தில்

உருத்திரனே, உன்னுடைய அதிரமணீயமான இலிங்கத்தை சம்பத்தின்பொருட்டு விஷ்ணுவாதி தேவர்கள் அபிஷேகஞ்செய்கிறார்கள். அந்தப்பூஜா விசேஷத்தினால் விஷ்ணுவானவர் வைகுண்டாதிபத்தியம் பெற்றார்.,என்றும்,

## பாராசரபுராணத்தில்

மகாவிஷ்ணுவானவர் மிக்க அழகுள்ளதாயும் சுத்தமாயுமிருக்கிற சிலாமயமான சிவலிங்கத்தை அர்ச்சனைசெய்து பரமபதத்தையடைந்தார் ,என்றும்,

காசிகண்டம் கேசவவசனம்

"ஹே! ஆதித்திய! சிவலிங்கார்ச்சனத்தினாலே என்ன தானுண்டாகாது, (அனைத்துமுண்டாகும்) அஃதென்னை, புத்திரர்கள், களத்திரம், பூமிகள், சுவர்க்கம், மோக்ஷம்,இவையனைத்துமுண்டாகும். சம்சயமில்லை. மூன்று லோகங்களினுடைய ஐசுவரிய சம்பத்துகளும் என்னாலேயே அடையப்பட்டன. பரமேசுவரன்பொருட்டு எவராலே ஒரு பொழுதிற் சிவலிங்கத்தைப் பூசித்தாலுங், (அவர்கள்) துக்கமநுபவிக்கக் கூடிய சமுசாரத்திலிருந்தாலும், அவர்களுக்குச் ஜென்மபயமேது (இல்லவேயில்லை) மூன்றுலோகங்களிலும் சிவலிங்காராதனத்தைக்காட்டிலும் இதரமானபுண்ணியமில்லை. ஆகையினாலே நீ பரமேசுவரனுடைய சிவலிங்கத்தையருச்சிக்கக்கடவாய்.," என்றும்,

அதிவீரராமபாண்டிய மகாராஜா

தொண்டுசெய்துவழிபட்டுச்சுருதிபுகழ்களாவீசன்
புண்டரிகமலர்த்தாளைப்போற்றிமுதற்பேறுபேற்றார்
அண்டர்பிரான்நான்முகத்தோன் ஆழியான் இவரென்றால்
மண்டனின்ஞாலத்தெளியமானுடரோவழுத்துவார்,,

என்றும், முழங்குவது போதாதோ! சுருதிகளீண்டு முழங்காநிற்கவும்விக்கிரகாராதனம் மூடர்கட்குஉரியதெனச்சுருதி

களிற் கூறுகிறதென்று பேசுவோர் கதிஎன்றாயிற்று, இந்திரன் பிரம்மா, விஷ்ணு முதலியபெருந்தேவர்களையும் மூடர் கொள்கையைப் பின்பற்றினவரென்றுதானே இவர் சொல்லத்துணிவர். அந்தோ பாவம். இவர் இந்த அநந்தசயனக்ஷேத்திரத்திலே அறிதுயில் (யோகநித்திரை) கொண்டிருந்தும், சிவார்ச்சனையைமறவாதுள்ள உண்மையை நாமனைவருமுணர்ந்துய்யுமாறு ஸ்ரீபத்மநாபேசுவரர் திருக்கோயில்கொண்டெழுந்தருளியிராநின்ற வுண்மையை யாகிலுங் கேட்டிலர்போலும். இவரென்செய்வர்.

## கேனோபநிடததாற்பரியம்

ஆரணத்தன்னியமில்லாச்சிவன்றன்பாலும்
அத்துவிதவேதனத்துமடைதற்குள்ள
காரணமாஞ்சிவலிங்கார்ச்சனத்துஞ்சாலக்
காய்வதுவுமேயன்றியுருத்திராக்க
தாரணத்துந்திரிபுண்டரதாரணத்துஞ்
சருவாங்கோத்தூளனத்துந்தாமேகாய்வர்
சீரிணக்குஞ்சிவனென்னுமுரையுந்தங்கள்
செவியாலுங்கேளார்செய்வினையாற்றீயோர்,

என்றபடி தீவினையாளராதலின் ஆலயவழிபாட்டினருமை

பெருமைகள் அன்னோருக்குப்புலப்படுதலின்றுயிற்று. அது கொண்டுஇவர்,

கூர்மபுராணத்தில்

"எவனொருவன் அஞ்ஞானத்தினுலேஈசுவராராதனைசெய்யாது சாப்பிடுகிறுனே, அவன் நரகத்தையடைகிறுன். புழுவாகப்பிறக்கிறுன்" என்றபடி நரகமாக்கவேயாயினர். இவர் எப்படிப்போனுலென்னை? இங்கே சுருதிகளில் விக்கிரகாராதனம் மூடர்கொள்கையென்று கூறிற்றில்லை யென்பது தானே நாம் தெரிந்துகொள்ளவேண்டியது. அது தெரிந்துகொண்டாம். ஆதலின்,

மோட்ச இச்சைமாத்திரமுடைய மகான்மாருக்கு ஆலய வழிபாடொன்றே போதுமானதாம். அதுதானேஎளியார், வலியார், அனைவருக்கும் வழிபட்டுய்தற்கோர் சாதனமாக இறைவனுற் கற்பிக்கப்பட்டிருக்கின்றது. அவ்விசேஷக்கிரகணசாதனமாகிய ஆலயவழிபாடொன்றனைத்தானே புத்திமான்கள் கைக்கொண்டு நின்றீடேற்றமுறுகின்றனர். பிரமவிஷ்ணுவாதி பெருந்தேவர்களும், அவ்விக்கிரகாராதனத்தாற்றுனே பெரும்பேறுபெற்றனரென்று வேதங்களுமுழங்குகின்றன. ஆனபடியால் ஆலயசேவையும், சுருதிவிசாரமும், வலதுபுஜமும், இடதுபுஜமும்போல சிவப்பெருஞ் செல்வத்

த்தை ஆர்ச்சித்தற்கு ஓர்கருவியாகக்கொள்ளவேண்டு மென்பார் பெரியோர். அந்தவுண்மை,

சிவரகசியம் ஆறும் அம்சத்திலுள்ள ரிபுகீதை
அத்தியாயம் 3.

"பரிவுடனேயுபநிடதபாடத்தாலும்,
பரமசிவபத்தர்க்கே தானத்தாலும்,
புரையறவேதிவ்வியமாமிலிங்கத்தின்கண்
பூரணமாம்பரமசிவபூசையாலும்,
பரவுசிவதலங்களிலே வாசத்தாலும்,
பலவிதமாம்மற்றுமுறுநியமத்தாலும்,
பிரமமதாம்பரசிவத்தினருளுண்டாகிப்
பின்னமிலா அகண்டான்மபோதமுண்டாம்"

என்ற போதத்தாற் போதரல்காண்க. அப்படியானால் ஆலயவழிபாட்டிற்குப்போல சுருதிவிசாரத்திற்கும் சொல்லியிருக்கவேண்டுமே? எனிற் கூறுதும்:

சிவவாக்கியதேவர்

"சாமநாலுவேதமுஞ்சகலசாத்திரங்களும்
சேமநூலையோதினுஞ்சிவனைநீரறிந்திலீர்

காமநோயைவிட்டிடாக்கருத்தொடுக்கவல்லிரேல்
ஈமமற்றதாய்மிடத்திருப்பனெங்களீசனே" என்றும்,

அகத்தீசர்

"சாத்திரம்வேதம்சமயம் வண்ணாத்திதண்ணீரில்விட்ட
மூத்திரப்போம்படிபோமனமேயந்த மூத்திரமோர்
பாத்திரக்கொள்ளப்பலனுண்டதிலொருபாழுமில்லைக்
கோத்திரமுங்குலமுங்குடிபோய்நின்னைக்கூடினர்க்கே"

என்றும், ஔவைப்பிராட்டியார்

"நல்லன நூல்பலகற்பினுங்காண்பரிதே
எல்லையில்லாதசிவம்" என்றும்,

இவ்வாறே பிறவுங்கேட்கப்படுகின்றன. இவற்றால், சுருதிவிசாரத்தினாலே இறைவனையறியப்போகிறதில்லை. சுருதிகளை வண்ணாத்தி தண்ணீரில் விட்ட மூத்திரத்திற்கு ஒப்பிடலாம். அந்த மூத்திரமாவது ஒரு பாத்திரத்திற் கொள்ளப்பலனுண்டு. அதில் (வேதத்தில்) ஒருபாழுமில்லை. என்றதாயபழிப்புரைகள் கேட்கப்படுகின்றன. அவைகொண்டு வேதவிசாரம் அநாவசியகமென்பரேல், ஆலயவழிபாடும் அநாவசிய

கமென்னலாம். அங்ஙனம் புத்திமான்கள் கூறத்துணியார். ஆதலின் ஆலயசேவையும் சுருதிவிசாரமும், இரண்டு புஜங்களாக்கொள்ளவேண்டியதே யறிஞர்கடமையாம். புஜங்களில்லாதவனுடைய ஆண்மை ஆண்மையன்று, அவனுலொன்றுமார்ச்சிக்கமுடியாது. அப்படிப்போலவே ஆலயசேவையும் சுருதிவிசாரமும், கைக்கொள்ளாத ஒருவனுக்கு சிவாநுபூதிப்பெருஞ்செல்வத்தைச் சம்பாதிக்கமுடியாதென்பதும் நிச்சயமேயாம். ஒருக்கால் சுருதிவிசாரமில்லாதேபோனாலும், ஆலயவழிபாடொன்றனைக் கொண்டாவது முத்திபெறுதல் கூடும். அதற்கு மெய்யடியார் சரித்திரங்களே போதிய சாட்சியாயிருக்கின்றன. அந்தவுண்மை,

## முண்டகோபநிடதம் 1-வதுமுண்டகம் 1-வதுகண்டம் 5-வது வாக்கியம்.

"இருக்குவேதம், யசுர்வேதம், சாமவேதம், அதர்வணவேதம், சிக்ஷை, கல்பம், வியாகரணம், நிருக்தம், சந்தஸு, சோதிடம் இவை சிறந்த வித்தியைகளன்று. அழிவற்றபொருளை யெதனுலறிகிறர்களோ? அதுவே சிறந்த வித்தை" என்றபோதத்தால் நன்குவிளங்கும். இதனுலே அழிவற்ற பொருளை (பரமேசுவரனை) எளிதிலறிவுறுத்தற் கருவியாயிருக்கிற ஆலய வழிபாடே பரவித்தையென்று கேட்கப்படுகிறது. அந்தவுண்மையாற்றுன்.

"வேதமொடாகமம் மெய்யாமிறைவனூல்
ஓதும்பொதுவும் சிறப்புமென் றுன்னுக
நாதனுரையிவைநாடிலிரண்டந்தம்
பேதமதென்பர்பெரியோர்க்கபேதமே" என்றதில்

ஆலயவழிபாட்டைப் பரிஷ்காரமாகப் பிரதிபாதிக்கிற ஆகமஞ் சிறப்பு நூலென்னப்பட்டது. அதனை,

சதுர்வேத தாற்பரியசங்கிரகத்தில்

"வேதத்தைப் பிரமாணமாகச் சொல்லுகிற ஜனங்கள் தாமே உன்னுடைய திவ்வியாகமங்களையும் பிரமாணமென்றறிகிறார்கள். எதனால்? என்றால், உன்னுடைய இயாகத்தைக் கூறியது வேதம். அதனைச் செய்வதற்கு வேண்டப்படுவதாகிய சொரூபலக்ஷணத்தை ஆகமம் கூறியிருத்தலால்" என்று ஸ்ரீ ஹரதத்தாசார்ய சுவாமிகளும் நன்கு வலியுறுத்தருளினர். ஆதலின்,

சிவரகசியம் ஆறும் அம்சத்திலுள்ள ரிபுகீதை
34-ம் அத்தியாயம்.

"பரமான அன்புடனே பரசிவத்தைப்
பாங்காகஆராதித்தருள்பெற்றோர்க்கே

உரமான அகம்பிரம நிச்சயந்தான்
ஊனமற்றவுள்ளத்திலுதியாகிற்கும்
திரமான அகம்பிரமநிச்சயத்தைத்
தியக்கமறச்செறிந்தவரேமுத்தராவார்
வரமானபரமசிவப்பதந்தன்னுணை
வகுத்ததிலோரையமில்லைவாய்மைதானே"

என்றபடி அகம்பிரம நிச்சயங் கைவருதற்குப் பேரன்பினுடன் பரமேசுவரவழிபாடுசெய்யவேண்டுமென்றும், அங்ஙனஞ்செய்யாதவர்க்கு அவ் வத்வைதப்பேறு சித்திக்கமாட்டாதென்றும், பரமேசுவரருடைய பாதந்தொட்டுச் சத்தியம் பண்ணியிருக்கிறதையாயினும் மறக்கொணுதன்றே?

கொங்கணர் கடைக்காண்டம் ஐநூறில்

"பூசிப்பார்பொற்றகட்டில்விக்கிரகத்தில்
பூமேருகொண்டகையில்சாளக்கிராமம்
பூசிப்பார் இதற்கெல்லாம்மனமுறைறத்தால்
புகட்டலாம்புருவமையம்புகட்டலாமே"

என்றபடி புறப்பூசையில் மனநிலை சைவந்தவர்க்கே அகப்பூசையை யறிவுறுத்தலாமென்ற சித்தபுருஷான் வாக்கியத்

தையாவது நம்பவேண்டுமென்றே? ஆதலின்,

அன்பார்ந்த நண்பர்காள்! அறிவினர் ஏமாற்றிலகப்படா தபடி வேதோக்தமாகிய விக்கிரகாராதனத்தை நம்மவரே'னை க்கொண்டுநின்றீடேற்றமுறுகின்றனர். ஏனையோர்கதியை

பூக்கைக்கொண்டரன்பொன்னடிபோற்றிலார்
நாக்கைக்கொண்டரன் நாமம்நவிற்றிலார்
ஆக்கைக்கேயிரைதேடியலமந்து
காக்கைக்கேயிரையாகிக்கழிவரே"

என்ற சுருதிபோதத்தாலுணர்க. இம்மட்டில் விக்கிர காராதனம் வேத சம்மதமுடையதேயாமென்பது வலியுறுத் தப்பட்டது: இனி,

7—வது வினா அங்ஙனங்கேட்கப்படுஞ் சுருதிகளால் பிரதிமாரூபமன்றே விக்கிரகமெனப்படுமென்பதாம்.

இதற்கு விடைகூறப்புகின், சுருதிகளில் விக்கிரகாராத னம் மூடர்கட்குரியதென்று சொல்லவில்லையென்ற வொன் றுதானே போதுமான விடையாம். ஆயினும் பிரதிமாரூபம் விக்கிரகமாகமாட்டாது. அது தியானமாத்திரைக்காக வைக் கப்பட்ட முன்னிலை லட்சியமேயாம். அந்தவழியே இறைவ

ன து திருவருட்காட்சிவடிவத்தைக் கிரகித்து (உட்கொண்டு) தியானித்தலே விக்கிரகமாமென்னுமோர் விடையுமிறுத்திட்டாம்.

அந்தவுண்மை (பிரதிமாரூபம் விக்கிரகமாகமாட்டாதென்பது—அந்த) விக்கிரகமென்னும் பெயர்ப்பொருள் விசாரத்தானே நன்குபோதரும். அதுவருமாறு:—

விக்கிரகமென்பது—உடல், கருங்கல்லு, பங்கு, போர், விரிவு, விகுதி, சாயல், என்னும் பலபொருளுணர்த்தி நிற்குமோர் பெயர்ச்சொல்லேயாம். ஆகவே, "பெயர்ச்சொல்லனைத்துங்காரணச்சொல்லே" என்னுஞ் சூத்திர விதியால் எவ்வெக்காரணம்பற்றி இவ்வொருபதம் (விக்கிரகமென்பது) பலபொருள்கட்குப் பெயராயமைந்திருக்கிறதென்பதை இங்கே விசாரிக்குமிடத்து,

1. உடல்: விகற்பவடிவாய சகலாவஸ்தையிலுள்ள ஒருசரீரியானவனுக்கு; பலவேறுவித்தியாச வடிவ்பதார்த்தங்களைக் கிரகித்தற் கருவியாயிருத்தலால் அந்த சரீரம் விக்கிரகமென்னப்பட்டது.

2. கருங்கல்லு: விகிருதியெனப்பட்ட கல்லிற்பிறந்த பொருளுக்கோராகரமாயிருத்தலால் அந்தக் கருங்கல்லும் விக்கிரகமெனப்பட்டது.

3. பங்கு: விசிர்தமெனப்பட்ட அங்கபங்க முன்மைபற்றிப் பங்கு (முடமும்)ம் விக்கிரகமெனப்பட்டது.

4. போர்: உயுத்தகளத்திலே பராக்கிரமம் (மிகுபலம்) எனப்படுகிற விக்கிரமங்காட்டுதல் பற்றியோ, அல்லது விக்கிரமமெனப்படுகிற சிங்கம்போலும் வீரங்காட்டுதல் பற்றியோ போரும் விக்கிரகமெனப்பட்டது.

5. விரிவு: அதிகமாகிய இடத்தையோ, இடத்துநிகழ் பொருள்களையோ, பற்றி நிற்றலால் விரிவும் (விசாலமும்) விக்கிரகமெனப்பட்டது.

6. விகுதி: ஜீவபோதத்தைத்தம்பாலிழுத்துக்கோடலால் பிரகிருதிமாயையெனப்பட்ட விகுதி (விகிருதி) யும் விக்கிரகமெனப்பட்டது.

7. சாயல்: விகாரமெனப்பட்ட தற்சுபாவப் பிரதிவிம்பத்தைத் தம்மிற்கொண்டு நிற்றலால் சாயலும் விக்கிரகமெனப்பட்டது. இது, போட்டோக்களிலும், சித்திரிகன் கைத்தொழிலர்லான படங்களிலும், பிரத்தியட்சமாம்.

என்று கேட்கப்படுதலால், விக்கிரகமென்ற பதம் கடவுட்டிருமேனியைச் சூசிப்பித்திட்டில்லை. அங்ஙனமாகவும், கரு

ங்கல்லுவிக்கிரகமெனப்படுதலால் அக்கல்லாலான சுரூபங்களும் விக்கிரகங்களெனப்படுகின்றன, என்பாருமுலகத்திலேயுண்டாயிருக்கலாம். அவர் கூற்று வாஸ்தவமாக வேண்டுமானால், கருங்கல்லானேமாத்திரஞ் சுரூபங்களுண்டாயிருக்கவேண்டும். அங்ஙனங்காணப்படவில்லை. பின்னை? தாரு, தாமிரம், வேறுசிலை, முதலியவைகளினாலேயுஞ் சுரூபங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. சுவர்களில் வரைந்துள்ள படங்களையுங் கூடச் சேவிக்கிற வழக்கமுண்டு. சிலாரூபங்களிலே கருங்கல்லின்மாத்திரமல்லாதே பால்வண்ணலிங்கம், ஸ்படிகலிங்கம், மரகதலிங்கம், முதலியவையும் உண்மையாகக் கண்டாம்' ஆதலின் அவர் கூற்று அபத்தமேயாதலறிக.

இதன்மேல், ஆலயங்களிலே காணப்படுகிற ஒவ்வொரு உருவங்களும் மனுடாரது வடிவங்களைப்போலவே அமைக்கப்பட்டிருத்தலான் அவை விக்கிரகங்களெனப்பட்டன, என்பாருஞ்சிலருண்டாயிருக்கின்றனர். அவர் சொல்லியபடி யென்னுமிருக்குமோவென்று பார்த்தால், ஒவ்வோராலயங்களிலுமுள்ள மெய்யடியாரது திருமேனிகளே மனுடவடிவம் போன்றனவல்லாமல் கடவுட்டிருமேனியங்ஙனங் காணப்பட்டில. பின்னை?

"அவ்வியத்தம் பீடலிங்கம் அங்கமனைத் தும்விளங்கும்
அவ்விலிங்க மேவியத்தமாம்"

"விளங்கின் முகமே வியத்தாவ் வியத்தம்
இலிங்கந் தனிலென்றே யெண்"

(a) என்ற சுருதிபோதத்தால் உறுப்புகளொன்றேனும் வெளிப்படாத பீடமும், சிவலிங்கமுமாயிருக்கும் அவ்வியத்தலிங்கமும்,—

(b) எல்லாவுறுப்புகளும் வெளிப்பட்டுள்ளதெனப்படும் கரசரணாதியவயவங்களோடு கூடிய சந்திரசேகராராதி இருபத்தஞ்சு விக்கிரக பேதங்களும் பிறவுமாகிய வியத்தலிங்கமும்,

(c) முகமும், தோள்களுமாகிய சிலவுறுப்புகள் வெளிப்பட்டும், மற்றவை வெளிப்படாமலுமிருக்கும், வியத்தாவ்வியத்தலிங்கமும்,

ஆகவே காணப்படுகின்றன. இம்மூவகைத் திருமேனிகளும் மானிட வடிவத்தினின்றும் விலட்சணமுடையவேயாமென்பது குன்றின்மேலிட்ட தீபமாம். அன்றியும், விகற்பவடிவ யதார்த்தங்களைக் கிரகித்தற் கருவியாக்கொண்ட உயிருள்ள உடலிற்கே விக்கிரகமென்று சொல்லப்படுதலால் அவ்விதத்திற் காணப்படாத பிரதிமாரூபங்கட்கும் விக்கிரகமென்பது பொருந்தாவுரைகோளாம் ஆதலின், அவருரையும் அசத்தேயாதலுணர்க.

அப்பால்—சாயலென்பதற்கு விக்கிரகமென்ற பொருளுண்மை கேட்கப்படுதலால் பிரதிபிம்பங்களாயமைக்கப்பட்டிருக்கிற சுரூபங்களையே விக்கிரகமென்றுமென்பாருஞ் சிலரிருக்கலாம். அவர் கூற்று ஒருவாறு பொருந்துமெனினும், அவர்பால் யாருடைய பிரதிமாரூபங்கள் ஆலயங்களிற் காணப்படுகின்றன? என்றொருகேள்வி கேட்கநேரிடும். அப்போது அவர் கடவுட் பிரதிமாரூபமும், அவரது மெய்யடியார்களின் பிரதிமாரூபங்களுமாமென்பரேல் அதனை ஒருவாறு சம்மதிக்கவுங் கூடும். அப்படிச்சொல்வது,

“மேலுலகத்திலும், பக்கமாகிய லோகத்திலும், இடையிலுள்ள லோகத்திலும், இவரை (கடவுளை) க்கிரகித்து முடியாது. இவருக்குப் பிரதிமையில்லை. இவர் பெரும்புகழினர்.” என்ற,

நாராயணோபநிஷத்து—முதலநுவாகம், ஒன்பதாவது வாக்கியோபதேசத்தின் உண்மையையுணர்ந்து கொள்ளாமல், ஈசுவரனுக்குப் பிரதிமாரூபங்கற்பிப்பது அறியாமையேயாமென்ற சில வுபநிஷத்து வாக்கியங்களைப் படிக்கத்தெரிந்த 'மாத்திரத்திலார்ப்பரிக்கிற கூட்டத்திற் சேர்ந்தவருக்கே நல்லறிவுச்சுடர்கொளுத்துதற் கோருபகாரமாயிருக்கும். அந்தமட்டிவிது பொருத்தமாமென்பதன்றி விசேஷமாக்கோடற்கிடனின்றென்பார் பெரியோர். என்? எனில்:—

கடவுட் காட்சிவடிவத்தின் சாயலமைப்புப்பற்றி மாத்திரம் கடவுட்பிரதிமாரூபம் விக்கிரகமெனப்படுமென்னுமிடத்து ஆண்டுவழிபாடு (ஆராதனம்) ஐதிகன்மார் கொள்கையேயாய் முடியும். ஆதலின் அஃது அத்துணைச்சிறப்பிற்றன்றாதலா லென்க. பின்னை?—

கடோபநிஷத்து 2-வது வல்லி, 2-வது வாக்கியம். "சிரேயமும், பிரேயமும், மனிதனையடைகின்றன. விவேகி அவையிரண்டையும் நன்றாக ஆராய்ந்து வேறு வேறாகப் பிரிக்கிறான். அவைகளுக்குள் சிரேயத்தைக் கிரகிக்கிறவனுக்கு நன்மையுண்டாகிறது. யார் பிரேயத்தைக் கிரகிக்கிறானோ அவன் பரமார்த்தத்தைவிட்டுப் பிரஷ்டனாகிறான்." என்றபடி,

சிரேயம் பிரேயம், என்னுங்கிரகிக்கத்தக்க விஷயங்கள் இரண்டனுண்மைகேட்கப்படுகின்றன. அவ்விரண்டனுள் கடவுளையறிந்து கோடலே சிரேயமாம். அந்தப்பேரின் பாநுபவத்தைவிட்டு சிற்றின்பமெனப்படும் சம்சார சுகத்தையறிந்து கோடலாகிற பிரேயத்தால் துன்பமேயுண்டாமென்பது, "சிரேயத்தைக் கிரகிக்கிறவனுக்கு நன்மையுண்டாகிறது" என்னும் போதத்தாற் சூசிப்பிக்கப்பட்டது. படவே, அறிஞரனைவரும் பேரின்பத்திற் பற்றுடையராகி ஈசுவரனையறிந்து கோடலெனப்படும். சிரேயக்கிரகண சாதனத்தை விரும்பி நன்மை

பெறுகின்றார் அது (ஞேயம்) கேள்வியளவிற்பற்றி நிற்றலாகிற சாமான்யக் கிரகணமெனவும், கேள்வியுடன் பார்வையாலும்பற்றி நிற்கிற விசேஷக்கிரகணமெனவும், இரண்டுபடித்தாக்காணப்படுகிறது. அவ்விரண்டனுளொன்றாகிய விசேஷக்கிரகணமே ஈசுவரசாட்சி வடிவத்தையும், அவரது பஞ்சகிருத்திய விசேஷங்களையும், நேத்திரேந்திரியத்தின்வழிக் கிரகித்து அகத்துட் கொண்டானந்தித்து நிற்றலாம். ஆதலின் அந்த விசேஷக்கிரகணத்தைத்தான் விக்கிரகமென்பார் பெரியோர்.

இங்கே பிரதிமாரூபத்தை விக்கிரகமென்பது ஒருவாறு பொருந்துமாயினும், அது அத்துணைச்சிறப்பிற்றன்றென்பது வலியுறுத்தப்பட்டது. படவே விசேஷக்கிரகணமெனப்படும் ஆலய சேவையால் எம்மவர் அகத்துட்கோடலே விக்கிரகாராதனமென்பதும் ஸ்பஷ்டமாயிற்று. அந்தவுண்மை,

"முகத்துக்கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்!
அகத்துக்கண்கொண்டு பார்ப்பதேயானந்தம்"

என்ற சுருதிபோதத்தால் நன்கு விளங்கும். இந்த சுருதியில் "முகத்துக் கண்கொண்டுபார்க்கின்ற" தென்பது புறத்தேயுள்ள ஒரு பதார்த்தத்தைக் கண்கொண்டு கண்டாலும் அப்பதார்த்தத்தினுண்மை கருத்துட் பதிதலின்றிப்புறத்தே

யாகக்கழியவிடுதலைச் சூசிப்பித்ததாம். அது மூடர்கொள்கையேயாதலின் "மூடர்காள்"! என்ற விளியுமேற்பட்டது. படலானே, அறிஞராவார் கண்ணுற்கண்ட ஒன்றனைக்கருத்துட்பதியக்கோடல்போல நீங்கள் ஆலயத்திற் காணப்பட்ட ஈசுவரக்காட்சி வடிவத்தை யகத்துட்கொண்டு யாண்டுமொழிவறக் காண்பதால் ஆனந்தம் பெறுவீர்களென்றதோர் போதமே இதனது தாற்பரியமாம். அவ்வானந்தமெத்தன்மைத் தென்பாரை நோக்கியே,

"மகட்குத் தாய்தன்மணாளனோடாடிய
சுகத்தைச்சொல்லென்றாற் சொல்லுவதெங்ஙனே"

என்றபடி ஒவ்வொருவரும் தத்தமநுபவத்திலறிந்து கொள்ளத்தக்கதென்பதும் நன்கு வலியுறுத்தப்பட்டது. இவ்வுண்மையறியாமல் இந்த சுருதியும் விக்கிரகாராதனத்தை மறுத்து நிற்பதாக்காண்பதும் மடமையேயாம். அது நிற்க,

"இவரைக் கிரகித்து முடியாது. இவரு (கடவுளு) க்குப் பிரதிமையில்லை" என்ற உபநிஷத் வாக்கியத்தின் கதிதானென்னை? எனின்:—

இவ்வாக்கியத்தில் கிரகிக்கவேண்டுமானால், பிரதிமை வேண்டுமென்பது சொல்லாமே போதரல் கண்டாம். கிரகித்த

லென்றால் அறிந்துகோடலென்பதே தாற்பரியமாம். கடந்து நிற்கும் பொருளெனப்படும் கடவுளோ அறியப்படும் பொருளாயிருக்கவில்லையென்பதறிஞரனைவருஞ்சம்மதித்துள்ளதாம். அங்ஙனமாகவே,

கேனோப நிஷத்து
1-வது கண்டம் 3, 4-வது வாக்கியங்களில்

"அவர் (கடவுள்) கண்ணிற்கும், வாக்கிற்கும், மனத்திற்கும், விஷயமாகார். அவரைப்பற்றி நமக்கு ஒன்றும் விசேஷமாகத் தெரியமாட்டாது. அவரைப்பற்றி இவ்விதமாகவுபதேசிக்கிறதென்றும் நமக்குத்தெரியவில்லை. அவர் தெரிந்தபொருளுக்கும், தெரியாத பொருளுக்கும் வேறானவராகவேயிருக்கிறார். பிரமவிஷயமாக நமக்கு உபதேசித்த பூர்வாசார்யர்களால் இவ்விதமாகத்தான் கேள்வியுற்றோம்" என்றதாதிய சுருதிபோதங்களைக்கொண்டு கடவுளுண்மை சொல்லமுடியாத நிலையதென்று கண்ட கௌதமரிஷியால் ஸ்தாபித்துள்ள புத்தமதத்தில் தெய்வத்தைப்பற்றி ஒருவார்த்தை தானுஞ் சொல்லப்படவில்லை. அப்பால்,

புரஹ தாரணியோப நிஷத்து
அத்தியாயம் 6 பிராமணம் 4 வாக்கியம் 22-ல்

"அப்பரமாத்துமாவை (கடவுளை) இதுவன்று, இதுவ

ன்று. என்று நிர்த்தேசித்தல்வேண்டும். அவர் ஒரு இந்திரியத்தினாலும் கிரகிக்கப்படத் தக்கவரன்று. அவர் ஒரு இந்திரியத்தினாலும் கிரகிக்கப்படமாட்டார்" என்ற தாதிய சுருதி போதத்தால்,

கட்புலனுக்கு விஷயமாகும் ஒவ்வொரு பொருளையும் நேரிற்றான், அல்லது தூரதிருஷ்டி—அணுதர்சினி முதலிய கருவிகளினுதவியினாற்றான், அல்லது வேறு பிரகாரத்தினாற்றான், உய்த்துணர்ந்து ஒவ்வொரு பொருளினிடத்தும், சர்வஞானம் முதலிய கடவுட்டன்மைகாணப் படாததினாலும், அவையனைத்திற்கும் தோற்றம், நிலை, யிறுதி, யுண்மையாதலினாலும், அவற்றை முசதொழிற் படுத்தவல்லவராய், நித்தியானந்தராய், அழிவற்றவராய், சுதந்தரராய், அமலராய், சர்வக்ஞராய் உள்ளதோர்பொருளே கடவுளெனப்படுவரென்று சில அறிஞர்களாற் தீர்மானிக்கப்பட்டது. அத்தீர்மானமான வாக்கு (கடவுளுண்டென்ற சொல்லு) க்குப்பிரதிமையுண்டாயிட்டில்லையென்பதுந் திண்ணமே அது அறிஞரனைவருக்குமொப்பமுடிந்த துணிபுதானே. அதுசொண்டென்னை?

அங்ஙனம் எவ்வாற்றானும் அறியப்படாத ஒருபொருளை (கடவுளை)க்கண்டுகொள்ளாதவருண்டுமென்றதனால் அவர் (கடவுள்) உள்பொருளாய்விட்டாரோ? கண்டுகொள்ளாத கடவுளைஉண்டுமென்னாத நாஸ்திகருரைகொண்டு கடவுளுமில்லெபா

ருளாய்ப்போய்விட்டாரோ? அவர் (கடவுள்) இருப்புக்குமில்லாமைக்கும் இவ்விருதிறத்தரும் காரணரல்லர். "கண்டார்க்கண்டகாட்சியும் நீ, காணார்காணக் கள்வனும் நீ" என்றபடி இறைவன் மெய்யடியாருக்கு வெளிப்படையாயும், இதரருக்கு மறைவேயாயும், நின்றருளுமோ ரருட்திருவிளையாட்டே அவனது சர்வ சக்தித்துவத்தைப் பொறுத்த மகிமாதிசயங்களாயிருக்கும். அப்படியிருக்க இவர் தத்தமறிவுக்கெட்டியவாறு பேசுகின்றவராயேயிருக்கின்றனர். இருந்தாலும் அறிஞர் முன்பில் இவ்விருவர் (ஆஸ்திகப்போலிகள்-நாஸ்திகர்) கூற்றுக்களும் மணம் பெறுதொழிதலுண்மையேயாம். அந்தவுண்மை இவ்விருதிறத்தாரையும், நியாய ஸ்தலத்திற்குவரித்து மொழிவாங்கினல் வெளியாகிப்போகும். எப்படி? எனில்:—

ஒரு கட்சியார் (நாஸ்திகர்) கடவுளில்லையென்று வாய்கூசாமற் சொல்லிவிடுவர். அவரைப்போல மற்றொருபட்சத்தார் [ஆஸ்திகப்போலிகள்] கூசாமல் கடவுளுண்டுமென்னத் துணிகின்றிலர். ஒருவாறு தணிந்திட்டாரேல் கடவுளுண்டு; அவர் கண்ணிற்கும், வாக்கிற்கும், மனத்திற்கும், விஷயமாகாதவராயேயிருக்கிறர்; அவரைப்பற்றி நமக்கு ஒன்றும் விசேஷமாகத்தெரியமாட்டாதென்று எமதாசிரியரே கூறியிருக்கின்றனர்.

ஆதலின்,

எம்மால் க்ரணப்பட்ட பொருளுக்கு அப்பாலோர் கடவு

விருக்கிறதாக நிச்சயிக்கப்பட்டது என்றுதானே கூறுவர். இவ் விருகட்சிகளையுஞ் சீர்தூக்கும் நியாயாதிபதி திருமுன்பில்,

1. நாஸ்திகர்சொல்லுகிறது அவரது ஆராய்ச்சியைப்பொறுத்து மெய்மையேயாகும். ஆனாலும் அது ஆன்றோராசாரத்திற்குஒத்திட்டில்லை. ஆதலின் அதுவும்மறுக்கப்பட்டது. என்றும்,

2. ஆஸ்திகப்போலிகள் சொல்லுகிறது அவரது அறிவு கொண்டுகேக்கப்படுவதொன்றனையல்லாமல் அவராசிரியரும் கண்டுகொள்ளாத ஒருபொருளை உண்டுமென்பது பொய்மையேயாகும். அதுஆன்றோர் சந்நிதானவிசேஷத்தால் வந்ததோர் நம்பிக்கையேயாமாதலின் கனவுபோலுமாமன்றி நிலைபெறத் தக்கவாஸ்தவவுணர்ச்சியல்லவென்றொதுக்கப்பட்டதுஎன்றும்,

விதியெழுதி முடிக்கப்படுமன்றோ? அதனால் நாஸ்திகர் தாமே நல்லவராகின்றார். ஆதலின், இறைவனருளால் இவ்வாஸ்திகப் போலிகளைச் செயித்தற்காகத்தான் நாஸ்திகருண்டாயிருக்கின்றனரென்பதே வெள்ளிடைமலையாம். இதன்மேல்

ருக்வேதம் 2 . 3 — 22 . 46 ல்

„ ஈசுவரனை இந்திரனென்றும், மித்திரனென்றும், வருணனென்றும், அக்கினியென்றும், சொல்லுகிறார்கள். மேலும் அவர் அற்புதனும், சுந்தரனும் கம்பீரனுமிருக்கிறார், அவர்

ஒருவர். ஆனால் புத்திமான்கள் அவரை அக்கினியென்றும் யமனென்றும், மாதரிசுவாவென்றும், அநேகவிதமாகச்சொல்லு லுகின்றார்கள்" என்றபடி, ஈசுவரனொருவனைத்தானே, பலநாமங்களால்வழங்கிவந்தனர் பழையோர். அப்பண்டைக்காலத்துவழக்கினின்றும் வழீஇப்போய் அந்நாமங்களில் ஒவ்வொன்றைப் பற்றிக்கொண்டு சிலர் ஒவ்வொரு தேவதையை ஈசுவரனாகப் பூசித்துவரத் தொடங்கிய ஒருகாலமுமிடையிலுண்டாயிற்று. அக்கால (மாறுதலடைந்தசமய) த்தும், அவர்தன்பின்வழி,

"யாதொருதெய்வங்கொண்டீரத்தெய்வமாகியாங்கே
மாதொருபாகனார்தாம்வருவர்மற்றத்தெய்வங்கள்
வேதனைப்படுமிறக்கும்பிறக்குமேல்வினையுஞ்செய்யு
மாதலாலிவையிலாதானறிந்தருள் செய்வனன்றே,,

என்ற சுருதிபோதத்தால் இறைவனே அவ்வத்தேவதையே போலும் வெளிப்பட்டநுக்கிரகியாநிற்பர். அதுகொண்டொவ்வொரு தேவதையின்பேரால் ஒவ்வொரு மதங்களுண்டாகி அவர்பால் ஆஸ்திகம் நிலைபெறத்தொடங்கிற்று. இவ்வாஸ்திகமதங்களே நாஸ்திகத்தலையெடுப்பை யடக்கிற்றென்னலாம். இதன்பிறகு,

சுவேதாசுவதரம் 6 ம் அத்தியாயம் 14 ம் வாக்கியம்

"பிரமத்தைச் சூரியபிம்பம் விளங்கச் செய்யமாட்டாது.

சந்திர நட்சத்திரங்களாலுமாகாது. இந்த மின்னலும் விளங்கச்செய்யமாட்டாது இந்தத்தீ எப்படிவிளங்கச் செய்யும், தாமாக விளங்குகிற அவரைப்பற்றிக் கொண்டேயாவும் விளங்குகின்றன, இவையாவும் அவரது விளக்கத்தினலேயே விளங்குகின்றன." என்றதாதியபோதங்களால்,

சூரியவிம்பமாதிய எந்தப்பதார்த்தங்களும் கடவுளன்று. அவைகடவுளினின்றும் வேறுனவைகளாகி அவரது ஆதாரவிலுள்ள பதார்த்தங்களென்றுந்தெரிந்துகொண்டனரறிஞர். அவ்வறிஞரது பேரன்பிற்கிரங்கிப் பரமேசுவரர்தாமே,

முண்டகோபநிஷத்து.

3. வது முண்டகம் 2. வது கண்டம் 3 வது வாக்கியம்.

"இப்பரமாத்துமா (கடவுள்) நல்ல சொற்களினுலே பெறப்படமாட்டார், புத்தியினுலுமில்லை, பலகேள்விகளினுலுமில்லை, யார் அவரை விரும்புகிறுர்களோ, அவர்களால் அவர் பெறப்படுகிறுர். பரமாத்துமா (கடவுள்) அப்படிப்பட்டவருக்குத்தமது சொரூபத்தை விளங்கச் செய்கிறுர்,, என்ற சுருதிபோதத்தின்படி பண்டைக்காலத்துவழக்கிலும் இப்பொழுதும் வெளிப்பட்டநுக்கிரகிக்கிறுர். அவ்வெளிப்பாடானது,

சாந்தோக்கிய உபநிஷத்து

8 வது பிரபாடகம் 3 வது கண்டம் 4 வது வாக்கியம்

"அப்படிப்பட்ட இந்தப் பிரமத்தின் (கடவுளின்) பெயர் சத்தியம், அவர் நிரவயவர், நிஷ்கிரியர், சாந்தர், அவர் அசிந்தநீயர், நிர்லிப்தர், முத்திக்குச்சிறந்த சேதுவை (சுனையை) ப்போன்றவர். மேலுங் கொளுத்தப் பட்ட கட்டையிலிருந்து வெளிப்படுகிற அக்கினியைப்போலும் ஸ்வப்பிரகாசர்." என்றபடி அக்கினி தன் அநுற்பூத நிலைமையில் யாதொரு தன்மையும் வெளிப்படாதிருந்தவுண்மையினின்றும், உற்பூத நிலைமையில்ஒளி, வெம்மை, ஸ்வரூபங்களையுடையதாய் வெளிப் பட்டுத்தன துகிரியை நடாத்தி நிற்றல்போலவேயாகும். அப்படி யானலும்,

புஹதாரணியோபநிஷத்து.

3-வது அத்தியாயம் 4-வது பிராமணம் 8-வது வாக்கியம் "பரமாத்துமாவை(கடவுளை) அன்பாகஉபாசித்தல்வேண்டும். யார்பரமாத்துமாவை யன்பாக உபாசிக்கின்றரோ அவருக்கு அன்பானது, (அன்பருக்கு அன்பராகிய கடவுளானவர்) ஒரு போதும் மறைவாவதில்லை," என்றபடி பேரன்பினர்பொருட்டு வெளிப்பட்ட அவரது அநுக்கிரகத் திருமேனியாண்டும் அவ் வன்பகத்தினின்றும் மாறுதலில்லாத (அழிவற்ற) தாய் விளக்கமுறுவதாம் என்பார் பெரியோர். அத்தகையகாட்சி வடிவத்தைத்தெரிசித்த பெரியோர்தாமே, அவரதுபின்சந்ததி களாகிய நம்மனேருந்தெரிசித்துய்வான் கருதித்தமது பெரு ங்கருணையினுலே தாங் கண்ட ஈசுவரனதநுக்கிரகத் திருமே

யின் பிரதியாரூபம் அமைத்துவைத்திருக்கப்பட்ட ஸ்தலமே ஆலயமாம். அவ்வாலயசேவைசெய்வதே விக்கிரகமாமென்றறிக.

இதனாலே, கடவுளுக்கு—வாஸ்தவ தேகமும், கற்பித (அலங்கார)தேகமுமுண்மையைச்சூசிப்பித்து நிற்றலால் வாஸ்தவதேகத்திற்குப்பிரதிமையில்லையென்றும், கற்பித தேகத்திற்கே பிரதிமாரூபமுண்டாயிருக்கிறதென்றும், கற்பிததேகத்தின்வழித்தானே வாஸ்தவதேக முண்மையாயிற்றென்றும், காண்பதறிவுடைமையாம். அந்த வுண்மைக்கு "மேலும், கொளுத்தப்பட்ட கட்டையிலிருந்து வெளிப்படுகிற அக்கினியைப்போலும்ஸ்வப்பிரகாசர்"என்ற போதமே போதிய சான்றுதல் காண்க.

இவ்வருட்டிருமேனியாகிய காட்சிவடிவத்தை யிகழ்ந்து காணுதை பரிபூரணத்தைத் தேடித்திரிபவர் ஒரு காலத்தும் பெறமாட்டாரென்பதும் நிச்சயமாம். அந்தவுண்மை,

'வித்தினைத்தேடி முளையைக்கைவிட்டவர்
பித்தேறிமாள்வரென்றுந்தீபற
பிறப்பிறப்பரென்றுந்தீபற''
அல்லது
''வித்தினைத்தேடி முளையைக்கைவிட்டவர்
பித்தேறினர்களென்றுந்தீபற
பெறுவதங்கென்பெணேயுந்தீபற''

என்ற போதத்தால் ஸ்பஷ்டமாயிற்று.

ஆகவே, வாஸ்தவதேகத்தை (சர்வவியாபகத்தை) அறிவுறுத்துவான் முன்னின்ற கற்பித (அலங்கார) த்திருமேனியையறிந்து கோடற்குக் கருவியாயுள்ள மந்திரதேகம், தந்திரதேகம், யந்திரதேகம், என மூன்றுதேகங்களுண்மையுங் கேட்கப்படுகின்றன. அவற்றுள் மந்திரதேகமென்பதுதான் ஆலயத்திற்காணப்படுஞ் சிவலிங்கமாதியவாம். தந்திரதேகமென்பதுவோ வேதசிவாகமங்களாம். யந்திரதேகமென்பதுவே பஞ்சவிம்சதியாதியகோட்டங்களில் மூலமந்திரம் பீஜாட்சரங்களையடைக்கப்பட்டுள்ளதாம். இம்மூன்றனுள் வேதசிவாகமப்பற்றுண்மை சாமான்யக்கிரகணசாதனமெனவும், ஆலயசேவைப்பற்றுண்மை விசேஷக்கிரகணசாதனமெனவும், கேட்கப்படுதலால் யந்திரபூசையை மத்தியக்கிரகணசாதனமென்னலாம் போலும். ஆனல் பொதுவாக ஆலயத்திலே யந்திரஸ்தாபனமும், மந்திரத்தால் மூர்த்தியாவாகனமும், ஈசுரநாமோச்சாரணமுதலிய சுருதிமுழக்கமும், உண்மையாமென்பதையுமிங்கே ஞாபகப்படுத்திக்கொள்கிறேன். இதுநிற்க இனி,

8-வது வினா—சுருதிசாரஞ் சாமான்யமென்றால் வேதாந்திகள் சம்மதிப்பார்களா? என்பதற்கு,

விடை—உண்மையான வேதாந்திகளெல்லோரும் அப்படித்தான் சொல்லுகின்றார்கள் என்பதேயாம். ஆகவே போ

லிவேதாந்திகள் தாம் ஆலயசேவை யகாவசியகமாமென்பாரெ ன்பது சூசிப்பிக்கப்பட்டது. எனெனின்:—

வேதாந்திகளென்றால்—வேதங்களின் சிரோபாகத்தையு முணர்ந்தவர்களென்பதுதான் தாற்பரியம். சிரோபாகமெ னபது ஆதி, மத்ய, அந்தம் (அடி, நடு. முடி) களின் மூன்றாவ து பகுதியையே குறிக்கும். அப்படியானால் — பூர்வத்திலே தைத்திரியம், பௌடிகம், சல்வகாரம், அதர்வம், எனக்கிடந்த வேதங்களை வியாசமகார்ஷியால் இருக்கு, யசுர், சாமம், அத ர்வணம் என நான்காக வகுக்கப்பட்டபிற்பாடு அவ்வொவ்வொ ருவேதமும்,

I ஸம்ஹிதை (மந்திரம் அல்லது ஸ்தோத்திரம்) என்ற அடியும்

II ப்ராஹ்மணம் (பூசுராசாரவிதிகளின் வியாக்கியானம்) என்ற நடுவும்,

III உபநிஷத்து (இரகசியம் அல்லது ஞானம்) என்ற முடியும்

ஆக மும்மூன்று பாகங்களை யுடைத்தாயே யமைந்திருக் கிறது. ஆதலின் அவற்றுள் மூன்றாம்பகுதியாகிய உபநிஷத் துக்களையும் நன்கு உணர்ந்து கொண்டவர்தாம் வேதாந்திக ளெனப்படுகின்றனர். படலானே,

அவ்வேத சிரசாகிய உபநிடதங்களிலே முந்திய 6—வது

வினவுக்கு விடையிருக்குங்காலறிவுறுத்தபடி சிவலிங்கார்ச்சனமே இன்றியமையாத மோக்ஷசாதனமாமென்று கூறியிருத்தல் ஸ்பஷ்டமாம். அதுவுமன்றி,

## நாராயணேபநிஷத்து.

பரசிவாராதனத்தை—அபிஷேகம், அர்ச்சனை, அலங்காரம், பிரதக்ஷிணம், நமஸ்காரம், வாத்தியம், இத்தியாதியுபசாரங்களோடு நடத்துமுறைமையை நன்கு வெளிப்படுத்துகிறது. இங்ஙனம் பல உபநிஷத்துக்களின் மூலமாகவும், ஆலயவழிபாட்டின் மான்மியம் புலப்படுதலுடன், அருணசலம், சிதம்பரம், காசி, முதலிய புண்ணிய ஸ்தலபுராண சூசகங்களும்வெளிப்படுகின்றனவென்பார் பெரியோர். அன்றியும்,

## ஜாபாலோபநிஷத்து.

“மகாருத்திரனுக்கு நிவேதனஞ்செய்யப்பட்ட பிரசாதத்தைப் புசிப்பாயாக. ருத்திரனுக்கு ஆராதனஞ் செய்யப்பட்ட நீர், பால் முதலியவற்றைக் குடிப்பாயாக. ருத்திரனுக்கு ஆராதனஞ்செய்யப்பட்ட சந்தனம், புஷ்பம், முதலியவற்றை முகர்ந்து அனுபவிப்பாயாக.” என்று வலியுறுத்துகின்றது.

ஈண்டு உபநிஷத்துக்களெல்லாம் ஆலயவழிபாட்டினுண்மை அதனெழுங்கு, அதன் பிரயோஜனங்களேயே வலியுறுத்து

நிற்றல் திண்ணமேயாம். அத்துடன் இரண்டாம் பகுதியில் (வேதமத்யமாகியப்ராஹ்மணத்தில்)

சாமவேதம் சட்விம்சப்பிராமணம் பிரபாடகம்5 கண்டம் 10ல்

"உலகத்திற்குக் கேடுண்டாகுஞ் சந்தர்ப்பங்களிலே- தேவாலயங்கள் நடுங்குகிறதையும், பிரதிமாரூபமான தைவங்கள் சிரிக்கிறதையும், அழுகிறதையும், பாடுகிறதையும், கூத்தாடுகிறதையும், வாய்களை சதிறக்கிறதையும்,வேர்வையை விடுகிறதையும், கண்களைத் திறக்கிறதையும், மூடுகிறதையும், நடக்கிறதையும் பிறசிலகாரியங்களையும், புத்திமான்கள் காண்கிறார்கள்" என்று கோஷித்தலுங் கண்டாம்.

அங்ஙனமேஆக்கமுண்டாகுஞ் சந்தர்ப்பங்களில் பலநன்னிமித்தங்களும் காணப்படுகின்றன வென்பார் பெரியோர். அப்பால்,

முதலாம்பகுதியில் (ஸம்ஹிதை யென்ற வேதத்தினடியில்) விக்கிரகங்களை ஆவாகனஞ்செய்யும் விஷயமாய்க்கணக்கற்ற மந்திரங்களேற்பட்டிருக்கின்றனவென்றும், விக்கிராரதனத்தை யாதரிக்கிற பலகுறிப்பான வாக்கியங்களுண்டாயிருக்கின்றனவென்றும், வேதமுடையார் கூறுப.

உண்மை யங்ஙனமிருக்கவும்,ஒவ்வொருவேதத்தினுமுள்ள

ஆதிமத்தியாந்தங்களிலெல்லாம் விக்கிரகாராதனமே மோட்ச சாதனக்கருவியாமென்பது நிராட்சேபமாயிற்று. அந்தவேதாந்தமாவ க்கியந்தானே வேதாதிகலைகள் பரவித்தியைகளன்று. அழிவற்றபொருளை எதனாலறிகிறார்களோ அதுவே சிறந்த வித்தை" என்று

(முண்டோகோபநிஷத்து) போதிக்குமானால், அழிவற்ற பொருளை எளிதே அறிதற்கருவியாயுள்ள ஆலயவழிபாடே சிறப்புடையதாமென்று வலியுறுத்துமானால், சுருதிவிசாரம் சாமான்யமென்பதை உண்மையான வேதாந்திகள் ஏன் சம்மதிக்கமாட்டார்கள்? உண்மையான வேதாந்திகளனைவரும் சம்மதிப்பார்கள் என்க. அப்படியானால்,

பிரமகீதை முண்டகோப நிடததாற்பரியம் 3—4—ல்

"இங்குகாமறியவேண்டுவதிரண்டுவிச்சையவ்விரண்டினி லொன்று, பங்கமாமபரைபரையெனப்படுமொன்றதிற்பழமறைநாலும், அங்கமாறுண்மையமையிதிகாசமாதிகளபரையாம் மற்ற, தெங்குமாய்நின்ற தொன்மையாதொன்றுலெய்தலாமதுவிறையருளால்"

"காணவோருருவுமின்றியேதனக்கோர் கண்செவிமூக்குவாயின்றிப், பாணிபாதங்களின்றி நுண்ணியதாய்ப்பற்றியபொருளெல்லாங்கடந்து, தானுவாயெல்லாந்தோன்றுதற்கிடமாந்த

த்துவந்தன்னைத்தன்னாலே, யாணியாயறியும் அறிவதுவிச்சை யாவதுபிரிதெலாமவிச்சை"

என்று வலியுறுத்துமாறென்னை? யெனிற் கூறுதும்;—

இங்கே "பற்றிய பொருளெலாங்கடந்து தானுவாயெல்லாந்தோன்றுதற்கிடமாநசத்துவம்" என்றது 'லிங்கம்' என்பதேயாம், 'தன்னாலே யாணியாயறியும் அறிவு' என்றது 'ஆராதனத்தையேகுறிக்கும். ஆதலின், சிவலிங்காராதனமேபரவித்தையென்பதுதான், இச்கவிகளின் தாற்பரியமாமென்பார் மேலோர். அந்தவுண்மை மேல் 'லிங்கம்' என்றபதப்பொருளை விவரிக்குமிடத்து நன்குவெளியாம். ஆயினும், சிவலிங்காராதனமேபரவித்தையென்னு முண்மையை விவரித்துக்காட்டிய கைவல்யோபநிடத தாற்பரியத்தை யாதிரமீண்டெடுத்துக்காட்டுகின்றேன்.

கைவல்யோபநிடததாற்பரியம் 5.6.7.8.9 - களில்

1. பிரவித்தையின் சொரூபத்திற்கு சாதனமானயோகம்

"தக்கஞானத்தைத்தான்பெறற் பொருட்டுத்தனியிடந்தனையடைந்திதய, துக்கமேவாமற் சுகாசனத்திருந்து தோடலைகழுத்துடம்பிவைநே, ரொக்குமாறிருத்திப் பூதிகொண்டிந்தவுடம்பையுத் தூளனம்பண்ணி, மிக்கவாய்வருமிந்திரியங்களை யெல்லாம்விடயமே லெழாவகைவிலக்கி"

நிஷ்களசொருபம்.

2. 'பத்தியாற் குரவன் பதம்பணிந்திதய பங்கயந்தனை
னினைந்ததிலே,நித்தமாயொருவரானினைப்பரிதாய் நிமலமாயெ
ங்கணும்நிறைந்து,சுத்தமாய்ச்சாந்தமாயனைத்தல குந்தோற்று
தற்கியோனியாய்ச்சுபாவ, சித்தமாயமுதாயருவமா யொன்றாய்
ச்சிற்சதானந்தமாய்ச்சிவமாய்''

லீலாவிக்கிரகம்.

3. ''உரியநால் வேதத்தோமெனும் பொருளாயுள்ளதாய
ள்ளவெப்பொருட்குங், கரியதாய்நின்றவொன் றினைக்காளகண்
டமுங்கண்ணொருமூன்றும், பிரிவிலாமங்கை பாகமுமாகப் பே
ணுநற்பாவனைபெறுவான், அரியதாயருளினால்வரும் விச்சை
யதனினாலதனையேயடையும்''

சிவசொருபத்தின்றன்மை

4. ''தெரிவரியசிற்கனமாய்த்திகழ்சிவனே திசைமுகனும்
அரியுடனவ்வரனுமவன் அமரரதிபதியுமவன்
துரிசறவேயக்கரமாய்ப்பரமாகுஞ்சுராட்டுமவன்
எரியுமழல்காலனவன்இந்துவொடுபிராணனவன்''

பரசிவசொருபத்தியானமே மோட்சசாதனமாம்பரவித்தை

5. "ஒழிந்ததொரு பொருளில்லையுள்ளதெலாமவனே முன்
கழிந்தபொருள், மேலும் வரக்கடவபொருள் தானுமவன்
மொழிந்ததனிப்பரவிச்சையவிச்சையெனுமுற்றுமவன்
இழிந்தபிறப்பறவேறோர்வழியில்லையிவனொழிய"

எனப்படுதலால் இவ்வைந்து கவிகளின் உண்மைகளை யுள்ளவாறே யறிவுறுக்கக்கூடிய நல்லாசிரியனை யடைந்துவிசாரித்துணர்வார்க்கு, எல்லாம் வல்ல இறைவனை அருள்வடிவக்காட்சியிற்றெரிசித்து அகத்துட்கொண்டுய்தலெனப்படும்ஆலயவழிபாட்டை (விக்கிரகாராதனத்தை) நோக்க சுருதிவிசாரம் சாமான்யமேயாமென்னும் நிச்சயம் நன்கு புலப்படும்.

இவ்வுண்மையைமறந்து உபநிஷத்துக்களே "பரவித்தை" என்பாரு முலகத்திலிருக்கலாம். அவர் கூற்று வேதத்தின் முதலிடை (ஸம்ஹிதை-ப்ராஹ்மணங்) களைக்காட்டிலும், கடையாகிய உபநிஷத்துக்களே விசேஷமாமென்றுபசரிப்பதாயிருக்குமென்னுமளவில் எமக்கும் அஃதுடன்பாடேயாம். அம்மட்டினன்றி ஆலயவழிபாட்டிற் சிறப்புடைத்தென்னவருவரேல் அடியையும், நடுவையும் விடுத்துச் சிரசைத்துண்டு படுத்திக் கவுரவப்பட்டஞ் சூட்டுதெலாலவரிழுக்குறுவதோடமையாது,

"கற்றதனலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழாஅரெனின்" என்ற சுருதிபோதத்தோடு முர

னுறுகின்ற அவர் கூற்றும் நிஷ்பிரயோஜனமேயாதலின் அவர் கொள்கைக்கு உலகம் என்ன சொல்லுமோ அஃதெம்பொறுப்பன்று இந்தமட்டில் விக்கிரகாராதனமேபாவித்தையென்னும் உண்மை வலியுறுத்தப்பட்டது. அதற்கு, வேதாந்த பாஷிய கர்த்தரும் ஜகத்குருவென்று பிரசித்திபெற்றவருமாகிய ஸ்ரீமத் ஆதிசங்கராசார்ய சுவாமிகள் சந்திரமௌலீஸ்வரரை வைத்துப் பூசித்துவந்ததும், பிரதிஷ்டாஆலயங்கடோறும் போய்வழிபாடு செய்ததும், அவர்போலவே அவர் பரம்பரையில் யிற்றவரை ஆசாரியப்பட்டம் வகித்துள்ள சுமார் 72 சங்கராசிரம சுவாமிகளும் விக்கிரகாராதனத்தை ஆசரித்துவருவதுமோர் சான்றாயிருத்தலறிக.

இங்ஙனம் மேலோரெல்லாம் அங்கீகரித்துள்ள ஆலய வழிபாடு (விக்கிரகாராதனம்) அவாந்தர கற்பிதம் (இடைக்காலத்து நியமம்) என்றும், அதுகீழ்மை வினைபெறும், பிதற்றித்திரிவாரும் தம்மை வேதாந்திகளென்று சொல்லி யழிகின்றனர். அவர்களை போலிவேதாந்திகளென்னாமல் வேறென்னதான் சொல்லலாம். அவரது வெற்றுரையை இங்கே சங்கிரகித்தாவது சொல்லித்திரவேண்டியது அவசியமாதலிற் சொல்லித்தீர்க்கின்றேன்.

* சித்தூர் ஜில்லா அதாலத்துக்கோர்ட்டுத்தீர்ப்பு என்னும் புஸ்தகத்தில் 54 வது பக்கத்தில்

"மாதாசில்பி பிதாசாஸ்திரம் அரூபம் ரூபமான சம்ய யாத், பிண்டோத்பவஞ்சைவதயாபுத்ரி விதங்கர்மாதா" என்ற சிற்பசாஸ்திர சுலோகப்படி தேவாலயம், பிரமாலயங்களில் சிருஷ்டித்து வைத்திருக்கப்பட்ட விக்கிரகங்களுக்கு சிற்பிமாதாவென்றும், பிதா சாஸ்திரமென்றும், கேட்கப்படுதலினாலே எங்களால் சிருஷ்டிக்கப்பட்ட விக்கிரகங்களை, திரிகாலமும் நீங்கள் பூசித்து வணங்கிவருவது எங்களை வணங்கினதல்லவா? இது உமக்குத் தெரியாமற் போனதென்ன? என்கிறார் மார்க்க சகாய ஆசாரி.

இவர் ஓர் கற்பனாபுருஷர். இவரால் பஞ்சாங்ககுண்டையொன்றவொரு கற்பனாபுருஷரை வென்றதாகக்கட்டப்பட்டிருப்பது இந்தசுவடி. இவர்(மார்க்கசகாயஆசாரி) ஒரு சிறந்த வித்துவான் என்று இவரினத்தாரால் மதிக்கப்படுகிறார். அன்றியும், இவர்—வேதியர் வேதங்கட்குரியவரல்லரென்றும், தம்மவர் தாமே விசுவப்பிராமணர் ஆதலின் வேதவேதாந்தங்களுக்குரியவர் தாமேயென்றும், சொல்லுகிறவராயுமிருக்கிறார். இவரினத்தாரை நோக்கி, உம்மவரை, ஏன் வணங்க வேண்டும்? வணங்கவேண்டினும் விக்கிரகமேதுக்கு? என்பதாதிய கேள்விகளெழுந்தால் என்னதான்சொல்லித்தப்புவரோ அது ஈசுவரனுக்குத்தான் தெரியும். இவரதறிவு இப்படிப்போகவும். விச்சூர் முத்துக்குமாரசுவாமி முதலியார் என்பவர், தாமே

மூதிய "கண்ணிருந்தும் மக்கள் பலர் குருடராகவேதேன்" என்னும் புஸ்தகத்தில், 52, 53, 54 ஆம்பக்கங்களில்,

"ரிக்வேதஸம் ஹிதை சொல்லப்பட்ட வேதகாலத்தில் (வைதிக மார்க்கம் தழைத்தோங்கிய காலத்தில்) ஆலய பூசை கிடையாது. விக்கிரகங்கள் பொம்மைகள் கிடையா; உபநிஷத் காலத்திலும், தர்சனகாலத்திலுங்கூட அர்ச்சாமார்க்க மிருந்த தில்லை. பௌத்த ஜனங்களிடமிருந்து ஹிந்துக்கள் கற்றுக் கொண்ட வித்தையிது.

புத்தருடைய காலத்துக்குப் பிற்பட்ட காலங்களில் பௌத்த ஜனங்கள் பகவான் புத்தர் கூறிய உபதேசத்தை மனத்தால் எட்டியறிய முடியாமல் அவரையே தெய்வமாக வெண்ணி அவரைப்போன்ற பொம்மைகளைச் செய்து, அந்தப்பொம்மைகட்கு இந்திரன் சந்திரன் முதலிய தேவர்கள் குடை பிடித்தல், சாமரை வீசுதல், முதலிய உபசாரங்கள் செய்வதாகப் பொம்மைகள் செய்து அமைதது, கோயில் கட்டி உற்சவாதிகள் செய்ய ஆரம்பித்தார்கள்.

பாமரஜனங்கட்கு வேடிக்கையும், பாணமும், மத்தாப்பும், மேளதாளக்காபுருவும், மெய்ம்மதமாதலான் கணக்கிறந்த ஜனங்கள் பௌத்தமதத்தில் சேர்ந்துவிட ஆரம்பித்தார்கள். இதைப்பார்த்தார்கள் அக்காலத்துப் பிராமணர்கள். இது

எதடாவம்பாயிருக்கிறது! இந்துமதம் அழிந்துபோம்போலிருக்கிறதே, என்ன செய்யலாமென்று யோஜனை பண்ணி ஒரு முடிவுக்கு வந்தார்கள். பிற்பட்டு ஆலயங்கள் கட்டப்பட்டன. பொம்மைகள் வைக்கப்பட்டன. விக்கிரகபூசை செய்தார்கள். என்னும் பலவும் வழவழவென்று வாய்கூசாமற் சொல்லியிருக்கிறார்.

இங்ஙனம் மூன்றுபக்கங்களை துஷ்டவாசகங்களால் நிரப்பிவிட்ட இவர் தாம் ஒருபரமவேதாந்தி யென்றும், பண்டிதசிரோன்மணி யென்றும், சில ஜனங்களால் இது காறும் மதிக்கப்பட்டிருந்தனர். இப்போது சிலகாலமாக தமது முந்தியவேதாந்த ஆராய்ச்சியின் பலனுக்கைவரப்பெற்ற உயர்பதவியான கிறிஸ்துமார்க்கத்திற் பிரவேசித்து விட்டனரென்னு மோர் வதந்தியும் பரம்பிவருகிறது. ஆகலின் இன்னோரன்ன போலிவேதாந்திகளின் உபதேசத்திற்குச் செவிகொடுப்பாரனைவரும் கூடிய சீக்கிரத்தில் ஞானஸ்நானம்பெறலாமென்பது நிச்சயமாவதையு மிங்கேஞாபகப்படுத்தி விட்டேம்.

இனி—இவ்விருவர் கொள்கைகளையும் ஆராய்வாம். ஆசாரி தம்மவரைவணங்குதற்காக விக்கிராகாராதனம் ஏற்படுத்தப்பட்டதென்கிறார். முதலியாரோ பௌத்தமதத்திற் பிரவேசிப்பாரைத்தடுத்தற்பொருட்டாகவும், ஆரியமதம் நிலைபெறற் பொருட்டாகவும், விக்கிரகாராதன மேற்படுத்தப்பட்டதென்

கிறார். இவ்விருவர்சொல்கிற காரணங்களும் அறிஞர் அங்கீரிக்கக் கூடியனவல்ல. ஏன்? எனில்:—

ஆலயங்களிலே காணப்படுகிறஸ்வரூபங்களைப் போலக் கொடிமரம் போலவும், பலிபீடம் போலவும், காளைமாடுபோலவும், அம்மிக்குளவிபோலவும், யானைமுகமுள்ள ரூபத்திலும், முக்கண்—சதுர்ப்புஜம்—எண்டோள்—முதலிய பலவிலட்சணவடிவத்திலும், கம்மியர் அன்றுமின்றுமென்றுமுண்டாயிருந்தனரென்றுகேட்கப்படாததனால் கம்மியருக்குப் பிரதிமாரூபங்களாக அமைக்கப்பட்டிருப்பதே ஆலயமென்ன எவராலுமுடியாது. ஆதலின் ஆசாரி கூற்று அபத்தமேயாதலறிக.

அன்றியும், பௌத்த மதத்தில் கடவுளுண்மைகேட்கப்படாததனாலும், பௌத்தமதத்தினர் விக்கிரகாராதனத்தை வெறுத்துளாரென்று கேட்கப்படுகிறதனாலும், முதலியார் கூற்றும் மோசமேயாதல் காண்க.

இவ்வளவில் இவ்விருவர் கூற்றுக்களும் அபத்தவாக்குகளாதலின் வெற்றுரையெனவும், இவற்றை யோராதரவாக் கொண்ட மூடமக்களாற் கலக்குறுத்துவதாகலின் துஷ்டவாசகமெனவும், ஈண்டனுபாதகமாகக்கொண்டகற்றினும்.

இனி—விக்கிரகாராதனம் பௌத்தகாலத்திலென்கிலும் எற்பட்டிருக்கலாமோ? என்னுமொரு கேள்வியுந்தலை யெடுக்

காதொழியுமாறு மற்றொருகதை மாத்திரஞ் சொல்லி முடிக்கிறேன்.

பௌத்தகாலம் — கலிபிறந்து 2780 ஆம் வருடமுதல் 3500 ஆம் வருடம் வரையுள்ள 720 வருடங்களேயாகு மென்று பண்டித சிரேஷ்டரான ஒருபங்காளியின் அபிப்பிராயமாக வெளிவந்த "பிராசீன இந்தியா" என்னும் புஸ்தகத்திற் கணிக்கப்பட்டிருக்கிறபடி இற்றைக்கு 1500 வருடங்கட்கு முன்னருள்ளகாலமேயாயிருக்கவேண்டும். அந்தக் காலத்தில் விக்கிராராதனம் உண்டாகத்தலைப்பட்டதென்பது முதலியார் துணிபு. அப்படியிருக்கவும், ஒருமகம்மதிய பண்டிதரெழுதுகிறதாவது:—

இதுரீசு—என்பவருடைய சீஷர்கள் ஐந்துபேர்களுண்டு. அவர்கள் வத்துன், சுவாகு, எஊது, யகூக்கு. நசுறு, என்னும் ஐவரேயாவர். இவ்வைவரும் மிகுந்தபடிப்பாளிகளாகி மனிதருக்கு நேர்வழிகாட்டிக்கொண்டிருந்தார்கள். இவர்களுடைய, குருவாகிய இதுரீசு—என்பவர் வானலோகம் போனவுடன் அச்சீஷர் ஐவரும் வெளியிற் புறப்பட்டு ஊரூராய்ப்போய் இல்மை (அறிவை) ப்படிப்பித்துக்கொண்டிருந்தார்கள். இவர்கள் காலத்திற்குப் பின் இவர்களைப்போல ஐந்து சிலைகளையுண்டாக்கி ஐந்து பெயருடைய பெயராலும் ஸ்தாபித்துத்தெரிசித்துக்கடவுளை வழிபட்டு இசுலாமார்க்கத்தின் பேரில் மவுத்தாஞ

ர்கள். பின்பு அவர்கள்பிள்ளைகளிடத்தில் சாத்தான் வந்து அந்தச்சிலைகளுக்குள்ளே புகுந்துகொண்டு அவர்களைத் தன் வழிப்படுத்திக்கொண்டான்.

அப்பால் நூகு (நோவா) என்பவர்காலத்திலுண்டாயஜலப்பிரளயத்தில் ஐந்து சிலைகளும் முழுகிப்போயின. அந்தமட்டில் ஒழிந்து போகவிடாமல் இசுமாயில் காலத்திற்குப்பின்னும் அவ்வைந்து சிலைகளையும் சாத்தான் வெளிப்படுத்திவிட்டான், அவைகளப்படியே வணங்கப்பட்டுவருகின்றன. என்பதேயாம்.

இதைக் "கசசுல் அன்பியா" என்னும் புஸ்தகத்திலும் நன்கு விஸ்தாரமாகக் காணலாம். அதுவும் அன்றி, அந்தநாளிலிருந்த விக்கிரக வழிபாடுகள்:—

I வெளியே புறப்படச்செய்கிறது.

II மண்டபம் ஆசனமிட்டெழுப்பண்ணி அவைகளுக்கு எதிரே குறுபான் செய்கிறது. (ஆடு, கோழிகள் அறுக்கிறது.)

III அக்குறுபான் வஸ்துக்களை (ஆடு, கோழிகளின் இறைச்சிகளை) நெருப்பிற் போட்டெரிக்கிறது.

IV அந்தநேரத்திலே சஜிதா (பஞ்சாங்க வணக்கம்) செய்கிறது.

V அப்பால் சாராயங்குடிக்கிறது.

VI கைமணியடிக்கிறதும், மேளதாளங்களிடுகிறதும்

VII வெறிகொண்டு போய் மிருகங்களைப்போல பெண்களுடன் மறைவின்றிக்கூடுகிறது.

இங்ஙனம் பல ஆபாசச்சேஷ்டைகளுடன் அந்நாட்டிலுண்டாயிருந்தனவென்றும். ஆதியில் ஐந்து பிரதிமைகளாகமாத்திரமிருந்ததுபோய்க் காலாந்தரங்களில் [1700] பிரதிமைகள் உண்டாய் விட்டனவென்றும், அந்த ஏதுவால் அந்நாட்டு ஜனசமூகங்கள் 1700 கூட்டக்காரராகப்பிரிந்து விட்டார்களென்றும், அங்ஙனம் ஜனங்கள் பிரிவுபட்டுப்போனது நூகு (நோவா) என்பவருக்குப்பொருத்த மில்லாததினால், ஜனங்களுக்கிடையில் வந்து, அவர்:—

"லா இலா இல்லல்லாகு, வயின்னிநூகு

றசூலுல்லாகி" என்றகலிமாவை (விண்ணப்பத்தை) யோதிவிக்கிரகங்களை வணங்கக்கூடாதென்று போதிக்க ஆரம்பித்தார் என்றும், அப்படி 600 வருடங்கட்கு அதிகமாகவே பாடுபட்டும் அவரது முயற்சி அணுவளவும்பயன்படாமற் போனதுமல்லாமல் அவர் சனூனென்னும்பயித்தியம் பிடித்தவராகவே மதிக்கப்பட்டார், தருமசீலன் என்னும் அரசனாலும், அவன்

குமாரனான தவுலீன் என்னுமாசனாலும், அவன் குமாரனான தைற தாசு என்னும் அரசனாலும், அவர்கடிந்து கொள்ளப்பட்டார்; இம்மூன்று இராஜதலைமுறைகளிலும் அவர் பலராலடிக்கப்பட்டும், காலைப்பற்றி இழுத்தெறியப்பட்டும் துன்புற்றார்; மண்ணாலும், கல்லாலும், எறியப்பட்டார்; பரிகசிக்கப்பட்டார்; அவரைக்கண்ணுற்ற ஜனங்களில் சிலர் அவருபதேசத்திற்குச் செவிகொடாமல் காதுகளைப்பொத்திக்கொள்வார்கள். சிலர் அவருக்கெதிரிலும் வரமாட்டார்கள்; இப்படி ஆண்களின் முன்புக்கும், பெண்களின் முன்புக்கும் அலக்சணுற்றுநின்ற அவருடைய 600 வயசு முடிந்த பின்பு ஜலப்பிரளயமுண்டாகியுலகமழிந்ததென்றும், விவரமாக அக் "கசசுல்அன்பியா" என்னும் புஸ்தகத்திற் காணப்படுதலும் ஸ்பஷ்டமாம்.

இவ்வறபிக்கதைகளை நோக்க 'விக்கிரகாராதன" வுற்பத்திகாரணம் முன்னிருவர் கூற்றுக்களினின்றும் வேறாயிற்று. இவற்றை யோசிக்குங்கால் ஏதோ மனம்போன போக்கில் கதைகளெழுதிவைத்துவிடுகிறதற்குள்ளதோர்தத்துவம் அக்காலத்தவருக்குமிருந்திருக்கலாம் போலும். ஆதலின் அங்கீகரித்தற் கொவ்வாத கதைக்காரணங்களைத்தள்ளிக்காலத்தை மாத்திரம் நோக்குமிடத்தில், இதுரீசு என்பவருடைய சீஷர்காலத்திற்குப்பிற்காலத்தி லிருந்துதான் விக்கிரகாராதனந்தொடங்கிற்றென்பது "மகம்மதியர்" கொள்கை. அப்படியானல்,

அவ்வாரம்பகாலம்—நூகு [நோவா] என்பவருடைய பெற்றோராகிய "லாமக்கரசன், புருசரசி" களின்காலத்திற்குமுன் காலமேயாதலால் இற்றைக்கு சுமார் 6000 வருடங்கட்கு முந்தியகாலமென்ன வேண்டும். எப்படி? எனில்:—

ஆதி மனுஷன் மனுஷியாகிய ஆதமும், அவ்வாவும் (ஆதாமும், ஏவாளும்) உலகத்திற்றோன்றி இற்றைக்கு 7000 வருஷங்களாயிருக்கலாமென்பது முகம்மதியரபிப்பிராயம். அவ்வாதித் தாய்தந்தைகளின் 1650 ஆம் வருஷத்திற்றான் நூகு (நோவா) என்பவர் ஜெனனகாலமென்றுஞ் சொல்லிக்கொள்கிறார்கள். அந்த நூகு (நோவா) என்பவருக்கு 600 வயசு முடிந்ததும்,

ஆதநபி பிறந்து 2250 வருஷம் முடிவான நாளாயிருக்குமென்று "கசசுல் அன்பியா" வும் படிக்கிறது. அப்பாற்றான் சலப்பிரளயமுண்டாயிற்றும். ஆகவே 1650-ம் வருஷத்திற்றோன்றிய நூகு (நோவா) என்பவரின் பிதாவின் காலத்திற்கு முந்தியகாலமாதலால் இற்றைக்கு 6000 வருஷங்களுக்குமுன் காலமே விக்கிரகாராதனஆரம்பகாலமென்பது "முகம்மதியர்" கொள்கை யென்றுமெண்க

இதனாலே—முதலியார் பௌத்தகாலத்திற்குப் பிற்காலந்தான் விக்கிரகாராதன ஆரம்பகாலமென்றது மோசமாய்

முடிந்ததைக்கண்டாம். இனி,

அருளாகமமும், ஆதிச்சின்னமும், என்றபுஸ்தகத்தில் 12-ம்பக்கத்தில் ஆதிச்சின்ன பரிசோதனசபைக்கோர் பிரஜிடெண்டாயிருந்த "ஸ்மித்துரை" 1876-ம்ஹூ இறந்தபின் ராஜா என்னும் ஒருமுகம்மதிய துரையால் சூரியபகவானுடைய கோயிலொன்று கண்டு பிடிக்கப்பட்டதாயும், அதில், அதற்குச்செலுத்தின காணிக்கைகளின் பேரடங்கின 50000 செங்கற்புத்தகங்களும், கண்டெடுத்து இங்கிலண்டிலிருப்பதாயும், அது கொண்டு கி மு. 5000 வருஷங்களுக்குமுன்னருள்ள காலநிர்ணயம் வெளியாகின்றதென்றும், வலியுறுத்துதலால் இற்றைக்கு 7000 வருஷங்கட்கு முற்காலத்திலும் விக்கிரகாராதனம் உண்மையாதல் மலைமேல் விளக்காம்.

இது கொண்டு ஆசாரி, முதலியார், அறபிகள், மூவருஞ் சொல்லுகிற காரணங்களைப்போலவே அவர்கள் சொல்லுகிற கால நிர்ணயங்களும், அபத்தமாதல் நிரூபிக்கப்பட்டது. படவே, நம்மவர் சொல்லுகிறபடி ஜகோதயப்பிரதமைமுதல் விக்கிரகாராதனம் ஏற்பட்டுள்ளதென்பது மறுக்க முடியாதவுண்மையே யாயிற்று. அது (விக்கிரகாராதனம்) ஈசுவரனுடைய வழிபாடாதலாலே, ஆதிமுதலிருந்திருக்கவே வேண்டும். அதுவும்,

"தோற்றுழியுயிர்களியாவு மறிவினிற் றேற்றுந்தத்தம்
ஆற்றுநல்லொழுக்கந்தன்னலறிவுறுமதற்கு நாளும்

எற்றதோர்காலந்தன்னில்விருப்பொடுவெறுப்பாஞ்செய்திப், போற்றுறுதருமம் நீக்கித்தீவினைபுகுதுமன்றே" என்றபடிநல்லொழுக்கமேயுடையராயிருந்த பிரதமகாலத்துஜனசமூகங்களில் அவர்க்கு அநுக்கிரகிக்கும்பொருட்டு இறைவனும்வெளிப்பட்டு அவருடன் நின்று வேத சிவாகமங்களை யறிவுறுத்து உஜ்ஜீவிப்பருளிநிற்கும் அந்நாளில் இறைவனது காட்சிவடிவத்தை நேத்திரேந்திரியத்தின் வழியும், அவரது திருவாய்மொழிகளை சுரோத்திரேந்திரியத்தின் வழியும், கிரகித்து அகக்கோயிலினமைத்துப் பூசித்துய்வாராயிருந்தனர். என்ன வேண்டும்.

அப்பால், விருப்பு வெறுப்புக்களினுட்பட்டு நல்லொழுக்கத்தினின்றும் வழீஇத் தீவினைவசத்திற்புக்குழல் வாராயொழிந்த காலத்து ஜனசமூகங்களில் இறைவனது காட்சி அருமருந்தாயிற்று. அந்நாளில், ஒலிவடிவாயேயிருந்து வந்த வேதத்தை வரிவடிவத்திலமைத்தும், நேரிற்கிடைக்கப்பெற்றகாட்சித் திருமேனியை பிரதிமாரூபத்திலமைத்தும், ஆலயங்களையும், வேதபுத்தகங்களையும், பின்னவருஜ்ஜீவித்தற்பொருட்டாய் பெருங்கருணை மேலிட்டுள்ளமகான்மார்களால் ஏற்படுத்திவைக்கப்பட்டன. என்னவேண்டும்.

இவ்வாறு யூகிக்கலாமேயன்றி காலநிர்ணயஞ் சொல்லவல்லாரெவருமிலர். இருந்தாலும், வேதங்கள் வரிவடிவெழுத்

தில் வருதற்கு முன்னரேயே உருவடிவெழுத்தில் ஆலய முண்டாயிருந்த தென்பதே வல்லாரது அபிப்பிராயமாம். ஆதலின், ஆலயம்: முன்னருண்டானது பற்றி விசேஷமுடைமையென்பதொன்று. அன்றியும், நேத்திரேந்திரியத்திற்கு விஷயமாயிருத்தலாற் சிறப்புடைத்தென்பது மற்றொன்று. அதுவுமன்றி வேதங்களாற் புகழப்படுதலுடன், அறிஞானவரும் இறைவனையறிந்து அடைதற்கோர் சிறந்த கருவியென்றுபற்றி நின்றுய் தலமன்மேம்பட்ட தென்பதுவேறொன்று. இன்னமும்,

"வேண்டுவார் வேண்டிற்றெல்லாம் வேண்டியாங்கருள்வோன்" ஆக இறைவன் அன்பர்பொருட்டு ஆண்டுவிளக்கமுற்றிருத்தல்பற்றியுயர்வுடையதென்பது பிறிதொன்று. இந்த நியாயங்களால்ஆலயவழிபாட்டை நோக்க,சுருதிவிசாரம்சாமான்யமென்பதை உண்மையான வேதாந்திகளனைவருஞ்சம்மதிப்பர் என்றுமென்க. அந்தவுண்மைக்கு,

மாக்ஸ்மூலர் கடைசியாய் வெளியிட்டதமது.

Six systems of Indian Philosopy (இந்தியர்ஆறுதத்துவ சாஸ்திரங்கள் என்னும் புஸ்தகத்தில், திவ்வியதாஸ்தத்தர் என்பவர் எழுதிய:

"ஒன்றையறிவதற்குச் சொற்களும், பொருள்களும் அடையாளங்களாக இடப்படுகின்றன; சொல்லடையாளங்கள் செ

வியுணர் விற்குக்கருவியாகின்றன; பொருள்கள் கண்ணறிவுக்குக்கருவியாகின்றன; இவையே இவையிரண்டற்கும் வேற்றுமை. சொல்லடையாளங்களாகிய பாஷையை உபயோகிப்பதற்கு எந்தச்சமயவாதியும் ஆசங்கிக்க இடந்தராதபோது, இறைவனை வழிபடுதற்குக்கருவியாகிய பொருளடையாளங்களை ஆசங்கித்தல் என்னை?" என்னும் விஷயத்தை எடுத்துக்காட்டித் தமது துணிபு நிலையிட்டிருப்பதே போதிய சான்றுதலதிக. இந்தமட்டிற் சங்கித்தெழுப்பும் வினாக்களுக் கெல்லாஞ் சமாதானம் முடிவாயிற்று.

இவ்வினாக்களெல்லாம் நம்மினத்தார்களுள்ளேயே நாளும் நிகழ் வனவாக்கண்டாம். நம்மினத்தார்களென்றால், ஸ்மார்த்த, மாத்துவ, வைணவர், ஆகிய முத்திறத்தருமேயாவார். இம்மூவர்களிலும், நம்மிலுமுண்டாயிருக்கிற சிலதான்தோன்றிகள் பாற்கற்றுக்கொண்டுதான் இதர நிநேகிதருமிக்கேள்விகளை நம்பால் விடுக்கின்றனர். இங்கே பறையர் முதல் மறையோர் வரையிலுமுள்ள வெக்குலத்தவராயினுஞ்சரி:

I சிவநேசச் செல்வரெனப்படும் சைவரனைவரும் என்போலிகட்குச் சகோதரரேயாவார். ஆகவே,

II சைவரோடுகொள்வினை, கொடுப்பினைகளை, வைத்துக்கொண்டிருக்கிற ஸ்மார்த்த, மாத்துவ, வைணவர்கள், சிவப்

பெருஞ்செல்வத்திற்கு மாத்திரம் பாகஸ்தர்களல்லாதேபோ
லும், மற்றுஞ் சம்பந்தத்தா லுறவினராயே யிருக்கின்றனர்.
இவர் போலன்றி,

III சிவப்பெருஞ் செல்வபாகத்திற்கும், சிவநேசச்செல்வ
ருடன் சம்பந்தஞ் செய்துகோடற்கும், அருகரல்லாததால்
இதரரெனப்படும் கிறிஸ்தவர்களும், முகம்மதியர்களும், நம்
மை வெறுக்காதவர்களாயும், உலகவிஷயத்தில் நம்மிலுஞ்சிற
ந்த அறிவாளிகளாயுமிருப்பதால் நமக்கு இன்றியமையாச்சி
நேகிதர்களாயே யிருக்கிறார்கள். என்பதும் ஸ்பஷ்டமேயா
தலறிக.

இவ்வுண்மையால் உலகத்திலே காணப்படும் ஜனசமூக
ங்கள் அறிவாளிகட்குச் சகோதரராயும், உறவினராயும், ஸ்நே
கிதன்மாராயுமேயிருப்பதாக நாம் காண்கின்றோம். அத்த
கைய நமக்கு எந்த மதத்தினரும் விரோதிகளாகிறதில்லை
அப்படித்தானே ஒவ்வொரு மதத்தினருமிருந்து கொள்வாராகி
ல் உலகத்தில்மதச்சண்டையென்பது தலையெடுக்கவேமாட்டா
து. மேலுமிதரமதங்களைத் தூஷிப்பதுகொண்டு எந்த மதத்
தையாவது மேம்படுத்தி விடுதற்கேவராலுமாகாது. ஆதலின்,
இதர எந்தமதத்தின் பேரிலுஞ் சாடிவிடாதபடி எடுத்துக்கொ
ண்ட விஷய (விக்கிரகாராதன) த்தின் பேரில் மாத்திரம் நா
ன் போகின்றேன். அந்த என்னுடைய பிரசங்கமானது நான்

எடுத்துக்கொண்ட விஷயத்தை மாத்திரம் ஸ்தாபிக்கிறதாயிருக்குமேதவிர மதகண்டனத்திலொருசிறிதுந்திரும்பிப் பாராதென்பதும் நிச்சயமேயாம். ஆனாலும், விக்கிரகாராதனம் கூடாதகாரியமா மென்று சொல்லத்தலைநீட்டுகிற எத்தகையோருடைய வியாசமும் என்போலிகள் முன்பில் ஜீவித்திருக்கமாட்டாதென்பதையுமிங்கே ஞாபகப்படுத்திக்கொள்கிறேன்.

இன்றையத் தினத்தில், விக்கிரகாராதனம் (ஆலயவழிபாடு) இறைவனையறிந்தடைதற் கோர் கருவியாமென்பதைப் பேசுவான்றுணிந்ததே எனதாரம்பமாம். இருந்தாலும், இடையிலே நம்மிலும், நம்மினத்தாரிலும்,

"ஆசானநுக்கிரகமானலருநூலும்
பேசாமற்காட்டும்பெருமானே—" என்ற சுருதிவழிஉண்மையையுள்ளவாறே யுணர்ந்து கோடற்கருகராக்கும் ஒரு நல்லாசிரியனை யடையப் பெறாத தான்றோன்றிப் பண்டிதன்மார் அது விஷயமாக் கேட்கிற சில கேள்விகட்கெல்லாம் ஒரு விதத்திற் சமாதானங்கள் சொல்லித் தீர்க்கவேண்டியது மேற்பட்டது. இனி, அவர் பாற் கற்றுக்குட்டிகளாகியும், யாண்டுமீசுவரக்காட்சி பெற்றதாகச் சொல்லுதல் கேட்கப்படாத அபரஞான மூர்த்திகளாயெழுந்த அநாரிய ருபதேசத்தைத்த ழீஇயொழுகுவோ ராகியுமுள்ள இதரரின் அபத்தபோதனைசக்தியின் மயங்கி யுழல்வார்பொருட்டும்,

"ஆயாய்ப் பலகலையாய்ந்திடுந் தூயவருந்தவர்பாற்
போயாயினு முண்மையைத் தெரிந்தாயிலை" என்றபடி எவ்விதத்தாயினு முண்மையையுள்ளவாறுணர்ந்துகோடற் கியையாதே நின்று ஐதிகன் மாரை மூடரென்றெதுக்கியும், வைதிகன்மாரை அவிக்கிரகாராதனரென்று புதுக்கியும், அறியாமையினாலே வாயில் வந்தபடி பேசித்திரிவார் பொருட்டும், யாதும் பேசுதல் அநாவசியகமேயாம். ஆதலின், விஷயத்தின் துணிபையாலோசிப்பாம்.

வாஸ்தவத்திலிறைவன் கடவுளெனப் படுதலால் அவர் (கடவுள்) கடந்துநிற்கும் பொருளே யாயினரென்பது நாமெல்லாருக்குந் தெரிந்தவிஷயம். ஆதலின், கடந்துநிற்கும்பொருளாகிற அவர் நம்மாலுணரப்படுபொருளாவரேல், அங்ஙனம்அறியப்படும் பிரபஞ்சம்போல அழிபொருளொத்த அசத்தேயாய்ப்போவர். அங்ஙனமன்றி, எவ்வாற்றானு மறியப்படாதவியல்பினராயிருப்பரேல், அப்படிப்பட்டவர் யாண்டு மறியப்படாத முயற்கோடு, ஆமை மயிர்க்கம்பலம் போலச் சூனியப்பொருளேயாய்க் கழிவர். ஆனபடியால் இவ்விருவித தோஷத்திற்கும் அவரை ஆளாக்கிவிடாத படியே, (கேனோ-2-2ல்)"கடவுள்-அறியப்பட்டவருமல்லர்: அறியப்படாதவருமல்லர், என்னுமோர் சுருதிபோதமுங் கேட்கப்படுகிறது. படலானே, நமக்கெதிர்ப்பட்டுள்ள அழிபொருள்களைப்போன்று காணப்படா

தபடி அவர் நித்தியப்பொருளாக் காணப்படுகிறவரா யிருக்கின் றன ரென்பதே மரபாம்.

அவ்வுண்மையால் "புகலக்கருத வெட்டிடா நிறைபொரு ளளவையார் காண்பார்" என்றபடி "கடவுளை" அசத்தசித்து ரூபமாகிய திரிகரணங்களாலுங் காணமுடியாதென்பது சர்வ ஜன சம்மதமேயாம். ஆனதுபற்றியே அவர் (கடவுள்): சோத் திர நேத்திரங்களின்வழிக்கிரகிக்கிற நாமரூபமயமான இந்திரி யக்கிரகண (பாசஞான) த்தையும், அவற்றின் வேறுகிய மனோ விருத்தியை(பசுஞானத்தை)யுங் கடந்துஅதீதராய்நிற்கின்றார். நின்றாலும், வேறறநின்றுணரும் அநுபவஞான மாத்திரையால் விளங்கிக்கோசரிப்ப (விஷயமாகிற) வராயுமிருக்கின்றன ரென்பார் பெரியோர்.

அங்ஙனம் "வாக்குமனோதீதகோசரமாய்" நிற்குங்கடவுளை அவ ரது இவ்அதீத நிலையில் கண்டேமென்றுவது, காண்கின்றே மென்றுவது, காண்பேமென்றுவது, கூறுவாரெவருமிலர். எ வராலுமறியொணுத இவ்வதீதநிலையே அவருக்குவாஸ்தவ தேகமெனப்படும்.

அத்தகையவாஸ்தவநிலையிற்றானே அவர்(கடவுள்) கனிவி ன்றியிருந்துவிட்டால் சிற்றறிவும், சிறுதொழிலும், சிறுகியறி ந்ததனையும் மறந்து மறந்தறிதலும், மயங்கியறிதலுமே யியற்

கையிலுடைத்தாயிருக்கிற எத்துணையுமெளிய ஆன்மாக்கள், எத்துணையும் வலிய இறைவனை யறிந்துவழிபடுதல் கூடாதன்றோ? ஆதலின், பெருங்கருணைத்தடங்கடலாகிய அவ்விறைவன் தம்மை அவ்வான்மாக்களுணர்ந்து உபாசித்து உய்யும்பொருட்டு ஒரோர்காலங்களில், ஒரோரிடங்களில், ஒரோர் அன்பருக்காகக் கன்றைநினைந்துவரும் புனிற்றுப்போலவும், விறகின்கட்பிறந்த தீப்போலவும், மோரின்கட் டிரண்டவெண்ணெய்போலவும், வித்தின்கட்பிழிந்தெடுத்த எண்ணெய்போலவும், வெளிப்பட்டனுக்கிரகிக்கத் திருவுள்ளங் கொள்கின்றார். அங்ஙனந்திருவுளங்கொண்டவாறே,

அதிவீரராம பாண்டிய மகாராஜா

"உரகபரணத்திருமார்பு முமையொப்பனையாளிடப்புறமும்
சிரமாலிகையும் புரிசடையும் செய்யவாயுங்கறைமிடறும்
வரதாபயமும் மழுமானும் வயங்குகரமும் மலரடியும்
கருவாபுரியான் வெளிப்படுத்திக்காட்சி கொடுத்துநின்றனே"

பிரமகீதை—சருவசாஸ்திரார்த்த சங்கிரகம் 27ல்

"தேவருந்தேவ தேவர்க்குந் தேவாந்திரியம்பகன்றனைத்தெண்டனுகப், பூவிலே விழுந்து போற்றியே யுருகிக் கிடந்தவப்பொழுதிலே புத்தேள், மூவருமறியா முதல்வனுமிறைவன் மூர்த்தியாய் முழுந்தியவருளாற், காவியங்கண்ணிபங்கனுய் வந்து தோன்றினன் கண்ணினற்காண"

திருவிளையாடல்.

'வானத்தின் மண்ணிற் பெண்ணின் மைந்தரிற் பொருளிலா சை, தானற்றுத் தனையுநீத் துத்தத்துவமுணர்ந்தயோகர் ஞானக்கண்கொண்டேயன்றி நாடருஞ் சோதி மண்ணோர், ஊனக்கண்கொண்டுங்காண வுடன்விளையாடல் செய்தான்''

என்பன வாதிய போதங்களின் வழியே திருமேனியுடையராயுமெழுந்தருளுகின்றார். அப்படியெழுந்தருளுகிற வெளிப்பாடுதானே யவரது பெருங்கருணையின் கனிவை வெளிப்படுத்துவதாயிருக்கிறது. அந்தவுண்மையை' கந்தபுராணம்,

"தன்னைநேரிலாப் பரம்பொருடனியுருக்கொண்ட
தென்னைகாரணமென் றியேலைந்தொழிலியற்றி
முன்னையாருயிர்ப்பாசங்கண் முழுவது மகற்றிப்
பின்னை வீடுபே றருளுவானினைந்தபேரருளே" என்பதாதிய சுருதிகொண்டுணர்ந்துகொள்க. அத்தகையபேரருட்காட்சிவடிவங்களாகியசிவமூர்த்தங்களை வழிபடுவோமாணல் இந்நிலவுலகத்திலேயுள்ளவளவும், பெருமகிழ்ச்சியுடன் வாழ்வுறுவோமென்பதாக,

"மூவருமுப்பத்து மூவரும்மற்றெழிந்த
தேவருங்காணாச்சிவபெருமான்=மாவேறி

வையகத்தேவர்திழிந்தவார்கழல்கள் வந்திக்க
மெய்யகத்து ளின்ப மிகும்" என்றதாதிய சுருதிகள் கோஷிக்கின்றன. அல்லாமலும், தணிகைப்புராணம்.

"ஆதலாலானில் நாறுமவ்வாறு மருளியபொருள்களுந்த முவிச், சோதிநிட்களமாய் நின்றிடினுயிரின் றுரிசறுதெனக்க ருணையினல், மாதர்சேர்சகள வடிவுகொண்டிருந்த வரதனை வழிபடப்பெற்ருேர், கோதுறுவினைகள் முழுவதுந்தமித்துக் குறுகுவர் சிவபுரத்தவன்பால்" என்றுவலியுறக்கு மோருண் மையால், முடிவில் பரமேசுவரசாமீபமும் பெற்றுவாழ்வோமென்பதும், நிச்சயமேயாம். அந்தவுண்மைபற்றித்தானே

## இராமதாபிநியுபநிஷத்து.

"ஞானவடிவமாயும், இரண்டற்றதாயும், நிஷ்களமாயும், சரீரமற்றதாயும், இருக்கின்றபிரமத்துக்கு உபாசகர்களுபாசனையின்பொருட்டு வடிவகற்பனை (உண்மையாகின்றது.)" என்றதோர் சுருதியுமுண்டாயிருக்கிறது. அவ்வருட்டிருமேனிகளாகிய கற்பித (அலங்கார) த்திருமேனிகளே காட்சிவடிவங்களெனப்படுகின்றன. அவற்றையே, உபாசிக்கும்மெய்யன்பினர்க்குச் சிவபோதநிவிர்த்தியும், சிவபோதப்பிராப்தியும், நல்குவான்முன்னிலைப்பட்டு நின்ற இறைவனது சகளவடிவ (வியுத்தலிங்க) ங்களென்னலாம். அவைதாம்,

சந்திரசேகராதி 25 லீலா வடிவங்களும், ஸ்ரீமன் மணிவாசகர்பொருட்டெழுந்தருளிய பரமாசிரியவடிவமும், அவர் பொருட்டுக்குதிரைகொணர்ந்த இராவுத்தவடிவமும், பிட்டு வாணிச்சியம்மைபொருட்டு வந்த ஒட்டர்வடிவமும், சிறுத்தொண்டர்பொருட்டுவந்த பயிரவர்வடிவமும், இவைபோன்ற பிறபலவடிவங்களுமாமென்று கேட்கப்படும்.

அத்தகைய காட்சிவடிவங்களை யெய்யன்பர் தாம்தெரிசித்தவழியே அப்பெருங்கருணைத் திருமேனியினருட்கோலங்களை நேத்திரேந்திரியத்தின்வழிக் கிரகித்து (அகத்துட்கொண்டு நிற்றலாலுண்டாகிய அன்பின்பெருக்கினால் அங்கணின்று துளிர்விட்டெழும்பும் பேரின்பமயமான தமது திருவாக்கினாலே வருணித்துக் கூறுமுண்மைகளை வரிவடிவெழுத்திலமைத்துக் கோடலே சுருதியும், உள்ளத்திற்பதிந்து விளங்கும் கற்பிதத் திருமேனிகளின் சாயலை உருவடிவெழுத்திலமைத்துக்கோடலே ஆலயமுமாமென்பார் பெரியோர்.

இவற்றாலேதான் ஆஸ்திகவுண்மை நிலையுதலாயிற்று. அன்றியும் நாமனைவருமுய்யுநெறிதேடுதற்கும் இவையே (சுருதியும், ஆலயமுமே) உபகாரமாயின. ஆகவே, வேதசிவாகம விதியாகிய இறைவனது திருவருளாணையின்வழி அதிநாகரிக நுட்பங்களோர்செட்டப்பட்ட ஆலயங்களிலெழுந்தருளச் செய் திருப்பனவெல்லாம் இறைவனது காட்சிவடிவங்களின் பிரதி

மாரூபங்களேயாமென்பதுந் திண்ணம்.

இங்ஙனமாகவும் அதீதம், உருவம், என்னுமிரண்டு திருமேனிகட்கிடையில் உருவவழிபாட்டாளரை (புறத்தொண்டினரை) அகவழிபாட்டாளராக்கவல்ல அருவுருவமும், அதனினின்றும், அதீதத்திற்சேர்க்கவல்லஅறிவுத்தொழின்மாத்திரத்தால் வழிபடத்தக்க அருவமும், ஆகிய இரண்டு திருமேனிகளுண்மையுங்கேட்கப்படுகின்றன. படவே, இறைவனுக்கு அதீதம், அருவம், அருவுருவம், உருவம், என நான்கு திருமேனிகளுண்மையாகப் பெரியோர்களால் நிச்சயித்தல்கண்டாம். அவை வருமாறு:—

[சாந்தோ; பிரபாடகம் 8, கண்டம் 3, வாக்கியம் 4ல்]

"அப்படிப்பட்ட இந்தப்பிரமத்தின் பெயர் சத்தியம்; (உள்பொருள்), அவர் நிஷ்களர், நிஷ்கிரியர், சாந்தர், நிரவஸ்தையர், நிரஞ்சனர், (அதீதம்) முத்திக்குச்சிறந்த ஒரு கரையாயிருக்கிறவர்; (அரூபம்) மேலும் தகிக்கப்பட்ட கட்டையிலிருந்து வெளிப்படுகிற அக்கினியைநிகர்த்தவர். (உரூபாரூபம்)" [ஷை 7—23—1ல்] "விஜிஜ்ஞாஸிதவ்ய:" என்றும், [ஷை 8-7-3ல்] "ஸவிஜ்ஞாஸிதவ்ய:" என்றும் வருதலால் "விசேஷமாக அறியப்படத்தக்கவர்" இது (ரூபம்). என்றதாதிய சுருதிகளால் அதீதம், அரூபம், உரூபாரூபம், உரூபம், என்னும் நான்கனுண்மை குறிப்பிக்கப்படுகிறது. அல்லாமலும்,

## I அதீதம் [நிராதாரம்].

[கேனோ: கண்டம் 1, வாக்கியம் 3, 4 ல்]

"அதை (கடவுளை) கண்ணாவது, வாக்காவது மனதாவது எட்டுகிறதில்லை. அதைநாம் அறியோம். அதைத்தெரிவிக்கும் வழியும் நமக்குத்தெரியாது. அது தெரிந்ததற்கு (உலகத்திற்கு) வேறாயும், தெரியாததற்கு (உயிர்வர்க்கத்திற்கு) ப்புறம்பாயுமிருக்கிறதென்று முன்னோருரைக்கக் கேட்டோம்."

கடோ 6-வது வல்லி, 12-வது வாக்கியம்

"பிரமம் (கடவுள்) வாக்கினாலும், மனதினாலும், கண்ணினாலும், அடைய (அறிய) க்கூடியதன்று. கடவுள் உளரென்று சொல்லுகிறவரைக்காட்டிலும், வேறானவர் அவரை எப்படியடைவார்கள்." என்பனவாதிய சுருதிகளெல்லாம், ஆத்துமப்பிரத்தியயத்தி [சிற்றறிவும், சிறுதொழிலும், சிறுகியறிந்ததனையும் மறந்து மறந்தறிதலும் மயங்கியறிதலுமேயியற்கையாக்கொண்ட நமதுண்மையைக்கொண்டு, முற்றறிவும், சர்வகர்த்திருத்துவமும். இயற்கையாக்கொண்ட ஒரு பரம்பொருளுமுண்மையாகவேண்டுமென்னு மோர்யுக்தி விசாரம் நம்மிடத்துண்டாதலி) னாலன்றியறியப்படாத அதீதத்தையே பேசுகின்றன.

## II அரூபம் — (திவ்விய அதிசூக்ஷ்மசாதாரம்)

[சுவே-3வது அத்தியாயம், 3-வது வாக்கியம்]

"எங்குமவரது கைகால்கள்; எங்குமவரது கண்தலை முகம்; எங்குமவரது செவி; அவருலகெல்லாம் பரவியிருக்கிருர்."

[ஷ 1—19] "அவர் (பிரமம்) கையின்றிக்கிரகிக்கிருர். காலின்றி நடக்கிருர். கண்ணின்றிக்காண்கிருர். காதின்றிக் கேட்கிருர். அறியத்தக்கனவெல்லாம் அவர் அறிவார். அவரையோ அறிந்தவரில்லை. அவருக்கு வேறுலக்ஷணமொன்றுஞ்சொல்லக்கூடாமையால் அவரை ஆதிமஹாபுருஷனென்கிருர்கள்."

[பிரஹ] "அவர் பார்க்கப்படாதவர், பார்ப்பவர்; அவர் கேட்கப்படாதவர், கேட்பவர்; அவர் கருதப்படாதவர், கருதுகிறவர்; அவர் அறியப்படாதவர், யாவற்றையும் அறிபவர்." என்பனவாதிய சுருதிகளெல்லாம், கிரியைக் காட்சிமாத்திரத்தில் வஸ்துவுண்மையாக அநுமானித்தறிந்துகொள்ளும், மறைவுக்காட்சிவடிவமாகிற அருபவிலக்கணத்தையே பிரஸ்தாபிக்கின்றன.

III உருபாருபம் — [திவ்வியருக்ஷமசாதாரம்]

(சுவேதா 1-14ல்) "ஒருவன் தன்தேகத்தை யரணியாக்கிக்கொண்டு, பிரணவத்தை மத்தாக்கிக்கொண்டு, கடைதலாகிய தியானுப்பியாசத்திஞல் நன்ருய் மறைந்திருக்குந் தேவ

னைப்பார்ப்பான்."

(ஷ்டி 1-15ல்) "எள்ளில் எண்ணெய்போலும், தயிரில்வெண்ணெய்போலும், பூமிக்குள் தண்ணீர்போலும், கட்டையில் அக்கினிபோலும், ஆத்துமாவில் பரமாத்துமாவை சத்தியத்தினுலும் தபசினுலும் தேடுவோனுக்கு அவனுக்குள்ளேயே அது, விளங்கும்."

(முண்டகோ--2-வது முண்டகம் கண்டம் 2, வாக்கியம்6-ல்)
"ஓங்காரப்பிரதிபாத்தியமான பிரமத்தைத் தியானியுங்கள்; அஞ்ஞான இருளினின்று நீங்குவதில் உங்களுக்கு நிர்விக்கினமுண்டாவதாக. ஞானிகள் ஓங்காரசாதனத்தைக்கொண்டே அந்தசாந்தரும், மூப்பற்றவரும், சாவற்றவரும், பயம் நீங்கியவரும், நிரதிசயருமானவரையடைகின்றனர்."

[தைத்திரியம்-சிக்ஷாவல்லி] ஓம் என்கிற எழுத்தினுல் விளங்குகிறதெதுவோ அதுவே பிரமம். சகலதேவதைகளும் அதைப்பூசிக்கின்றனர். பிரபஞ்சத்தினிடையேயிருக்கும், பூஜிக்கப்படத்தக்கவிசுவநாதரை எல்லாத்தேவதைகளும் நியதமாகவுபாசிக்கின்றனர்."

என்பன வாதிய சுருதிகளெல்லாம், தபசி (கிரியையி)னுலே புறவழிபாட்டுடன் அகத்தேயுஞ் செய்யத்தக்க அன்பின் வழிபாட்டிற்கிரங்கி யநுக்கிரகிக்கவேண்டி இருதயகமலத்திலே

சோதிசொரூபமாகவெளிப்பட்டுவிளங்குகிற உருபாரூபத்திரு மேனியை(உண்ணிலேக்காட்சி வடிவத்தை) யேபேசுகின்றன.

IV உருபம் — [திவ்வியஸ்தூலசாதாரம்]

[தைத்—நாராயணவல்லி, 4, 6, 10-ல்] "கிருஷ்ணபிங்களம், ஊர்த்துவரேதம், விரூபாக்ஷம், விஸ்வரூபம், [ஷ 4, 6, 12-ல்) [ஆகிய] எல்லாவடிவனுக்கும் வந்தனம், வந்தனம்."

இதில்—கிருஷ்ணம் = நீலகண்டத்தையும் பிங்களம்= பொற் சடையையும், ஊர்த்துவரேதம் = அதோரேதசுடைய சீவரன்மையையும், விரூபாக்ஷம்=மூக்கண், அல்லது—உபநயனத்தையும், விஸ்வரூபம் = அஷ்டமூர்த்தங்களையும், குறிப்பித்து நிற்பதாகக் காண்பார் பெரியோர்.

(ஷ 4, 6, 18-ல்) "வணக்கம் பொற்றோளனுக்கு, அம்பிகாபதிக்கு, உமாபதிக்கு"

[ஷ 4, 6, 22-ல்] "வணக்கம் பொற்றோளனுக்கு, பொன்னிறத்தனுக்கு, பொன்வடிவனுக்கு, பொன்னின் தலைவனுக்கு, அம்பிகைதலைவனுக்கு, உமைதலைவனுக்கு, பசுபதிக்கு, நமஸ்காரம், நமஸ்காரம்."

[கைவல்யோ] "உமைதுணைவன், பரமேசுவரன், இறைவன், முக்கண்ணன், நீலகண்டன், மிக்கமைதியன்"

(சுவே 6, 16-ல்) "காலகாலன், நற்குணமுடையவன், எல்லாவித்தைகளாலும் அறியப்பட்டவன்."

[முண்டகோ 3, 1, 3-ல்] "எப்பொழுது பொன்னிறத் தனுங் கர்த்தாவுமாகிய ஈசனை ஜீவன்பார்க்கின்றனனோ!"

(யஜுஉருத்திரம்) "உமையொடு கூடியவனுக்கு வணக்கம்" "சதாசிவனுக்கு" "முப்புரத்தையழித்தவனுக்கு" வணக்கம், நீலகண்டனுக்கு, கறைகண்டனுக்கு."

[ரிக்சம்ஹிதை 2, 7, 17-ல்] "நிலையானவுறுப்புக்களால் பலவடிவன், உக்கிரன்."[ஷை]"ரிஷிகளுக்குப் பிதாவாகியசரப மூர்த்திக்கு."

என்பனவாதிய சுருதிகளெல்லாம் உலகத்தார்புறத்தேயுந்தெரிசித்து வழிபடத்தக்க உருபத்திருமேனி (முன்னிலைக்காட்சிவடிவங்) களையே துதிக்கின்றன. இங்ஙனங்கேட்கப் படுஞ்சுருதிமுழக்கங்களாற் கடவுளுக்குண்மையேயாகிற நான்குதிருமேனிகளு முண்மையாயினவேயாம்,

இந்நான்கனுள், அதீதம் முணரப்பட்டதன்று. ஆதலின் இறைவன்றன்னியல்பாகிய, வாஸ்தவதேகமெனப்படும் அவ்வதீதத்தை யாண்டும் பேசவல்லாரிலர். ஆனபடியால்,

திருமந்திரம்,

"பெருவாய் முதலெண்ணும் பேதமேபேதித்
தருவாயுருவா யருவுருவாகிக்

குருவாய்வருஞ்சத்திகோனுயிர்ப்பன்மை
யுருவாயுடனிருந்தொன்றாயன்றாமே."

சிவஞ்ஞான சித்தியார்.

"உருமேனிதரித்துக்கொண்டதென்றலுமுருவிறந்த
அருமேனியதவுங்கண்டோமருவுருவானபோது
திருமேனியுபயம்பெற்றேம் செப்பியமூன்றும் நந்தம்
கருமேனி கழிக்கவந்த கருணையின் வடிவுகாணே."

"அருவமோருபாரூபமானதோவன்றிநின்ற
வுருவமோவுரைக்குங்கர்த்தாவடிவெனக் குணர்த்திங் கெ
லருவமுமுருபாரூபமானது மன்றி நின்ற [ன்னி
வுருவமுமூன்றுஞ்சொன்ன ஒருவனுக்குள்ளதாமே."

என்பனவாதிய சுருதிபோதங்களெல்லாம், அரூபம், உரு பாரூபம், உரூபமென்னும் மூன்று திருமேனிகளுண்மையையும், அவைதோற்றுவானின்ற வியற்கையையும், கருணையின் கனிவே அவற்றைத்தாங்குதற்கோ ராதரவாயிருத்தலையும், அம்மூன்று மிறைவனொருவனுடையதிருமேனிகளேயாமென்னும் நிச்சயத்தையும், நன்குவலியுறுத்துநிற்றல்காண்க. இம்மூன்று திருமேனிகளினியல்புகளை முன் 7–வது வினாவுக்குவிடையில் [58, 59 ஆம் பக்கங்களில்] எடுத்துக்காட்டியுமி

ருக்கிறேன், உண்மையிங்ஙனமாகவும், நமதுறவினருளொரு சாராராகிய "ஸ்மார்த்த" மதத்தினரில், தார்க்கீக வல்லுனராகிய சிலர், தங்கள் வேதாந்த பக்ஷத்தில் அகவழிபாடொன்றனைமாத்திரம் விதந்தெடுத்தோதும் சுருதிகளை முக்கியப்பிரமாணமாக்கொண்டு உருபாருப (வியத்தாவ்வியத்தலிங்க) த்தையே அங்கீரிகரிக்கின்றனர். அவரதங்கீகாரம் எமக்கு விரோதமன்று. ஆனல், அதீதம், அரூபம், உருபாருபம், உரூபம், எனவழங்கும் ஆன்றோர் வழக்கைமுற்றுமில்லாதேயாக்கமுயலுகின்றனர். அத்தகைய அவாதுபயனில் முயற்சிகள் என்போலிகட்கொத்துக்கொள்கிறதில்லை. ஆதலின், அவாதாராய்ச்சியைச்சற்றே விசாரித்தொழிப்பாம்.

(a) உருவம், அருவமென்னுமிரண்டும் ஒன்றுக்கு ஒன்று எதிர்மறைக்குணங்கள். அவை, ஒளியுமிருளும் போலவாம். இவ்விரண்டிற்குமெதிர்மறையே அதீதமாம். உருவாருவமென்று சொன்னலோ அவ்விரண்டும் நேர்மாருன குணங்களாகலின் ஒருபொருளின்கணிரா. இங்ஙனமாகவே ஒரு பொருளின்கணிவ்வித எதிர்மறைக் குணங்களெவ்வாறிருக்கும்? மேலும் அருவமுடையபொருளொன்று உருவமுடையதாகிறதானல் அருவங்கெட்டு உருவமாகின்றதா? அருவங்கெடாது உருவமாகின்றதா? கெட்டு ஆகின்றதெனின் கேடுற்றஅப்போதேஅருவமில்லாமற் போகின்றது. அதோடு பின்னும் அருவமாதலுமில்லாமற்போகின்றது. கெடாது ஆகின்றதெனின்: அருவம் அ

ருவமாகவேயிருந்தால் உருவமாவதெங்ஙனம்? அதுபோல வே, உருவம் அருவமாம்போது உருவங்கெடாது அருவமாகிற தெனின் உருவம் உருவப்படியிருந்தால் அருவமாதலெங்ஙனம்? என்னுமாக்ஷேபங்களுண்டாய்விடும். அப்படித்தானே, அதிதகுணம்: அருவம், அருவாருவம், உருவம், என்னும் நீதகுணங்களாகிறதென்னும்விஷயத்திலும் ஆக்ஷேபங்கள் நிகளும். நிகழவே, பால் கெட்டுத்தயிரானபோது பாவில்லாதேயானதும், பால்தயிரானபின்பு யாண்டுமெது பாலாக மாறுதலில்லாதிருப்பதும், கண்கூடாதல்போல பிரமத்திற்கு நான்கு திருமேனிகள் கற்பிப்பதுண்மையாதலில்லை. என்பதே அவர் (ஸ்மார்த்தவேதாந்தி) களின் முதலாராய்ச்சியாம்.

(b) இனி வேறொரு மார்க்கத்தாற் பரியாலோசிப்பான் றொடங்கி, அருவத்தினின்று உருவம் வந்துபோய்க்கொண்டிருக்கிறதெனின் அருவம் சொரூபகுணமா? கற்பிதகுணமா? சொரூபகுணமெனின், எது சொரூபகுணமோ, அதுகுணியை விட்டு நீங்காது. நீங்காதாகவே அதற்கெதிர்மறையான மற்றொரு குணம் வந்துசேர நியாயமில்லை. அது, தீபத்தின் சொரூபகுணமான ஒளி: குணியைவிட்டு நீங்காததுபோலவும் அதற்கு எதிர்மறையான இருள்வந்து அதிற்சேராததுபோலவுமாம். ஆகவே, சொரூபகுணம் குணியைவிட்டு நீங்குமாயின் குணியேயில்லாமற்போம். அது, ஒளிபோனபிறகு தீபமில்லாமற்போவது போலெனக. மேலும் ஒளி தீபத்தை

விட்டுப்போயபிறகும் தீபமென்னு மொருபொருளிருந்து, அதில் இருள்வந்து சேர்ந்து அவ்விருளையே குணமாகத் தீபம் பெற்றிருக்குமாயின் பிரமமானது அருவத்தைவிட்டு உருவத்தைப்பெற்றுப்பிறகு பிரமமும் அழிவில்லாதிருக்கும். இனி அரூபம் சொரூபகுணமின்று. கற்பிதகுணமெனின் அரூபமே கற்பிதகுணமாகிறபோது பிறகுவந்துசேரும் உருவமுங் கற்பிதகுணமேயாமென்பது சொல்லாமலே விளங்கும். உருவம், அருவமாகிய இரண்டுங் கற்பிதமென்றுசொல்லின், அதற்குவேறாக ஒருகுணம் யதார்த்தமாயிருக்கிறதென்னவேண்டிவரும். அப்போது அது சொரூபகுணமா? கற்பிதகுணமா? என்னும் வினாத்தோன்றும். இவ்வாறு சொல்லச் சொல்ல அநவத்தாதோடமெய்தும். என்றாராய்ந்திருக்கின்றனர். இவைதவர்கள் இரண்டாவது ஆராய்ச்சியாம்.

இவ்விரண்டனையும் நாம்சீர்தூக்குங்கால், ஒருமாதிரியாக இவர்களை நாவலரென்னலாம். ஆயினும் இவரது அதிகப்பிரசங்கத்தால் இவருக்காவது, இவருரைக்குச் செவிகொடுப்போருக்காவது நன்மையுண்டாமென்னமாத்திர மெனக்குத் துணிபுண்டாகிறதில்லை. ஏன்? எனில்:—

இங்கே, "Force" எனப்படுமின்சாரமானது இயல்பிலெல்லாப்பொருள்களிலும், எல்லா விடங்களிலும், எல்லாச்சரீரங்களிலும், வியாபித்திருக்கிறது. அதனுண்மை யியல்பை

யெவராலுமறிந்துகொள்ளமுடியாது. அப்படியானாலும் அது, இல்பொருளல்ல. அந்த நிலைமையில் அதை யதீதமென்னலாம்.

அதினின்றும், கவர்வலி (positive) கழிவலி [Negative) களின் காட்சிஉண்மைகொண்டோர் அரூபப்பொருளுண்மையாகத்தோன்றுமோர்குறிப்புணர்ச்சியால் வஸ்து: கட்புலப்படாதபடி வலிகள் மாத்திரங்காணப்பட்டுக்கொண்டிருக்கிற அவசரத்தில், அதை அரூபமென்னலாம்.

அதுதானே பிளாற்றினம் முதலியவைகளோடு சம்பந்தப்படும்பொழுது ஒளியாய்த்தோன்றுகின்றது. இரும்புமுதலியவற்றிற் சாரும்பொழுது அந்த ஒளிவடிவந்தோன்றவில்லை. ஆதலின் விளங்கத்தக்கபொருளின் சார்புபற்றி விளக்கமுறுதலும், ஒளிமயமாயேயிருத்தலும், காணப்படுதலின் அதனை ரூபாரூபமென்னலாம்.

அங்ஙனம் வலிகளின் சம்பந்தத்தால் ஒரோர் காலங்களில் அது (மின்சாரம்) தீப்பொறி வடிவாகவும் காணப்படுதலுண்டு. அதனை உரூபமென்னலாம்.

இந்நான்கு பிரகாரத்திலும் காணப்படுவனவெல்லாம் மின்சாரமொன்றேயாம். இவ்வுண்மையைச்சோதித்தறிவானுக்கிரகமுண்டெனின், அது (மின்சாரம்)சடமாதலின் அதனைத்

தொழிற்படித்துக்காட்டுவாரொருநர்த்தாமாத்திரமே வேண்டப்படும். படலான் அத்தொழிலிற்பயின்றாரொருவனை வேண்டிக்கொள்வாரனைவரும் எளிதிலுணர்ந்துகொள்ளுதல் திண்ணம். இவ்விஷயத்தில் அவர் (ஸ்மார்த்தர்) களுடைய ஆராய்ச்சி (பால் தயிராதல் போன்று உதிதம்: அரூபமாகிய குணங்களையடைந்தால் அநீதங்கெட்டுப்போகவேண்டுமென்னும் நிச்சயம்) செல்லாதேயொழிதல் ஸ்பஷ்டமாதலால் அஃதிழுக்கிற்றுதலின் என்க. இன்னமும்,

அக்கினி: தனதியல்பில் (அநுற்பூதநிலைமையில்) அரூபமும், வியாபகமுமான ஒருவஸ்துவாயிருத்தலுண்மையேயாம். அது, உற்பூதநிலைமையில் வெளிப்படுத்தனதிருப்பைப்பிறருக்குக்காட்டி அழகிய கிரியைகளைச்செய்கிறதனால், அதற்கொரு தோஷமுமுண்டாகிறதில்லையென்பது முலகறிந்தவுண்மையே. அப்படியிருக்கவும், இவர்பிடிவாதத்தால் ஏனை, அருவங்கெட்டுத்தான் உருவமாகவேண்டுமென்றும், அருவத்தினின்றுமுருவந்தோன்றமாட்டாதென்றுஞ் சாதிப்பான் முயலுகின்றனர். அது,

"உலகினிற் பதார்த்தமெல்லாமுருவமோடருவமாகி
நிலவிடுமொன்றொன்றாகா நின்றவந்நிலையேபோல
அலகிலா அறிவன்றானு மருவமேயென்னிலாய்ந்து
குலவியபதார்த்தத்தொன்றாய்க் கூடுவன்குறித்திடாயே"

என்றபடி நமது சமயத்திலுள்ள போதந்தானே ஆனு லென்னே?

தாயுமானர்.

"காட்டத்திலங்கி கடையவந்தாலென்னவுன்னும்
நாட்டத்தினாடுவெந்த நட்பேபராபரமே." என்றும்,

தேவாரம்.

" விறகிற்றீயினன் பாலிற்படுநெய்போன்
மறைய நின்றுளன் மாமணிச்சோதியான்
உறவுகோனட் டுணர்வுகயிற்றினன்.
முறுகவாங்கிக் கடையமுன்னிற்குமே"

என்றுஞ் சுருதி போதங்களுண்மையால், பரிபூ ரணரும், அருபியானவருமாகிய எல்லாம்வல்லஇறைவர்: வேதசிவாகமங்களேத் தந்தருளுதற்பொருட்டும், தம் மையடைந்தாரை யறிவெழுப்பியுய்விக்கவேண்டியும், ஒரு திருமேனிகொண்டருளுகின்ருரென்பதைச் சம்மதிக்கும் அறி ஞரே நம்மவராயினர். அந்தநம்மவர்பொருட்டே (பிரஹதா 4, 3,1-ல்), "பிரமத்திற்கு உருவம், அருவம், என்றிரண்டேவடிவங் கள்" என்றபோதமுமுண்டாயிருக்கிறது" இவ்வுபநிஷத்து(வே தாந்த)வாக்கியார்த்தமாகிற உருவத்திருமேனியையும்அங்கீகரி

த்துமிற்கும் நம்மவர்தாமே உத்தமமானவேதாந்திகளெனவும் படுவர். படவே ஜீவபோதமுனைப்பைக்கொண்டாராய ஆராய்ச்சிவல்லபண்டிதசிகாமணிகளுட் சிலர்கூற்றுக்கள் பிர்ம்மவித்துக்களாற் போதிக்கப்பட்ட சுருதி போதவல்லுனர் முன்பில் அஸ்திரமாதலறிக. இவ்வுண்மையுடன், அகவழிபாட்டை மாத்திரமே யங்கீகரிக்கிற ஒருசாராராகிய இவ்வேதாந்திகள் “உருபாரூபம்” ஒன்றனையே ஒப்புக்கொண்டவராகின்றாரென்பது மிங்கேஞாபகப்படுத்திக்கொள்கிறேன்.

இனி நமதினத்தி லொருசாராராகியவைணவரும், மாத்துவராகிய ஒருசாராரும், சாட்சாத் விஷ்ணுபகவானுக்கு அர்ச்சை, விபவம், வியூகம், பரம் (சூட்சுமம்), அந்தர்யாமி,என்னும் ஐந்துவடிவங்களுண்மையாகக்கண்டு வழி-டுகின்றனர். அன்னோரது கொள்கையில் வாஸ்தவத்தில் சைவரால் வாஸ்தவதேகம், கற்பிததேகம், மந்திரதேகம், தந்திரதேகம் யந்திரதேகம், என்னும் ஐந்தனுண்மை பேசப்படுந்தன்மைபோன்றுபேசப்படினும் அவையிரண்டற்கும் பகலுமிரவும்போன்ற வேற்றுமையுண்மையையுந் தெரிந்துகொள்ளுமாறு இங்கே அவரது கொள்கையைச் சிறிதுவிவரிக்கின்றேன்.

1 அர்ச்சை=பிம்போ (பிரதிமோ) பாசனைசெய்வான் வைத்துக்கொள்ளப்பட்ட மூர்த்தங்கள்.

II விபவம்—விஷ்ணுவாலயங்களிலே காணப்படும் தாரு, தாமிரம், சிலை, முதலியனவாகிய அர்ச்சாமூர்த்தங்களில் மூர்த்திகளாக வசிக்கப்படுவதற்காகவே முன்னாவதரித்துள்ளவும், மேல் வருவதுமாகிய தசாவதாரங்கள் முதலியனவாம். இவை நல்லோரைக்காப்பாற்றவும், தீயோரைத்தண்டிக்கவும், தர்மங்களை நிலைநிறுத்தற்காகவும், இச்சையினலே தரித்துக்கொண்ட சரீரங்களெனப்படும்.

III வியூகம்—சொன்னேக்கூறப்பட்ட அவதாரமூர்த்தங்கள் அம்சங்களென்று கேட்கப்படுதலாலே அம்சியேயாக விளங்குகின்ற அந்தக்கரணரூபமாகிய, சங்கர்ஷணன் (மனம்), வாசுதேவன், (புத்தி), பிரத்யும்நன் [சித்தம்], அநிருத்தன் (அகங்காரம்) ஆகிய நால்வர்.

IV சூட்சுமம்—தேஜோமயமாய் ரஜோகுண தமோகுணங்கள்கலவாதுள்ள சுத்தசத்துவசொரூபமாம். இது-சர்வக்ஞத்துவம், நித்தியதிருப்தி, நித்தியஞ்ஞானம், சுவாதீனம், குறைவற்றசக்தி, அளவற்ற சக்தி, களாம் * சுத்த சாட்குண்யராகிய பரவாசுதேவர் [பரப்பிரமம்] என்னும் முத்திஸ்தானமாகிய பரசரீரம்.

V அந்தர்யாமி—ஒவ்வொரு ஜீவனுக்கும் உற்றதுணையாகவுண்ணின்று அவனவன் செய்தமுன் கருமங்கட்குத்தக்கபடி

---

* சுத்தசட்குணங்கள்

நன்மைகள், அல்லது தீமைகளைச்செய்வானியக்கி நிற்கும் ஏவுதற்சகதி ஸ்வரூபமாம். இதுவே யோகத்தியானஞ்செய்பவர்கட்குப் பிரத்தியட்சமாய் வேண்டியவைகளைக்கொடுப்பதுமாம். என்று விஸ்தரிக்கப்படுகிறபடி இறைவனுக்கு ஐந்துவடிவங்கள் அவர்கள்கொள்கையிலுண்மையேயாக்கண்டாம். அன்றியும், அர்ச்சோபாசனையால் மனத்தின் கல்மஷம்நீங்கும்; அது நீங்கவே விபவோபாசனை கைவநும். அதன்மேல் வியூகோபாசனையிற் பயில்வது சுலபமாம். அப்பால் சூட்சுமோபாசனையும், அந்தர்யாமிசேவையும், இனிது பலித்தலால் அன்னே விசிஷ்டாத்வைதப்பேற்றிற் சருகமாகலாம். என்றும் பிரசங்கிக்கின்றனர். இவரது கொள்கையில்,

"எல்லார் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ்
சொல்லாலுணர்ந்தேம்நஞ் சோணேசர்—இல்லிற்
பிறந்தகதையுங்கேளேம் பேருலகில் வாழ்ந்துண்
டிறந்தகதை யுங்கேட்டிலேம்" என்றபடி, பிறப்பிறப்பின்கட்படாத அயோனிஜராகிய சிவத்தைவழிபடுவான்கொண்டசைவரது கொள்கையிற்கேட்கப்படும். விக்கிராகாராதனம்போலன்றிப்பிறப்பிறப்பின்கட்பட்டுள்ள மச்சர், வராகர், நரசிங்கர் கூர்மர், வாமனர், பலராமர், கிருஷ்ணர், பரசுராமர், இராகுராமர், என்னும் ஒன்பது பேர்வழிகளுடையவும், இனிவரவெதிர்பார்த்துக்கொண்டிருக்கப்பட்டகற்கியினுடையதுமாகியஅவதாரமூர்த்தங்களின்பிரதிமைகளும் இவரால்வணங்கப்படுகின்

றனவென்பது நமக்கு ஸ்பஷ்டமாகிறது. ஆனல் ஈண்டெடுத்துக்கொள்ளப்பட்ட விக்கிரகாராதனமென்னும் விஷயத்தை மறந்தாயினு மிவர்மறுக்கத்துணிகின்றிலர். ஆதலின் இது விஷயத்தில் இவரும் நமதுபக்ஷத்திலாகி நம்மினத்தாரென்றுபசரிக்கத்தக்கவராயினர். இந்தமட்டில் இங்கே வைணவரும், மாத்துவரும், விக்கிரகாராதனத்தையங்கீகரித்துள்ளாரென்பது குறிப்பிக்கப்பட்டது.

ஆனல் —"உருவம்" ஒன்றே மாத்துவருக்கு அங்கிகாரமாம். ஸ்ரீவைணவருக்கோ, உருவத்துடன் அந்தரியாமித்துவ (உயிர்தொறுமுடனகை நிற்கும் அரூப) மும் உடன்பாடாகும், என்ெருரு கேள்வியுமுண்மையாகிறது. ஆயினும், இவ்விருகட்சியாரும் விஷ்ணுபட்சத்தாரென்பதிற் சம்சயமில்லை. இருந்தாலும், வைணவர்களைப்போல மாத்துவர் அத்தனை சிவத்துவேஷிகளல்லரென்பதுஉமிங்கே ஞாபகப்படுத்திக்கொள்கிறேன். இதுகாறும் சொல்லிவந்த வுண்மைகளால், I ஸ்மார்த்தர்=உருபாருபத்தையும், II மாத்துவர்=உருபத்தையும், III வைணவர்=உருபம், அருபம், என்னுமிரண்டையும், IV சைவர்=உருபம், உருபாருபம், அருபம், என்னும் மூன்றனுடன் அதீதத்தையும், கைக்கொண்டுள்ளாரென்பது நன்கு போதரல் காண்க.

இஃதொருபாலாகவும், இந்நான்கு பட்சத்தார் பேரிலும்

பட்சத்தார் போன்ற சிலபேர்வழிகள் [நவீனநாகரீகிகள்] சுருதிகளிற் கேட்கப்படுகிற முழுமுதற் கடவுளுண்மையை விக்கிரகாராதனம் [ஆலயவழிபாடு] இல்லாமலே அறிவகையாலறிந்து கொள்ளலாமென்கின்றனர். அவர் கூற்றையும் சரிபார்ப்பாம்.

"அறிவகை" என்பது போதப்பிரகாரமாம். அது இலக்கணம், உத்தேசம், பரீட்சை, எனமூன்று விதமாயிருக்கும். அம்மூன்றனுளொன்றாகிய இலக்கண மென்பது-விவரிக்கும் பொருளின் சிறப்புத்தன்மை கூறுதலையேகுறிக்கும். அங்ஙனம் சிறப்பித்துப் பேசுதற்கு ஒருபொருளைக்கண்டுதான்தீரவேண்டுமென்றில்லை. கேள்வியளவையாலும் நன்றெடுத்துப் பேசலாம். அதுபோலவே, உத்தேசமென்பதிலுமாகும். உத்தேசமென்பதோ, விவரிக்கும் பொருளின்பெயர்மாத்திரம் கூறுதலாகும். ஆகவின் ஒரு பொருளின் பெயரைக்கேட்டவாறே சொல்லுதல் அத்தனை பிரயாசமன்று. அங்ஙனம், பேர் சொல்லவும், சிறப்பித்துப்பேசவும், கேள்வியளவையால் எளிதே தெரிந்துகொண்டு விவரிக்கும் ஒரு பொருளினிடத்து இவ்விலக்கணம் உண்டோ, இல்லையோவெனப்பார்த்தலாகிய பரீட்சையுங்கூடியன்றே "அறிவகை" என்று சேட்கப்படுகிறது. அந்தப்பரீட்சை கண்மூடிகளுக்குமுண்டாயிருக்குமோ? யதார்த்தபரீட்சணஞ் (சோதனை) செய்தற்குக்கண்ணறிவுமுள்ளவரன்றே யோக்கியராயிருக்கின்றனர். அங்ஙனஞ்சிறப்புற்றகட்

புலனாலுங்கடவுளுண்மையை ஆராய்ந்து கோடலே "விக்கி. காராதன" மாமென்னு முண்மையுணர்ச்சி கைவருகிறவரை இவர் கடவுள்விஷயத்தில்மாத்திரங் கண்ணறிவிழந்தவராயினார். ஆதலினாலன்றோ! அதிவீரராமபாண்டிய மகாராஜா

"பெருகுகாதல்கொண் டநுதினப்பேதைநெஞ் சடியேன்
உருகிநாடியும்வெளிப்படா வுனையுளத் துணர்ந்தேன்
இருகணாரவுங் காண்பதற் கென்றெதிர்ந் திடுவாய்
கருதுகண்டனே கருவையிற்களாநறுங் கனியே"

என்றும் மன்றாடி நின்று காட்சிபெற்றுய்ந்தனர். அந்தப்பெரும்பேற்றை விக்கிரகாராதனத்தாலன்றோ பெறுகின்றார்மேலோர். ஆதலானே கேள்வியளவையாற் கடவுளென்ற பேர் சொல்லுதலும், அவரைப்புகழ்ந்துரைத்தலும், உத்தேசமும் இலக்கணமுமாமேயன்றிப் பரீட்சையுங் கூடியதாகமாட்டா. ஆகவே பரீட்சையில்வழி "அறிவகையாலறிதலும்" முற்றுப்பெறுதலின்மை யுணர்க.

இதன்மேல் வேறுசிலர், ஒருபாடுவந்தெதிர்க்கின்றனர். அவரது கொள்கையில், விக்கிரகாராதனத்தை யொழித்தற்கு

"எண்ணுமெழுத் துங்கண்ணெனத்தகும்"
"எண்ணென்பவேனையெழுத்தென்பவிவ்விரண்டுங்
கண்ணென்பவாழுமுயிர்க்கு"

என்னுஞ் சுருதிபோதங்களை யோராதரவாக்கொண்டே திறற் செயித்துவிடலாமெனத் துணிந்து, கணிதநூல் இலக்கணநூல்களின் வழியே கடவுளுண்மையைக் கண்டுகொள்ளலாமென்பதேயாம். அதையும் விசாரிப்பாம்.

நியாயவாயிலாக—வஸ்துவி (கடவுளி) னிலக்கணமின்னது, அதன் சொருபமின்னது, அஃதிதனாற் கொள்ளத்தக்கது, என்பதெல்லாமுணர்ந்துகோடல்கூடும். அவ்வுணர்ச்சிவின்மையைப் பிழையன்னியிற் பேசுதற்கு வேண்டுமானால் இலக்கண ஆராய்ச்சியுபயோகமாம். ஆதலின் அவ்விரண்டும் (நியாயமும், இலக்கணமும்) கண்ணென்றுபசரிக்கப்பட்டன இங்கே "கண்" என ஒருமையில் வைக்கப்பட்டிருத்தலானே கேள்வியளவை யொன்றனுணரும் தருக்கவிலக்கணவல்லுனரை ஒற்றைக்கண்ணரென்றதானே சொல்லலாம். ஆகவே, அந்நூலுணர்வினுண்மையை நிலைப்படுத்தவல்ல பிரத்தியட்சவுணர்வுக்கண்ணு மறிஞருக்குவேண்டியதாவசியகமன்றோ? அந்தவுண்மையை,

பரமததிமிரபாநு.

"காண்டலநுமானங் கலதயருத்தாபத்தியிவை, யீண்டிசைத்த வெண்ணெனவேயெண்" "வழுப்பதத்தைவாக்கினுக்குமாற்றிவரமாக்கு, மெழுத்தெழுவாயைந்தமெழுத்து" என்று எண்ணுமெழுத்து மென்னுமுண்மையை விவரிப்பானெழுந்த

இக்கவிகளில் முதற்கவியில் "காண்டல்" என்னும் முதனிலை வைப்பினாலேயே சூசிப்பித்தல்சொண் டுணர்ந்துகொள்க. இதனானேபார்வையுங் கேள்வியுமாவசியக மென்பதுவலியுறுக் கப்பட்டது. அல்லாமலும் எண்ணுமெழுத்துமென்னும் பதப் பொருளுமெடுத்துக்காட்டியாயிற்று. ஆனாலும், பிழையறப் பேசுதற்குமாத்திரமுணர்வெழுப்பு மிலக்கணத்தை விடுத்து, கண்வழியுண்மையேயாய், செவிவழிப்பொருளறிவெழுப்புந் துக்கநூலும் விக்கிரகாராதனத்தை விரோதித்திட்டில்லையெ ன்பதையு மிங்கே விஸ்தரிக்க வேண்டிய தாவசியகமாதலின் சிறிது விஸ்தரிக்கின்றேன்.

I. காண்டல்—இது பொறிகளாற் காணப்படுபொருளை யறிதல். இதுதான் புலன் (இந்திரியவுணர்ச்சி) களைப் பொறிகள் நேரே தொடர்ந்துணரு முணர்வெனப்படும். நேர்பார் வை, பிரத்தியட்சம், சாட்சாது என்பது மிதுவேயாம்.

II. அநுமானம்—இது, குறிகளானுய்த் துணரப்படு பொருளையறிதல். இதுவே குறிகளைப்பொறிகள் நேரே தொ டர்ந்து அவற்றின்வழி நின்றாராய்ந்து மறைபொருளையுணருமு ணர்வெனப்படும். குறியாராய்ச்சி, கருதலறிவு, அநுமித்தல், என்பதுவு மிதுவேயாம் காரியத்தாற் காரணமறிதலாகிய இவ்வநுமான அறிவை, புகையைக்கண்டுநெருப்புண்டென்பது போன்ற குறிப்புணர்ச்சியென்னலாம். இதனை உற்றுணரின்,

முன்னேசமயலறைமுதலியவற்றில் அடுத்தடுத்துத் தீயொடு புகையுண்மையுங்கண்டுள்ள அநுபவத்தினாலேயேபுகைதீக்களது சுபாவ சம்பந்தம்பற்றி யாண்டுப் புகையுள ஆண்டுத்தீயென்று துணிதல் வழக்காதலின் இவ்வநுமானம் பிரத்தியட்சத்திலிருந்தே ஜன்னியமாமென்றறிக. அன்றியுங் கருதலனுமானமென்றொரு கேள்வி வருங்கால், அது உரையால் அறிவினளவை அறிதல் என்னும் பொருடருதல்கொண்டு சத்தப்பிரமாணத்திலடங்குதலறிக.

III. கதை=இது, கருத்தாமொழியாகிய ஆகமத்தின் பதப்பொருளைக் கேட்டறிதல். இதுதான் ஆராய்ச்சியின் பயனுணர்தல், மாசிற்றவிர்தல், நியாயம் பேசுதல் பிரசித்தப்படுதல், முதலிய கண்ணியமுள்ள புண்ணியச்செயல் கைவருதற்குரிய வலியுடையசொற்களாலே பொருளை நினைத்துணருமுணர்வெனப்படும். கேள்வி, விசாரம், ஆராய்ச்சி, என்பதுவுமிதுவே. இது உபதேசகலை, தந்திரகலை, மந்திரகலை, என முத்திறத்தி லுண்மையாக் கேட்கப்படுகிறது. இங்கே உபதேசகலையென்றால், கடவுட்டன்மையை அறிவிப்பதும், தந்திரகலையென்றால் கடவுளை யறிந்தடைதற்குரிய கிரியைகளை யறிவிப்பதும், மந்திரகலை யென்றால் கடவுளையறிந் தின்புறும் யோகநெறியை போதிப்பதுமாகும். ஆனால், இவ்வுரையளவையை (சத்தப் பிரமாணத்தை) க்கொள்ளு மறிஞருக்குப் பிராந்தன், வஞ்சகன்மா ருரைகளை யங்கீகரிக்கப்படாதென வற்புறுத்துவது மான்றோர்வழக்கு அந்த வுண்மை

"திங்களமுதாநின் றிருவாக்கை வி டாசே
பொங்குவிடமனைய பொய்நூல் புலம்புவனே"

என்னும்போதத்தால் நன்குவெளியாம். ஆகவே அங்கீகரிக்கத்தக்கது ஆப்த வாக்கியமேயாம். அது (ஆப்தவாக்கியம்) கேள்வி, பதம், பதப்பொருள், என மூன்றவிதமாக் கேட்கப்படும். படவே, கேள்வியாற்பதமும், பதத்தாற்பதப்பொருளும், ஞாபகத்திற்கு வருதல்கண்டாம். அதுகொண்டு பொருளையறியவேண்டுமென்றதோரிச்சை கைவருதல் ஸ்பஷ்டமாம். அந்த சுபேச்சை கைவரவே அது (சுபம்) பெறுதற்குரிய புறக்கிரியையாகிய ஆலயவழிபாட்டிலும், அகக்கிரியையாகிய யோகப்பயிர்ச்சியெனப்படும் விககிரகாராதனத்திலும், முயல்வுழி அகத்தும் புறத்துமிறைவனுண்மையை யறிந்தடையலாமென்னுமோரறிவின் றுணையையு முண்டாக்குவானே, அவ்வுரையளவையில் தந்திரகலை, மந்திரகலைகளுண்டாயிருக்கின்றன. இவ்வேதாகமங்கள் பரமாப்தனாலறிவுறுத்தப்பட்டதாகலின், அறிவுறுத்தறிந்துகொண்ட ஆப்தன்மாரால் மேலும்வெளிப்படுத்தப்பட்ட அவை பிரத்தியட்சத்தினின்றுண்டாயினவாகலின், உரையளவையும் பிரத்தியட்சத்திலிருந்தே ஜன்னியமாமென்றுணர்க.

IV. *அருத்தாபத்தி*—இது, பகலுண்ணான் பருத்திருப்பானென்புழி இரவிலொழித்துண்பானென்றறிதல். இது

தான், பொறிகள் புலன்களையும் குறிகளையும், நேரே தொடர்
ந்து அவற்றின்வழி நின்றுராய்ந்து வெளிப்படையாயும், மறை
ப்புமாகவுள்ள உண்மையை யறியும் யறிவெனப்படும். அர்த்
தத்தின்கற்பனை, சம்பாதகார்த்தகற்பனை யென்பதுவுமிதுவே.
இதனை, அன்னத்தின்புசிப்பின்றிச் சரீரத்தின்பருமையுண்டா
காதெனக்கண்டவோ ருண்மைகொண்டூகிக்கப்படுமோரூகவு
ணர்ச்சியென்னலாம். ஆகவே, உலகவழக்கிற்கண்டதோ ருண்
மையாகுமிது திருஷ்டார்த்தாபத்தியெனவும்படும். இங்கேதிரு
ஷ்டமென்பது காண்டலென்னும் பொருடரலானே இந்தஅரு
த்தாபத்திப்பிரமாணமும், பிரத்தியட்சத்திலிருந்தே ஜன்னி
யமாமென்பார் பெரியோர்.

ஈண்டறிவுறுக்கப்பட்ட நான்குபிரமாணங்களும், பிரத்தி
யட்சமும் பிரத்தியட்சஜன்னியங்களேயாமென்று கேட்கப்ப
டுகின்றன. படலானே, பிரத்தியட்சமொன்றிருந்தே நேரிற்கா
ணப்படும் திணை, பால், இடங்களையறிதலாகிய காண்டலும்,
அக்காண்டலின் வழி முன்அநுபவித்துள்ள வியாப்தியின் சம
ஸ்காரமாகிற குறியைப்பற்றிக்காந்துறைபொருளை யுண்மையா
க்காணும் அநுமானமும், உண்மையை உள்ளவாறே யறிந்து
போதித்தும், அறிவித்தும், நிற்கும் ஆப்தவாக்கியமாகிய ஆக
மமும், குறிப்புண்மைத்தோற்றமாகிற அருத்தாபத்தியும், அவ
வைக்கருவிகளாகப் பகுக்கப்பட்டிருக்கலாம்போலும். இன்
னும் கேட்கப்படும்பிரமாணங்களும் இந்நான்கனுளடங்குமெ

ன்பார் பெரியோர், உண்மையிலெல்லாப்பிரமாணங்களுமறிவாளிகளுக்கேற்பட்டனவேயன்றிக் கண்மூடிகட்குண்டாயிருக்கவில்லை யென்பது நிச்சயம். இந்த வுண்மையை,

‘காட்சியெல்லாங்கண்ணை விடக்கண்டதுண்டோயாதினுக்கும்
ஆட்சியுனதருளேயன்றோபராபரமே’’ .

என்னும் தாயுமானவர் திருவாக்காலுமுணர்ந்துகொள்க. இந்தமட்டிற் பிரமாணங்களெல்லாங் காட்சியிற்கண்டநுபவித்துள்ள வியாப்தியின் சமஸ்காரங்கொண்டெழுமுணர்வின் ஸ்மரணையால் கருத்துப்பொருளுண்மையின் வெளிப்படாமென வலியுறுக்கப்பட்டது. படவே, பிரமாண அளவையாற் கடவுளுண்மை நம்பிக்கைக்கு வருவதன்றி அவரை யெப்படியடைவிக்கமுடியும்? முடியாது. ஆகவே, கடந்துநிற்கும் பொருளெனப்படும் கடவுளையறிந்தடையவேண்டின் அந்தப்பிரமாண அளவைபற்றித் தந்திரகலை யந்திரகலைகளிற் கேட்கப்படுகிறபடி அகத்தும்புறத்தும் பூசித்துநின்றால் அங்ஙனம் பூசிப்போர் வழிபாட்டிற்கிரங்கி இறைவனும் வெளிப்பட்டநுக்கிரகிப்பரென்ற போதத்தின்வழி நடப்பதே நமது கடமையாம். அவ்வழிபாடுதானே விக்கிரகாராதனமாமென்றறிக.
நட்பிற்குகந்த பெட்பினர்காள்!

இப்பிரசங்கத்திலே, நாம் பூசித்துந்தியானித்தும் நின்

ருல், இறைவனிரங்கி வெளிப்பட்டநுக்கிரகிப்பர், என்றதைக்கேட்டபோது, இறைவன் வெளிப்பட்டநுக்கிரகிப்பரென்பது நமது எண்ணமாதலின், அவ்வெண்ணமே இறைவனைச் சிருஷ்டித்துவிடும். அங்ஙனமாயின், அது நமது கருத்தின்வழி வெளிப்பட்ட உருவெளித்தோற்றமேயாம். அவ்வுருவெளித்தோற்றமோ மாயாகாரியமாமன்றி ஈசுவரஸ்வரூபமாக மாட்டாது என்றுசொல்ல வல்லாருமிவ்வுலகத்திலிருக்கலாம். அவர் சொல்லுமாறே கேள்வியளவையால் விசுவாசிக்கிற பிரமவித்தை, காமியவித்தை, என்னுமிரண்டுவித்தைகளில்காமியவித்தையை அப்பியசித்துச்சித்திகளை விரும்புவாருக்கு அங்ஙனமுண்டாவது சகஜந்தான். அவ்வாறின்றித்தமதுடல்பொருளாவிகளையும் ஆசிரியன் வழி இறைவனுக்கு ஒப்புக்கொடுத்து இறைவனதுடைமையேயாய்நிற்கு மெய்யன்பினர்பொருட்டிரங்கி வெளிப்பட்டநுக்கிரகித்தலையும் உருவெளித்தோற்றமென்பதோர் பிராந்தேயாதலறிக. இவர் (ஈசுவரனதருட்டிருமேனியையும் உருவெளித்தோற்றமென்போர்) கருத்ததெல்லாம் காக்கையெனவும், வெளுத்ததெல்லாம் கொக்கெனவும் சொல்லவல்லார் போல்வர். உண்மையில் உருவெளித்தோற்றம் எவன் மனத்தினின்றுமுண்டாயிற்றோ அவனுக்கேபுலப்படும். அயலாருக்கு விளங்கமாட்டாது. இறைவனது காட்சிவடிவமோ அதுபோலன்றி அனைவருக்கும் விளங்கும். அந்தவுண்மையைப்பிட்டுவாணிச்சியம்மை பொருட்டுவந்த கூலியாளர் வடிவம் முதலிய ஒவ்வொரு அருட்டிருக்கோலங்களையும்

அறிந்தார் பலரென்னுஞ் சரித்திரவாயிலாகக்கண்டு கொள்க. இன்னமும்,

"எவ்வுயிர் தோறு மிறைமே வியதிறன்
செவ்வியபிரம்படி செப்பிடுமென்றேன்." என்னும் பெரியோர் அங்கீகாரத்தானுமுணர்க. இந்தமட்டில் ஈசுவரனது திருவருட்காட்சிவடிவங்களுக்கும், உருவெளித்தோற்றத்திற்குமுள்ள வேற்றுமையுணர்த்தியாயிற்று. இதுவரை நம்மவர் வாதங்களால் கடவுட் காட்சிவடிவத்தை மறுக்கமுடியாதேயாயிற்று. ஆகவே "விக்கிரகாராதனம்" அறிஞர் கொள்கையாமென்பது ஸ்திரம்பெற்றது. இப்பால், விக்கிரகாராதனம் என்றது சிவலிங்கார்ச்சனமென்று கேட்கப்படுதலான், அதில் ஏதோதங்களுக்குத் தூஷியமகப்பட்டுக்கொண்டது போல இலிங்கம் என்றபதத்தின் அர்த்தத்தையும் அதன் உண்மையையும், உள்ளவாறே தெரிந்துகொள்ளாதபடி குருட்டாழ்வார் கொள்கையைப் பின்பற்றினோர் சிலர் கூரேசவிஜயத்தில், குழறிப்போந்தவழியே பழிப்பான் துணிகின்றனர். அவர் பொருட்டு உண்மையுரைப்பான் முயல்வது விழலுக்கு நீரிறைப்பான் முயல்வதேபோலும். ஆதலின் அவர்போதத்தான் ஐதீகன்மார்மனனுடைவுண்டாகாதபடி ஈண்டுச் சிறிதெடுத்துக்காட்டுதும்.

மறைதேரும் உறவினரே! லிங்கம் என்றபதம் லிங்+கம் எனப்பிரிந்து லிங்=இலயம், கம்=தோற்றம் எனப்பொ

ருடரலானே உலகுயி டங்கலும் ஒடுங்கித்தோன்றுதற்கு ஓர் ஆகரயமம்என்பர் உபதேசகாண்டநூலார். அதுபோலவே (லிங்க -சித்திரித்தல்) எனப்பொருள்காட்டி படைத்தல் காத்தல் முதலியவைகளினூல் உலகத்தைச் சித்திரிப்பது என்று எமது நாவலர்பெருமானும் நன்கு வலியுறுத்தருளினர். அப்படித்தானே "லிங்கம்" என்றபதத்திற்குப் "பிரகாசம்" என்ற பொருளோதி, பஞ்சகிருத்தியங்களால் உலகத்தைப் பிரகாசப்படுத்துவதென்றதை 'சூதசங்கிதை" யும் குறிப்பித்துரைத்தல் கண்டாம். அந்த உண்மை,

உபதேச காண்டம்.

"அருச்சனைக்குரித்தாயிலிங்கத்திடை யுறைந்தனமொருகணமகலேன் றெரிக்கினெள்ளுமெண் ணெயுமெனச்சிறந்தனங்காண்பனயாவையுஞ்சிதைந்து, பரிக்குமாங்கதன் றன்னிடைல்பிக்கையா லிலிங்கமென்றுரைத்திடப்படுமால், அரிப்பெரும்பெயர்முதலினோருயிர்த்தொகையாவையுமதனுழையடங்கும்"

சூதசங்கிதை.

"பொலிதருமிலிங்க மெனுமொழிக்குரைக்கும் பொருள் பிரகாசகமென்பார், மலிதருமதிஞராதலாற் சிவமேமன்னியவிலிங்கமாம்" "ஆதலிற் சிவமேயவற்றையும் பிரகாசஞ்செய்வதறிமினிவ்வாறேவேதமு மூறைக்குஞ் சிலர் சிவனுடையவிலிங்

கமாலென விளம்பிடுவார் காதல்செய்யுடைமை யாக்கல்கூடாது" எனவலியுறுத்தலால் ஸ்பஷ்டமாதலறிக. இதன் மேல்,

முகம்மதிய நண்பரும், கிறிஸ்தவ நண்பரும், எல்லாம் வல்லஇறைவருக்கு அரூபமொன்றே சாதிக்கின்றனர். அரூபப் பொருளுண்மை மனுஷரறிவுக்கு எப்படிப் புலப்படுமென்று அவர்களை வினவினுல், காற்றினுண்மை அடித்தல், அசைத்தல், முதலியகிரியைக்காட்சி மாத்திரத்தால் புலப்படுதல்போல, கடவுளும் உலகத்தோற்றம், நிலை, யிறுதிமுதலிய காரியவுண்மைகொண்டேயுள்பொருளாக மதிக்கப்படுகிருரெனகின்றனர். அதனையும் விசாரித்து நமது பக்ஷத்தையே ஸ்திரப்படுத்தி எனது பிரசங்கத்தை முடிக்கின்றேன். அரூபவிலக்கணத்தை விசாரிக்குங்கால்,

இலிங்க புராணம்.

"காலின்றுகி நடந்துமுறு கையின்றுகிக்கவர்ந்துமலர்
போலும்விழியின்றுகியரும் பொருள்களனைத்துங்கண்டுமிக
எலுஞ்செவியின்றுய்க்கேட்டும் வாயின்றுகியியம்பியுஞ்சீர்
சாலவுறையுந்தனிச்சுடரேதலைவாநின்னைத்தொழுதோமே"

காசிகண்டம்.

"நோக்கின்றிக்கண்டும்நனிக்கையின்றிக்கொடுத்தும்மறை நவல்வதாய, நாக்கின்றியறுசுவையு மினிதுணர்ந்துங்காலி

ன்றி நடத்தல்செய்தும், மூக்கின்றிமணங்கவர்ந்தும் செவியின்றிக்கேட்டும் மறைமுதல்வர்யார்க்கும், வாக்கின்றிமனத்தினிற்குமெட்டாநின் றுண்மலரைவணங்கல் செய்வாம்’’

என்றுகேட்கப்படுகிறபடி, கரசரணாதியவயவங்கள் வெளிப்படாதே கிரியைக்காட்சி மாத்திரத்தாற் பொருளுண்மையாகமதிக்கப்பட்டு நின்றதோர் நிலையே அரூபமாமென்பது எமக்குமுடன்பாடேயாம். அங்ஙனங்கிரியைக்காட்சி மாத்திரத்திலறிந்துபுகழப்படுகிற

அவ்வரூபநிலையை முகம்மதிய நேசர் இறைவனது “சிபத்து” இலக்கணமாமென்று கூறுவர். அங்ஙனம் எவ்விதத்துமுணரப்படாத இறைவனது வாஸ்தவ நிலையை “தாத்து” என்னுமோர் இலக்கணமாகக் கூறுவதுமவர்கள்வழக்கு. இங்கே “தாத்து” என்பதும், “சிபத்து” என்பதும், நம்மால் இறைவனுக்குண்மையென்று கருதப்படும் அதீதம், அரூபம், என்னுமிரண்டனையுமே குறிக்குமென்பது நிராட்சேபமாம் ஆகவே முகம்மதியர் அங்கீகரித்துள்ளது மேனிலைகளேயாமென்பதிற் சம்சயமில்லை. பேச்சளவில் இவ்வளவுயர்நிலைகளைத் தம்மதென்றுசொல்லக்கூட இன்னமும் கிறிஸ்தவர்கள் கற்றுக்கொள்ளவில்லை. ஆதலின், கிறிஸ்தவர்களைக்காட்டிலும், முகம்மதியர் அறிவாளிகளேயாயினர். ஆனாலென்னை? அருவப்பொருளை அவ்வரூபத்தன்மையிலேயே யுண்மையாக வறிந்து

கொள்ளும்வன்மை யவர்களுக்குண்டெடன்கில் அவர்கள் கடவுளுண்மையைத்தெரிந்துசம்மதிக்கிறவராவார். அல்லாதவரையில்அவர்கட்கும் போலி யாஸ்திகத்துவந்தானேயுண்மையாம். வாஸ்தவத்தில்,

"அறிவாலெல்லாமகன்ற நெறியநலும்
பேரறிவான் வாராதபின்"
"அருவாகி நின்றானையாரறிவார்தானே
யுருவாகித்தோன்றானேலூற்று" என்றுமுழங்குவது மெமதுபட்சமாம். அப்படியிருக்கவும், காற்றினுண்மையறிவைக் கொண்டு இவர் தப்ப வழிபார்க்கின்றனர். இவரது (முகமதியருடைய) வேதபுராணம்.

முச்சுடர்ப்படலம் 19 ஆங்கவியில்,

"பூமியும்மஞ்சள் புனல் நிறம் வெண்மை பொருங்கனல் நிறமது சிவப்பு, நேமியில்வாயுகருநிறம்வான நிறமது பச்சையாம் நிகழ்த்தின், ஆமிதிற்பூமிக்கைங்குணம் நான்காமப்பினிலனலின் முக்குணமாம், ஒமிசைவாயுக்கிருதுணம் வானுக்கொருகுணமென்றுரைத்தனரே." என்றபடி வாயுவுக்குக்கருநிறமும், இருகுணமும், உண்மையென்று கேட்கப்படுதலால் வாயு அறிஞர் திருஷ்டிக்குக்கருமை நிறத்தொடுகூடிக் காணப்படுபொருளே யாதல் ஸ்பஷ்டமாம். அது பிரிதிவி, அப்பு, தே

யுக்களைப்போலத்தடித்துக்காணப்படாதசூக்ஷுமாணுரூபமாயிருத்தலால் அரூபவஸ்துவென்று கேட்கப்படும். அது பிரிதிவியுமுருவெனப்படுதலால் அதிவியாப்திதோஷம் ("லக்ஷியவ்ருத்தித்வேஸதி அலக்ஷியவ்ருத்தித்வ அதிவியாப்தி:" என்றபடி குறித்த பொருளிலிருப்பதாயும், இதர பொருட்களிலிருப்பதாயுமுள்ள துஷ்டவிலக்கணங் கூறல்போன்ற குற்றம்) உண்டாகாமைப்பொருட்டு, காற்று முருவுடையதெனப்படாது, அரூபமெனப்படுகிறது. அத்தகையகாற்று சர்வவியாபகராகிய கடவுளரூபத்தன்மைக்கு உவமானமாகநிற்குமோ? நிற்கமாட்டாது. மேலும், உருவமெனப்படுந்தூலப்பொருள்களுக்கெல்லாம் அரூவமெனப்படுஞ்சூக்குமஅவஸ்தை ஒருதலையானுண்டென்னுஞ்சற்காரியத்தினியல்புபற்றி, உருவத்திருமேனிகொண்டருளுமெமதிறைவனுக்கு அப்பாற்பட்ட அருவத்திருமேனியுமுண்டென்று கண்டோமேயன்றி, வாஸ்தவத்தில் "சிவனருவுருவுமல்லன் சித்தினோடசித்துமல்லன் பவமுதற்றொழில்களொன்றும் பண்ணிடுவானுமல்லன்" என்பதேஎமது சமயபோதமாம்.

இதனாலே, எல்லாம் வல்ல இறைவன்: சூட்சுமாணுரூபமாகிய காற்றினைப்போலுமருவமுமல்லன், மலையைப்போலவுருவமுமல்லன். பின்னையெப்படி எமதிறைவனுக்கு உருவத்திருமேனியுண்மையாக்காண்கின்றனர் பெரியோர்? எனின்,

"முன்னுளிருந்த முறைபோலும் மூர்த்திகராய்
என்னுள்வருவதெனக்கெந்தாய் நிராமயமே" என்றுமன்றுடி
நிற்றல்போன்று மன்றுடுவார் பொருட்டு' ஆதியாகமம் 18வது
அதிகாரத்தில்' "மம்ரேயின் சமபூமியில்" ஆபிரகாம்" என்னு
மோரன்பன் பொருட்டு இரண்டு தூதருடனேதேவன் வெளி
ப்பட்டநுக்கிரகித்தருளினுரென்றுகேட்கப்படுதலுண்டே: அப்
படிப்போல வென்றுதானவர்களுக்குச் சொல்லலாம். அங்ஙன
ம் நான்சொல்லுதல் கொண்டு நம்மவர்க்கு என்மீது கோபமு
ண்டாயினுமுண்டாகட்டும். இங்கேஅதனை ஒப்புக்கொள்வதாற்
தோஷமொன்றுமில்லை யென்றுணர்க. அன்றியுங்கிறிஸ்தவ
நண்பருக்கு,

(சாலோ, 20-12-13ல்) "கேட்கிறகாதும், காண்கிறகண்
ணுமான இவ்விரண்டையுங்கர்த்தருண்டாக்கினுர்." "நீஏழை
யாகாதபடி தூக்கத்தைச்சிநேகியாதிரு; உன்கண்களைத்திற;
அப்போது அப்பத்தால் திருப்தியாவாய்."

ஷை 21 × 10, 16ல்) "ஆகாதவனுடைய ஆத்துமா பொல்
லாப்பையிச்சிக்கும். அவன் கண்களிலவனுக்கு அடுத்த அநு
க்கிரகங்கிடையாது." "புத்தியின் வழியைத்தப்பி நடக்கிற
மனுஷன் செத்தவர்களின் கூட்டத்திலே தாபரிப்பான்."

என்ற சுருதிகளுண்டாயிருத்தல் ஸ்பஷ்டமாம். அதுகொண்டு,

I. காதுக்கு ஒலியறிவும் கண்ணுக்கு உருவவுணர்ச்சியு மேயுண்மையாம்.

II. கண்முடியாயிருப்பவர் (பார்வையற்றோர்) ஏழைக ளும் அதிர்ப்தருமேயாவார்.

III. கடவுளுக்கு வேண்டாதவனேபாவியாவான். அவன் கண்களுக்கு அவர் (கடவுள்) புலப்படுகின்றிலர்,

IV. கண்காதுகளாற் பெறப்படும் அறிவைத்தப்பி நடக்கிற மனுஷன் பைசாச புவனத்தின் வாழ்வைப்பெறுவான்.

என்னும் போதமெழுப்பியதேவனே: தான், ஆபிரகாம் பொருட்டருளிய காட்சியை ஜனங்கள் விசுவசித்து வழிபட்டு அவனை (ஆபிரகாமை) ப்போற் காட்சிபெறுவான் வேண்டிக் கொள்ளாதபடியால் கிறிஸ்தவர் கண்களுக்கு நாளையும் புல ப்படாதவராயே மறைந்துகொண்டாரென்பது குன்றின்மே லிட்ட தீபமாம். ஆகவே அவர்கட்கு நியாயத் தீர்ப்புநாள் வரை கல்லறையிலிருப்பையும் கற்பித்திருக்கின்றனர்போலும், அப்படித்தானே,

"இந்த நெறிதன்னி லியங்கார் பிசாசாவார்
அந்தவினை போம்பரிகாரத்து"

என்று "சைவசமயநெறி" யில் நமக்கும்போதித்தருளினர் எல்லாம் வல்ல இறைவர். ஆனால் அறியாமையினாற்றானே, அல்லது இதரர் அபத்த போதனையால் மயக்குற்றுத்தானே, நாமும் காட்சி வடிவத்தை ஒரு காலத்து இகழ்ந்து நின்றாலும், ஒருகாலத்து மனம் திரும்பினால் பிராயச்சித்தத்தால் பைசாச புவன வாழ்வை யிழந்துவிடலாமென்பதும் நிச்சயமாகிறது.

இங்ஙனம் நம்மீது வைத்த இறைவன், பெருங்கருணையை என்று மறவாது நின்றுய்வோமாக. இந்தமட்டில், கிறிஸ்தவ நண்பரும், முகம்மதிய நண்பரும் சொல்லுகிறபடி அரூபம் அறியமுடியாதென்பதும் வலியுறுக்கப்பட்டது. ஆதலின், மஸ்தான்சாகிபு மூர்த்திகாய்வந்தருளவேண்டுமென்று மன்றாடினாரென்பதூஉம், ஆபிரகா மொருவனுக்குக் கிடைத்ததுபோல் கிடைக்கப்பெறுவான் வேண்டிக்கொள்ளாத அவன்சந்ததிகட்கு (கிறிஸ்தவருக்கு) யாண்டுங் காட்சியில்லாதேயானதும் இங்கே குறிப்பிக்கப்பட்டது.

இங்ஙனம் உண்மை யொருபாலிருக்கவும், சிலர் ஒருகாலத்தில் நாங்களுங்கள் சுவாமியை உடைத்தெறிந்து போட்டோம்; மற்றொருகாலத்தில் உங்கள் சுவாமியைப் பிறருடைய சுவாமியாக மாற்றிக்கொண்டார்கள்; என்று பரிகசிப்பதுமுண்டு.

அது வாஸ்தவமேயானாலும் அத்துர்க்கிருத்தியத்தால் நாம் பரிகசிக்கப்படாமல் நம்மைப் பரிகசிப்போரே பரிகசிக்கப் பட்டிருக்கிறார்களென்பதை என்னால் வெளிப்படுத்தாதிருக்க முடியவில்லை. ஆதலிற் கூறுகின்றேன்.

நமது ஆராதனையி னுண்மையையறியாத சில ஜனங்கள் மதவெறிமேலிட்ட ஒவ்வொரு காலத்தும் அவரவரது அரசு பலமு மொற்றுமை பெற்றிருந்தால் விக்கிரகங்களை யுடைத் தெறியவும், பேர்மாற்றித் திருப்பிக்கொள்ளவும் ஆரம்பித் தார்களென்பது முண்மையேயாம்.

அவரவர்கள் பிரதிமா ரூபத்தையே விக்கிரகமென்று காண்பவர் (ஐதீக அறிவாளி) களாயிருந்தார்கள். ஆனபடியால் அங்ஙனமோர் துணிபு மவர்களுக்கேற்பட்டது. அதனாலென்னை? ஒரு பூமிப்படத்தைக் கிழித்தெறிந்துவிட்டால், அல்லது பொசுக்கிப்போட்டால், பூமியழிந்துபோகுமோ? ஒருபடத்தை யப்புறப்படுத்திவிட்டு அஃதிருந்த விடத்தில் வேறொரு படத்தைப் போட்டுவிடுதலினாலேயோ, அல்லது அதே படத்தில் முன்னுள்ள வுருவத்தை மறைத்து வேறோருருவத்தை எழுதி வைத்துவிடுதலினாலேயோ, முன்னைய ஸ்வரூபனில்லாதுபோவனோ? அவ்வுண்மையை யறியுமறிவின்மையால் துஷ்டர்களியற்றுந் துர்க்கிருத்தியங்கொண்டு உண்மையுமின்மை யாத

லியாண்டுங் கண்டதின்று. அத்தகைய பயனில் முயற்சிகள் (துஷ்டச்சேஷ்டைகள்) இனியாண்டுந் தலையெடுக்காதபடி,

இந்தியன் பினல்கோடு 298-வது பிரிவு,

"ஒருவனுடைய மதசம்பந்தமான வுணர்ச்சிக்கு சங்கடமுண்டுபண்ண வேணுமென்று தேர்ந்த எண்ணங்கொண்டு அவனுக்குக்கேட்கும்படி எவனுவது பேசினுலும், தொனிசெய்தாலும், அவனுடைய கண்ணுக்கு எதிரில் சேஷ்டைபண்ணினுலும், எதையாவது வைதாலும், அப்படிப்பட்டவன் ஒருவருஷத்திற்கு அதிகப்படாமல், இருவகைக்காவலில் எதிலாகிலும் வைக்கப்படுவான், அல்லது அபராதத்திற்கு உள்ளாவான். அல்லது இரண்டு தண்டனைக்குமுட்படுவான்." என்றதாதிய நீதியுள்ள சட்டங்கள் பிறந்துவிட்டன.

ஆதலின், உங்கள் சுவாமியை உடைத்தெறிந்து போட்டோம்; உங்கள் சுவாமியை எங்கள் சுவாமியாக்கிவிட்டோம்; என்று பிதற்றித்திரியும் மதவெறிகாரர் கோட்டம் தற்காலத் திலடங்கிப்போயிற்ற. அங்ஙனம் மிகக்கண்டிப்பான சட்டங்களை ஏற்படுத்தியிருக்கிற கடவுட்பக்திமேலிட்ட மேலான நாகரீக கவர்ண்மெண்டின் அரசாட்சியின் கீழுள்ள இக்காலமே பரீஷ்கார காலமெனப்படுகிறது.

அத்தகைய சீர்திருத்தமுள்ள அங்கிலியக் கவர்ண்மெண்

டின் பிரஜைகளாகிய நாம் நமதிறைவருக்காக மனப்பூர்வமாகவும், உள்ளன்புடையோராகவும், துதி செலுத்துவானும் முன்னேற்றமுடையராய் வாழ்வோமாக.

இனிவேறு சில மூடசிகாமணிகள் அவருபதேசத்திற்குச் செவிகொடுக்கும் கனிஷ்டன்மாரை நோக்கி, ஓ! அஞ்ஞானிகளே! உங்கள் சுவாமிக்குக் கண்ணிருந்துங்காணுகிறதா? காதிருந்துங் கேட்கிறதா? மூக்கிருந்தும் முகருகிறதா? வாயிருந்தும் பேசுகிறதா? சரீரமிருந்தும் ஸ்பரிசிக்கிறதா? ஓரறிவுமில்லாத ஒரு சுரூபத்தை நீங்கள் சுவாமி யென்று கொண்டாடுகிறீர்களே! அப்படிப்பட்ட உங்களுடைய சுவாமிக்கு உங்களால் உண்டாக்கி வைக்கப்பட்டிருக்கிற கைகளைக்கொண்டு ஏதாவது வேலை செய்யமுடியுமா? கால்களைக்கொண்டு நடக்க முடியுமா? என்பனவாதிய பல கேள்விகளை நாணமின்றிக் கேட்கத்துணிகிறார்கள். அந்தோ! இவரதறியாமையின் றுணிபுக்குச் சிறியரும் விலாக்குலுங்கச் சிரிப்பரே! அதுபற்றிய, பயமே யிவருக்குண்டாகாமைகொண்டு இவரை நிர்ப்பயத்துவசாதனங் கைவந்தவரென்னலாம் போலும்.

இவரதுபாண்டியாசத்தைக்கேட்டுவந்த ஒருவித்தியார்த்தியைநோக்கி, "ஹே! நண்ப! அங்கு என்ன விசேஷம்?" என்று நண்பரொருவர் வினவியபோது, அவன்:

"அங்கே ஒரு பிரசங்கம் நடந்தது. அதில் ஒரு கூட்டத்தார் பூமிப்படத்திலே (In the map of world) காணப்பட்ட சமுத்திரத்திலுள்ள மீன்களைப்பிடிக்கவும், ரயிலிலே பிரயாணிக்கவும், தங்கச்சுரங்கத்திலே பொன்வெட்டியெடுக்கவும் இப்படிப்பலவுமாரம்பித்ததில் ஒன்றுங்கூடாமலிருக்கிறதாம். அங்ஙனமுபயவுமவருக்கு அது, (படம்) அப்பிரயோசனந்தானே? அதுகொண்டு படசேவையை எங்ஙனையும் அங்கீகரிக்க வேண்டாமென்று சத்துகிருப்போலிருக்கிறது. அவரது பிரசங்கமெல்லாம்ஆலயத்திற்காணப்படும் ஈசுவரப்பிரதிமாரூபமொன்றுயினும் அவரைப்பார்க்கவாவது பேசவாவது செய்யவில்லையென்றும், அதுகொண்டு நம்மவருக்கும் ஆலயவழிபாடுகூடாததாமென்றும், வலியுறுத்துவதொன்றேயாம். அதன்பொருட்டு அவர் தம்மிற்றுமே பலகேள்விகளைக்கேட்டுக்கொண்டும் விடையிறுக்கமுடியாமல் மிரள மிரள விழித்துக்கொண்டும், குளறிநிற்கின்றனர். அதுதான் விசேஷம்." என்றான்.

அது கேட்ட நண்பர், "அது விஷயத்தில் உனதபிப்பிராயந்தானென்னை? உன்னிடத்திலே என்றைக்காயினும் பிரதிமாரூபங்கண்டாற் பேசிற்றுண்டோ"? என்று மறுபடியும் வினவினர். அதற்குப்பள்ளிப்பையன்:

ஐயா! நானோ சிறுவன். என் மனம் பள்ளிப்பாடங்களிற்பற்றிநிற்கிற இக்தக் காலத்தில் மேலான அந்தவுண்மை

விளங்குமா! எனக்குப் பூமிஸாஸ்திரமும், பூமிப்படமும் நன்றாகக் கைவந்திருக்கிறது. அதுகொண்டு இவ்வுலகமுழுவதும் சுற்றிப்பார்த்த மகான்மாரில் ஒருவர்போலுமாயினேன். அப்படிப்போலவே ஆலயசேவையும், சுருதி விசாரமும் எனக்குக்கைவரும் காலத்தில் நானும் உத்தம ஆஸ்திகரிலொருவர் போலுமாவேன். இதுதான் ஆலயத்தைப்பற்றியுள்ள எனது அபிப்பிராயமாம். இதன்மேல் ஆலயவழிபாடு கைவந்த மகான்மாரில் மார்க்கண்டேயர் பொருட்டு அவரால் பூசிக்கப்பட்ட சிவலிங்கத்தில் பரமேசுவரர் சாட்சாத்தாக வெளிப்பட்டு அநுக்கிரகிக்க வில்லையா! பிரகலாதன ஆழ்வார் பொருட்டு இறைவர் கற்றூணினின்றும் நரசிம்மமாகத்தோன்றி இரணியசம்மாரம் செய்யவில்லையா! இங்ஙனம் அளவிறந்த சரித்திரங்களுண்மையாதலினாலும்,

"கண்ணிற்காண்பதுன் காட்சிகையாற்றொழில்
பண்ணல் பூசைபகர்வது மந்திரம்
மண்ணொடைந்தும் வழங்குயிர்யாவுமே
யண்ணலேநின் னருள் வடிவாகுமே" என்று நமது தாயுமானார் வலியுறுத்துதல் போன்று பல அநுபவஞானிகளின் திருவாக்குகளும் உண்மையாதலினாலும், யானும் அந்த மேல்நிலையை ஆசரித்து நிற்கத்துணிந்தால் பிரதிமாரூபமட்டுமோ! வேறுகாணப்படும் அனைத்தும் எனக்கு சிவசொரூபமாய் விளங்குமன்றோ! அங்ஙனமிருத்தலின் அந்த அடுத்த கேள்விக்குப்

பதில் சொல்ல இப்போது நான் தயாரில்லை, என்று பதிலளித்தான். அந்தமட்டில்விட்டானில்லை. அதன் மேலும் சீறாப்புராணம் 5-ம் படலம் 10—11ல்.

“வெண்ணிலவு துளித்தொழுகும் மதிவதனமுகம்மதனை விளித்து நோக்கி, வண்ணமலர் வாய்திறந்து பெரியோன்றன் திருத்தூதாய் வந்தகோவே, பண்ணருநன் மறைநபியே வானவர்பொன் னடிபரவப் படியின் வந்தோய், எண்ணரும் பேரொளியுமும தொளியில் வரக்கதிர் வடிவாயிருந்தவேந்தே”

“அல்லாவின் திருத்தூதர் வேதநபி முகம்மதென வகத்திற்கொள்ளார், பொல்லாத நரகடைவர் உமதடியிற் பணிந்து கலிமாவைப்போற்றிச், சொல்லாரமணத்திருத்த வறிந்தவரே சிறந்தபொருட்சுவனமாள்வார், எல்லாருமெனைப்போல்வார் அறிவரிது சரதமெனவியம்பிற்றன்றே” என்று

“குசையினறபி” வேண்டுதலுக்காக முகம்மது நபியவர்களோடு அறபிநாட்டுஅமங்கலப்பிரதிமையும் பேசினதாகக்கேட்கப்படுமந்த அன்னியசரித்திரவுண்மையைக் கூட இவர் அறிந்திலர் போலுமென்றுஞ்சொன்னான். அது கேட்டநண்பர்மாணவனைப்புகழ்ந்து ஆசீர்வதித்தனுப்பினாராம். என்று நிகழ்ந்துள்ளதோர் சரித்திரமே அப்பிரசங்கிகள் இன்ன விதமாக மதிக்கப்பட்டிருக்கிறார்களென்பதை நன்கு போதப்படுத்தி நிற்றல்

கண்டாம் ஆதலின் அவரது வீண்கூக்கலைப்பற்றி இங்கே விசேஷமாகவிஸ்தரிக்க வேண்டாததாயிற்று.

ஆனாலும், அவரது போதனையிலகப்பட்டுள்ள கனிட்டன்மார் சிலர், இந்நிலவுலகத்திலே ஒவ்வொருவனுந் தத்தமனைவியுடன் இரவிற் கூடிக்கிடந்து விடிந்தெழுதல்போல, எல்லாம் வல்ல இறைவராகிற நமது கடவுளும் தமது தேவியுடனிரவிற் பள்ளியறையிற் புணர்ந்திருந்து விடிந்தெழுதலானகிரியைகள் ஆலயத்தில் நடப்பதுபோலவும், அது அருவருக்கத்தக்கதாமென்றும், பேசிக்களிப்பாட்டமாடக் காண்கின்றோமன்றோ! அந்தப் பிராணிகள்பொருட் டுண்மையறிவுறுத்தலாவசியகமேயாம். ஆதலின், அறிவறிந்த மக்களுக்கெல்லாம் தெரிந்துள்ள ஆலயக்கிரியா விசேஷங்களெனக்குந்தெரியுமென்பதை மாத்திர மிங்கே சிறிது குசிப்பிக்கின்றேன்.

நண்பர்காள்!

"முகமெலாங் கண்ணீர் முத்தரும்பிடச்செங்கைமுகிழ்ப்ப
அகமெலாங்குழைந் தானந்தமாகநல்லறிஞர்
இகமெலாந்தவமிழைக்கின்றாரென்செய்கோவேழை
சகமெலாம் பெறினின்னருளுதரமாய்ச் சமைந்தோய்" என்

பது எமதுதாயுமானாருமைத்திருவாக்காதலுலகறிந்தவுண்மையே. இதில் இறைவனுலகத்தைத்தனது திருவருளாகிற வுத

ரத்தினின்றும் பெறுவித்தானென்பதானங்கு வலியுறுத்தப்பட்டது. இதனாலே திருவருளாகிற வுத்தரம்பெறுவானும், உலகுபேறு மாதல் நிராட்சேபமாயிற்று. ஆகவே, இறைவனாகிற அருளாளன (பெறுவிப்பான்) அருள் (பெறுவான்) உலக (பேறு) என்னுமூன்று சப்தார்த்தங்களே பிதா, மாதா, மகவு, எனவாதல்கண்டாம். இந்தவுண்மைபற்றியேநம்மை "அமிர்தஸ்யபுத்திரா" என்றுசுருதியுமழைக்கிறது. தருளாதசத்தியாகும் "என்னுஞ்சுருதி போதத்தால் சந்தனே அருளாளனுகின்றான். சத்தி அருள் 'ஒளி' 'உமை' என்பனவெல்லா மொருபொருட்சொற்களே யாதலறிஞரனைவரும் அறிந்த விஷயமே. நமது சைவமதத்தில் சத்திமானை ஆண்பாலாகவும், சத்தியைப்பெண்பாலாகவும், நம்மை மக்களாகவும், வழங்கி வருவது தொன்றுதொட்டுள்ளதோர்வழக்கமாம். அந்தவழக்கத்தில் அம்மையப்பராகிய நமது பரமேசுவரர் (உமாபதி) தமது சத்தி [வல்லமை] யை விஸ்ரம்பிக்க விடாதடக்கிக் கொள்ளுதலே அவர்செய்யும் சம்மார கிருத்தியமென்று கேட்கப்படுகிறது. படவே, ஒருவன் கையிலுள்ள பலம் மற்றொருவனையடித்தபோது வெளிப்படுதல்போலத் தம்பாலடங்கி நின்ற சத்தியை விஸ்ரம்பிக்கவிட்டு சர்வான்மாக்களையுந் தோற்றுவித்தலே சிருஷ்டியாகும். அங்ஙனந் தோற்றுவிக்கப்பட்ட சர்வஜீவான்மாக்கள்விஷயத்திலுந் தாமே சர்வாதி காரியாய் நின்று,

"இன்னதலத் தின்னபொழு தின்னதனு லின்னபயன்
இன்னபடியாய்ப்பொருந்து மென்றறிந்தே — அன்னதலத்
தன்னபொழு தன்னதனு லன்னபய னன்னபடி
பின்னமறக்கூட்டுமே பிரான்" என்றபடி ஒவ்வொருவரையும் அவரவர்வினைக்கண்விடுத்து நுகர்வித்தலைத்தான் திதியென்பார்பெரியோர். இந்தப்பிரகாரம் நிகழும் சங்காரம் 'சிருஷ்டி திதி' என்னும் முத்தொழில்களும் இறைவரதென்பதி லெவர்க்கும் ஆக்ஷேபமிருக்கா தென்பதும் நிச்சயம்.

ஆனபடியால் "நித்தலுந்துஞ்சும் பிறப்பையுஞ் செய்தவன்" என்னுந்திருவாக்கின்படி நித்தியசம்மாரத்தின் பொருட்டு சர்வாதிகாரியாய் நின்றசத்தன் சத்தியைத் தன்பாலடக்கிக்கோடலே பள்ளியறை சேர்தலாம். அங்ஙனம் இறைவன் பள்ளியறை சேர்ந்தஅளவில் சர்வபிராணிகளும், யான் 'எனது' என்பதற்றுப் பிரேதம்போலச் சுழுத்தியவஸ்தையில் விழுதல் ஸ்பஷ்டமேயாக்கண்டாம். அப்பால்'

நித்திய சிருஷ்டியின்பொருட்டு சத்தன் தனதுசத்தியை விஸ்ரம்பிக்கவிட்டுத் தனதிருப்பைக் காட்டிநிற்றலே இறைவன்திருப்பள்ளி யெழுச்சியாம். அங்ஙனந்திருப்பள்ளியெழுச்சியானவுடனே இரவெல்லாம் பிரேதம்போல உசுப்பாதடங்கிக்கிடந்த சர்வபிராணிகளும் சுழுத்தியில் நீங்கி- யெழுதலும் பிரத்தியட்சமே. அதன்மேல்'

திருப்பள்ளி யெழுச்சியானதுமுதல் பள்ளியறை சேரும ட்டுஞ் செகநாதனுநின்று சர்வபிராணிகளையுந் தத்தம்வினைக் கண் விடுத்து அநுக்கிரகம் புரிதலே நித்தியகிருத்தியமாம். இந்தப்ப சற்காலத்திலேதான் நாமனைவரும் "சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தன்- வகை தெரிவான்கட்டேயுலகு" என்ற படி பஞ்சேந்திரியங்களின்வழி விஷயக்கிராஹியன் மாராகிநா னென தென்னுமாரவாரித்துக் கொண்டிருக்கிறோம்

இங்ஙனம் நிகழுமுத்தொழில்களும் சர்வான்மாக்களுக் கும்பொதுவாக இந்திரியங்களைப் பொறுத்தே நிகழ்வனவாமெ ன்று கேட்கப்படுகின்றன. இதிற்கண்ட சாக்கிரவஸ்தையில் ஆன்மலாபத்தையுத்தேசித்துச் செய்யப்படும் ஈசுரவழிபாடு தான் ஆலய சேவையாம். அங்கேஈசுவரசந்நிதானத்திலிடப்படு ம்திரையே ஆன்மகோடிகட்கு ஆன்மநாயகனு (பசுபதியு) ண்மையை மறைத்துநிற்கும் திரோபவ கிருத்தியமெனப்படும். அப்பால் திரையைநீக்கிசோடசோபசாரங்களுடன் சேவை சாதித்தலே அநுக்கிரக கிருத்தியமென்பார் பெரியோர்.

இந்தப்பிரகாரம் எல்லாம் வல்ல இறைவரது பஞ்சகிருத் திய விசேஷங்களே ஆலயத்தில் நடைபெறுகின்ற நித்தியகிரி யைகளாம். இந்தவுண்மையை யறியாமல்புருஷஸ்திரீ சங்கமத் தால் வர்த்திக்கிற இவ்வுலகத்தை மாத்திரமே கண்ட அந்தப்பி ராணிகட்கும், ஈசுவரவலிமையையுங் கண்டானந்திக்கிற நமக் கும் வெகுதூரமென்றுணர்க.

இங்கே—சிவம், சத்தி, உலகம், எனப்பிரித்து-பிதா, மாதா, மகவு, என வுபசரிக்கப்பட்டாலும், வாஸ்தவத்தில் சிவமும், சத்தியும், ஒருபொருளேயாதலுண்மை. அது "ஆணல்லப்பெண்ணல்லவன்றியலியுமல்லக்= காணுரூபமல்லக் காணுதரூபமல்ல" என்றபடி அவன், அவள், அது, என்னுமவயவப்பகுப்பிற்கும் அப்பாலதாய், காணப்பட்டதுங் காணப்படாததுமல்லதாய், நிற்குமோருண்மையாற் போதரல்காண்க. அப்படிப்பட்ட சிவம்-உலகத்தைத்தோற்றுவிக்குங்கால்,

கலப்பினுல் உடலுமுயிரும்போல அவ்வுயிர்களேயாகியு ர், பொருட்டன்மையாற் கண்ணுங்கதிரவனும்போல அவற்றின் வேறேயாகியும், உயிர்க்குயிராதற்றன்மையாற் கண்ணொளியுமான்மபோதமும்போல வுடனேயாகியும், அவ்வுயிர்களின்வழியினேங்கிநிற்றலாற் சத்தியேயாகியும், பஞ்சகிருத்தியங்களாற்பதியேயாகியும், இவ்வெத்தன்மைகளினும் வேறாய் இவற்றொருடுந்தாதான்மியமா (ஒருமைப்பாடா)ய் எவ்விடத்தும் எஞ்ஞான்றுந் தானேசுயஞ்சோதியாய் நிற்குமந்தவுண்மைநிலையிற்சிவமேயாகியும், கேட்கப்படும்.

படினும் — பஞ்ச கிருத்தியங்களினுண்மைபற்றித்தான் இறைவனிருப்பை எல்லாவருஞ் சம்மதிக்கின்றனர். அவை (பஞ்ச கிருத்தியம்) I ஒடுக்கம் =இளைப்பாற்றல், II தோற்றம்=அவரவர் கன்மமுழுவதுங்கழியுமுகத்தான் மலபரிபாகம்

வருவித்தல், III நிலை—கன்மஞ்சழியுமாறு அவற்றை நுகர்வித்தல், IV மறைப்பு=இருவினையொப்பு வருவித்து மலங்களை முதிர்வித்தல், V அருள்=பந்தத்தை விடுவித்தல், ஆகிய விவ்வைந்துமேயாம்.

இத்தகைய உயிர்க்குறுதி பயர்தனவாகிய பஞ்சகிருத்தியங்கள் இறைவனுக்குவடிவமின்றி நிகழாவாகலின் அருவம், அருவுருவம், உருவம், எனப்படும் மூன்றுதிருமேனிகளும் அவனுக்குவேண்டப்படுவவாயின. அவை—சிவம், சத்தி, விந்து, நாதம், சதாசிவம், மகேசுவரன், உருத்திரன், விஷ்ணு பிரமா, என்பனவாமென்பார் பெரியோர். இவ்வொன்பதனுள் முன்னையது நான்கும் அருபமும்,—பின்னையது நான்கும் உருபமும்,—இடைக்கணுள்ள சதாசிவமே அருவுருவமுமாகக்காண்க. அந்நவுண்மையைத்தானே.

"சிவமாதி நான்முகக் கோவந்தமாமறை செப்புகின்ற நவமாயிலங்கிய வொன்றே" என்று நமது தாயுமானருவும் வலியுறுத்தருளினர். அன்றியுமவர்தாமே, "அருள்வடிவேமூர்த்தம்" என்றுமற்றோரிடத்திலுமுணர்வுறுத்திருக்கின்றனர். அது—சிவத்தையும்விந்துவையுமொழித்து நின்ற சத்தி, நாதம், மனோன்மணி, மகேசை, உமை, திரு, வாணி, யாகவிற்கும் சிவசத்தி சொரூபங்களைக்குறித்ததேயாம்.

இங்ஙனம் விவரிக்கப்பட்ட சிவகோணங்களாகிய ஒன்பதும், சத்திகோணங்களாகிய ஏழும், ஆகப்பதினாறுகோணங்களும், பிரிதிவியாதிய பஞ்சபூதங்களுடன் சூரியன், சந்திரன், ஆன்மாவுங்கூட்டியுள்ள எட்டுத்திக்குகளுள்ளேதானுண்மையாக வேண்டும். அத்தகைய உள்ளீடாயவொரு பசுபதி, அல்லது ஜகதீசனுகியசிவ்பெருமானுக்கு இவ்வுரூபம், உருபாரூபம், அரூபம், என்னு மூன்றும் தடத்தவடிவங்களேயாகும். ஆகவே சுத்த சச்சிதானந்த ஸ்வரூபமே அவனுக்கு சொரூபமாகக்காண்பார் பெரியோர். அந்தசச்சிதானந்த ஸ்வரூபியே உயிர்களுக்குக் கன்மமலபரிபாகம் வருவித்தற்பொருட்டுக் கொண்டகருணைசொரூபமாகிய தமது பராசத்தியின் செயலால் நம்மையுய்விக்கவேண்டி அம்மையப்பராகியு மெழுந்தருளியநுக்கிரகியாகிற்பர். அவரே பதி.

இனி—உலகமென்பது, சித்பிரபஞ்சம் (ஆன்மவர்க்கம்) அசித்பிரபஞ்சம் (சடவர்க்கம்), என இருதிறப்படுதலுங்கண்டாம். இவ்விரண்டனுள் ஆன்மவர்க்கமே உயிர்த்தொகையாமென்றுங்கேட்கப்படும். படவே அசித்பிரபஞ்சம் உலகமேயாயிற்று.

ஆதலின், "பதிபசுபாசம்" என்னும் முப்பொருளுண்மை ஸ்பஷ்டமேயாதல் நிச்சயம். அது,

சுவேதாசுவதரோப நிஷத்து

"ஜ்ஞாஜ்ஞௌத்வாவஜாவீஸநீஸௌ!
க்ஷராத்மா நாவீஸதேதேவஏக:!
அந்த:ப்ரவிஷ்டஸ்ஸாஸ்தாஸர்வஜநாநாம்!
வித்யாவித்யே ஈஸதேயஸ்துஸோந்ய:!
ஜ்ஞாத்வாதேவம்முச்யதேஸர்வபாஸைம்.

(இ—ள்) சர்வக்ஞனபதியும், கிஞ்சிஞ்ஞானபசுக்களும், அநாதியாயுள்ளவர்கள்; இவருள் பதியாயுள்ளவன் ஈசன் (ஆண்டான்); பசுக்களாயுள்ளசீவர்கள் ஆளப்படுபவர் (அடிமைகள்), பசுபாசங்களை ஒரே தேவனாகியபதி ஆளுகிறான். ஆளுகிறவனாகிய பதி எல்லாப்பசுக்களுக்கும் அந்தராத்மாவாகவிருக்கிறான். பசுபாசங்களை ஆளுகிற அந்தப்பதி அவ்விரண்டற்கும் அன்னியன். அப்படிப்பட்ட தேவனையறிந்த பசு: எல்லாப்பாசங்களினின்றும் விடுபடுகிறான்." என்றும்,

ஷ [1—8ல்] "இந்த ஜகத்து வியக்தாவியக்தமும் (திரிசியப்பொருளானவுருவமும், அதிரிசியப்பொருளான அருவமும்), க்ஷராக்ஷரமும் (மாறுவதாகிய அசித்தும், மாறாததாகிய சித்தும்) ஆனவஸ்துக்களாற் கூடியது. இதை ஈசுவரன் பரிபாலிக்கிறார். ஈசுவரனல்லாத ஜீவன் அநுபவிப்பவனாகையால் இதிற் கட்டுப்படுகிறான். ஆனால் ஈசுவரனையறிந்து எல்லாப்பாசங்களினின்றும்விடுபடுகிறான்." என்றும்,

ஷை [4—7ல்] "ஆன்மாவானவன் சரீரத்திலிருந்து கொண்டு தீனத்தன்மையில் மூழ்கியவனாகித் துயரப்படுகிறான். ஆனால் எப்பொழுது யாவராலுந்தொழப்பட்ட ஈசனையும், அவரதுமகிமையையும் பார்க்கிறானோ அப்பொழுது துயரமற்றவனாகின்றான." என்றும்,

எழுந்த சுருதிகளால் நன்குபோதரல் காண்க. இதுவே ஆகமசம்மதமுமாமென்பார் ஆன்றோர். இவ்வுண்மைப்பொருள்களாற்றானே திரிபதார்த்தங்களுமநாதி நித்தியமாமென்கின்றனம் நாம். ஆதலின்,

(a) ஏகசப்தத்தால் வழங்கப்படுகிற சர்வக்ஞனபதி (கடவுள்) ஒருவன்.

(b) சர்வஜன சப்தத்தால் வழங்கப்படுகிற கிஞ்சிக்ஞரான பசுக்கள் [ஜீவர்] அநேகர்.

(c) எல்லாப்பாசங்களினின்றும் விடுபடுகிறானென்றதாற்பாசம் பல. என்பதுங்கண்டாம்.

இவற்றுள் [முப்பொருள்களுள்] பசுபாசங்களையுடைமையாக்கொண்டு பரிபாலிக்கிற ஈசுவரன்பதியும் (ஆண்டானும்), அவ்வுடையோனாலாளப்படுகிற பசுபாசங்களுள்ளே நானடி

மையென்றுவதுணர்ந்து கொள்ளவல்ல கிஞ்சிஞ்ஞாகிய ஜீவ வர்க்கம் அடிமையுமாமென்பதை, எந்தவல்லார்தாமும் மறுக்ககில்லார். ஆகவே,

இறைவனது அடிமைகளேயாகிய நாமொவ்வொருவருக்கும் தன்னையுந் தலைவனையுமுணரவொட்டாது தடுத்து நிற்கும் சொரூபமறைப் பொன்றனது நீக்கமும், பெறவேண்டிப்பிரமவிஷ்ணுக்களாலுந் தொழப்பட்ட ஈசுவரனைத் தொழவேண்டியதுதானே கடமையாயிருக்கிறது. அப்படித் தொழுதாற்றானே ஈசுவரனையும், அவரது மகிமையையும், அறிந்து அடையும்படியான முத்தியை அவ்வீசுவரனே அடைவிப்பர். (இது-சம்புபட்சம்). அவ்வீடு பேற்றைவேண்டி நாம் தொழுந் தொழுகைதானே ஆலயவழிபாடாம் (விக்கிரகாராதனமாம்). அந்த வுண்மையை,

> "குறிகளும்மடை யாளமுங்கோயிலும்
> நெறிகளும்மவர் நின்றதோர் நேர்மையுப்
> அறியவாரண மாயிரமோதினும்
> பொறியிலீர்மன மென்கொல்புகாததே"

என்ற சுருதியாலறிஞர் நன்குணர்ந்துகொள்வர். பொறியிலாராகிய ஏனையோர் அளவிறந்த வேதபாராயண வல்லுநராயினும் அறியவல்லாரல்லரென்பதையு மிந்தசுருதிபோதமே

நன்குவலியுறுத்துதலுணர்க.

ஓ! சிவநேசச்செல்வர்காள்!

அறிவிற்சிறந்த நம்மவர்களுள்ளேயே என்றும் நடை பெறுவதாகத் தொன்றுதொட்டு வழங்கிவந்துகொண்டிக்கிறதுதானே ஆலயவழிபாடு. அதனை அருவருக்கத்தக்க ஜனசமூகங் கடாமே தற்காலத்திலதிகரித்துக்கொண்டுவருகின்றனர். ஆனாலென்னை? அதன் மகிமை ஒருசிறிதுங் குன்றிற்றில்லையென்பது முலகறிந்தவுண்மையன்றோ! அப்படியாயின் அது எல்லாம் வல்ல இறைவனதென்பதை எந்த அறிஞர்தாமறுக்கத்துணிவர். முன்னொருகாலத்திலே சைவசமயநெறியை வேரறக் களைந்துவிடவேண்டுமென்றுங் கங்கணங்கட்டிக்கொண்டிருந்த எண்ணிறந்த மூர்க்கர்களுடைய பெருமுயர்ச்சியுங் கூடக் கைகூடாமற்போனதுலகறிந்தவுண்மைதானே. அது,

"சோற்கோவுந் தோணிபுரத்தோன்றலும்நம் சுந்தரனுஞ்
சிற்கோலவாதவூர்த்தேசிகனும்—முற்கோலி
வந்திலரேனீறெங்கே மாமறைநூலெங்கே
யெந்தைபிரானைந்தெழுத்தெங் கே." என்ற

கவியாலும் போதரல்காண்க.

இதுகொண்டு "சைவசமயநெறி" மாறுதலடையாவண்ணம் சிவாநுக்கிரகத்தால் அந்நாளில் சமயாசிரியன்மாருற்பவி

த்தனவென்பதேயான்றோர் துணிபு. அவ்வுண்மையை யுணராமல் அவ்வாசிரியன்மார்காலத்திற்றான் "சைவசமயம்" உற்பவமாயிற்றென்று எத்தனையோ பித்தன்மார் ஒருபாற்கத்தியு நிற்கின்றனர். அவருரைக்குச் செவிகொடுக்குமறிஞர் ஒருவரேனுமுண்டோ! பொறியிலாரே அவர்வசத்துப்புக்குழல்கின்றனவென்பதும் வெள்ளிடைமலையாம். காரணம் என்னை? எனின்:—

சிவம்—என்பது நமது சமயாசாரிகளுடைய திருநாமமாக விருக்கவில்லை. அது-எல்லாம் வல்ல இறைவனுடைய திருநாமமேயாம். ஆகவே சமயாசாரிகட்கோ திருவாதவூராடிகள், திருநாவுக்கரசுநாயனார், திருஞானசம்பந்தப்பிள்ளையார், சுந்தரமூர்த்திசுவாமிகள், என்பதாதிய திருநாமங்களாக்கும் வழங்கிவருகின்றன. இந்நால்வருமொரேகாலத்திலுள்ளவருமல்லர், திருஞானசம்பந்தருந் திருநாவுக்கரசருமொருகாலத்திலுள்ளாரென்று கேட்கப்பட்டாலும், ஒருவருக்குப் பதினாறு வயசும் மற்றொருவருக்கு எண்பத்தொருவயசுமுண்மையாதலின் அவ்விருவருங்கூட முழுவதுமொருகாலத்தவால்லவென்பதும் நிச்சயம். மேலும் அவ்விருவருமொன்றுபட்டிருந்த காலம்மிகச் சொற்பகாளேயாம். அத்தகைய அவரில் இன்னார்காலத்துச் சைவமுண்டாயிற்றென்று சொல்லுவாருண்டானாலும், இதரமார்க்கத்தாரைப்போல நாமும் ஒருகாலநிர்ணயங் கற்பியாத

துக்காகத் தூக்கிக்கலாம். அவர்போல மதாசிரியர் பெயரால் நமது மதத்தையும் வழங்கிவரலாம். அதற்கிடனில்லையாதலின் அறிஞரொருவருமவருரைக்குச்செவிகொடுத்துத் தூக்கிக்காதிருப்பதேயாமென்றறிக.

அல்லாமலும், "சைவம்" என்பதற்கு 'சிவசம்பந்தம்', என்பதே பொருளாதலின் அநாதிப்பழம்பொருளாகிய சிவத்தைப்போலவே அவனது சமயமும் அழிவற்றதாமென்று அறிஞர்சமூதாயத்தில் நிராட்சேபமான ஒரு நம்பிக்கையுண்டாயிருப்பதூஉமுணர்க. அதனானே,

"சைவசமயத் தனிநாயகனந்தி
யுய்யவகுத்தகுருநெறி யொன்றுண்டு
தெய்வசமயஞ் சன்மார்க்கஞ்சேர்ந்துய்ய
வையகத்துள்ளார்க்கு வகுத்துவைத்தானே" என்றபடி சுருதிசம்மதமுமாகின்றது. இந்த சுருதியில் சிவனே "சைவசமயத்தனி நாயகன்" என்றழைக்கப்படுகின்றார். அப்படித்தானே,

சுந்தரமூர்த்திசுவாமிகள்

"சைவத்தசெவ் வுருவனை திருநீற்றனுருமேற்றான்
கைவைத்தொரு சிலையாலரண் மூன்றுமெரிசெய்தான்
தெய்வத்தவர் தொழுதேத்திய குழகன்றிருச்சுழியன்
மெய்வைத்தடி நினைவார்வினை தீர்தலெளிதன்றே."

திருஞானசம்பந்தர்

"வானவர்மதியொடு மத்தஞ்சூடித்
தானவர்புரமெய்த சைவன் இடம்
கானமடமயில் பெடைபயிலும்
தேனமர்பொழிலணி சிவபுரமே"

திருநாவுக்கரசர்

"செய்யவுன்கமலபாதஞ் சேருமாதேவர்தேவே
மையணிகண்டத்தானே மான்மறிமழுவொன்றேந்தும்
சைவனே சாலஞானங்கற்றறிவிலாத நாயேன்
ஐயனே ஆலவாயிலப்பனே யருள்செய்வாயே"

மணிவாசகப்பெருமான்

"பாழ்ச்செய்விளாவிப் பயனிலியாய்க்கிடப்பேற்குக்
கீழ்ச்செய்தவத்தாற் கிழியீடுநேர்பட்டுத்
தாட்செய்யதாமரைச் சைவனுக்கென்புன்றலையா
லாட்செய்குலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே"

என்னும் வேதபாசுரங்களில் சமயாசிரியன்மாராலும் சைவத்தசெவ்வுருவனென்றும், சைவன் சைவன் சைவன் என்று அழைக்கப்பட்டிருக்கிறார் எமதுபரமேசுவரர். அங்ஙனமே

ஆகமங்களும் "சதாசிவப்பெருமானே அநாதி சைவர்" என்று கோஷிக்கின்றனவென்றுங்கேட்கப்படுகிறது. அப்படியானால் சைவசமயத்தலைவர்: சிவபிரானா? சமயாசிரியன்மாரா? சிவபெருமானுடையதன்றோ சிவமதம். ஆதலின் அதற்கு,

சைவம், குருநெறி, தெய்வசமயம், சன்மார்க்கம், என்ற பெயர்களுண்டாயிருக்கின்றன. அன்றியும், அது உலகமுய்ய வகுத்ததாதலின் "அருணெறி" என்றும், ஒரு சாதி ஒரு தேசத்திற்கென்றில்லாமல் வையகத்துள்ளார்க்கு வகுத்துவைத்ததாதலின் "தாய்மார்க்கம்" என்றும்,—பெயர் பெறுந்தகைத்து. அதனைத்தானே "சைவசமயமேசமயம் "முத்தி தருந் தெய்வசபை" என்றார்பெரியாரும். இதனால் "திருநெறி" "முத்திநெறி" எனப்படுவதுஞ் சைவசமயந்தானே. இத்தகைய பெயர்களின் காரணங்களும்,

"பேரோராயிரமும்முடையானைப் பேரினாற்பெரிதும்மினியானை" என்றபடி பேரினாற்பெரிதும்மினியாராகிய தலைவருக்குப்போல அவரது சமயமாகிய சைவத்திற்கும் முற்றப்பெறப்படும். அந்தவுண்மைக்கு,

விரிவிலாவறிவினார்கள் வேறொருசமயஞ்செய்து
மெரிவினாற்சொன்னாரேனு மெம்பிராற்கேற்றதாகும்
பரிவினாற்பெரியோரேத்தும் பெருவேளூர்பற்றினானை
மருவிநான்வாழ்த்தியுய்யும் வகையதுநினைக்கின்றேனே"

“யாதொரு தெய்வங்கொண்டீரத்தெய்வமாகியாங்கே” மா
தொருபாகனார்தாம்வருவர்” என்று எந்த மதங்களினுஞ் சேட்
கப்படாத சத்போதங்கள் இந்த சைவசமயத்தின்மட்டு முண்
மையாதலே போதியசான்றுகளறிக. இங்ஙனம் பலமான
ஆதாரங்கள் பலவுங்கண்டன்றோ “சிவமதம்,, ஒன்றே முதன்
மதமா மென்று நாம்பற்றிநிற்கின்றோம். அப்படியிருக்கவும்,

உண்மையறிவில்லாத சிலஜனங்கள் “சிவமதம்,, இடைக்
காலத்துற்பவமாயிற்றென்கின்றனர். அவருக்கு விரிவிலா
அறிவினர்,, ஆகிய மனுடராலாக்கப்பட்டுப்பிறந்தநாளும், வயசு
நிர்ணயமும், நிச்சயித்துக்கொண்டு வாப்பட்ட மதங்களொன்
றுமெம்முடையதல்லவென்று நம்மவர் சொல்வதுகொண்டா
யினுமுணர்வு தலையெடுக்கவில்லையே! அந்தோ! அவரென்செய்
வர்! அவரது அவாந்தரமதங்களைப்போலு மொருமதந்தானே
சிவமதமுமென்றுற்றுன்தம்மதத்திற் சேற்றமுண்டென்றுகரு
தினர்போலும், அங்ஙனம் கூறுவோருஞ் சிலர்தாமுளார். வே
று சில கொடியர் புறமததூஷணைகடாந் தம்மதத்திற்கொரு பூ
ஷணமாமென்று கருதியுமழிகின்றனர். அவர் எப்படியேன்
போகட்டும்.

உலகத்திலே ஜன்னியங்களாகக் காணப்படுகிற புது மத
ங்களுக்கெல்லாம் ஜனகஸ்தானத்திலுள்ளது, சைவசமயமொ
ன்றே யாமென்பதும் நமது கொள்கையாம். அந்த உண்மை

உய்த்துணருமறிவாளிக ளொவ்வொருவருக்கும் நன்கு புலப்ப
டாதேபோமோ! அப்படியிருக்க அநாதி சமயத்தை அவாந்
தர சமயமென்றால் எவர்தாம் நம்புவர். ஒருவரும் நம்பார்: ஆத
லின்,

"சைவசமயமே சமயம் சமயாதீதப் பழம்பொருளைக் (டுப்
கைவந்திடவே மன்றுள்வெளிக் காட்டுமிந்தக்கருத்தைவிட்
பொய்வந்துழலுஞ் சமயநெறி புகுதவேண்டாமுத்திதருந்
தெய்வசபையைக் காண்பதற்குச் சேரவாருஞ்செகத்தீரே"

(இ—ள்) உலகத்தவரே! சிவமதமே மதமெனத்தக்கது.
[அது] ஏனையமார்க்கங்களாலறிந்தடையக்கூடாத அநாதி சிவத்
தைக் கையிலாமலகம்போல ஆலயத்தின்வைத்தே வெளிப்படுத்
திவிடும். இந்த [மேலான சமயத்திலுள்ள] மெய்ஞ்ஞானத்தை
நழுவவிட்டுப்பொய்யாகத் தோன்றியுழலாநின்ற மதவொழுக்க
த்திற் புக்குழலாதீர்கள். மோட்சத்தையருளாநின்ற தெய்வ
சபையை (சிவாலயத்தை)த் தெரிசித்தற்கு ஒருசேரவந்து சே
ருங்கள்; [எ—று] என்றார் எமது தாயுமானாரும். இந்தவருட்
பாவில் மன்று, சபை, என்பன ஆலயத்தையுணர்த்து நிற்பன
வாக்காண்பதே ஆன்றோர் வழக்கு. அதனை "ஆற்றோடுதும்பை
யணிந்தாடும் அம்பலவாணர்,, என்றதாதிய அருள்வாக்குகளு
ண்மை கொண்டுமறிந்துகொள்க.

ஆனபடியால், நம்மவர்காள்!

சிவாலயவழிபாடொன்றனையே முத்திதருந் தெய்வசபையாகக்கொண்டோங்கி சிறந்தது சைவசமயமாமென்றுங்களுக்குச்சொல்லுகிறேன். அப்படியானால்— "சைவசமயம்,, அநாதியாயிற்றே? அங்ஙனமே "ஆலய வழிபாடும்" அநாதியாகத்தானே வேண்டுமென்று நீங்கள் என்னைக்கேட்கலாம். அதற்குப் பதிற்சொல்லமுடியாத நிலைமையில் நமது பெரியோர் நம்மை வைக்கவில்லை. ஆதலிற் சொல்லுகின்றேன்.

பட்டினத்து அடிகள்

"ஒருநான்கு சாதிக்கு மூவகைத்தேவர்க்கு மும்பருக்குந்
திருநாளுந் தீர்த்தமும் வேறுளதோ வந்தத்திசைமுகனால்
வருநாளில் வந்திடுமந்தக்கண்ணாளன் வகுப்பொழியக்
குருநாதனாணை கண்டீர்பின்னை யேதிக்குவலயத்தே"

(இ—ள்) ஒப்பற்ற, (மறையோர், அரசர், வேளாளர், தொள்ளாளிகள் ஆகிய) நான்கு சுத்தசாதிகட்கும், (பிர்மா, விஷ்ணு, நீலலோகிதனென்னுங்காலவுருத்திரர், ஆகிய) முப்பால தெய்வங்கட்கும், மேலுலகவாசிகட்கும், (சிவாலயத்திலே சேவிக்கவேண்டிய நித்தியநைமித்திகாதி) மகோற்சவங்களும், (அவர்களாடவேண்டிய) புண்ணியதீர்த்தங்களும் (நிலவுலகத்திலே காணப்படுவன அல்லாமல்) வேறு வேறாகவிருக்கின்றனவோ? [இல்லவே இல்லை. ஆனபடியால், தேகபோகங்களை

ச் சிருஷ்டித்த ) அந்தப்பிரமதேவனால் ( அ ந் த த் தே க பே ா கங்களைக்கொண்டுள்ள ஆன்மகோடிகட்கு மூத்திநெறியு மா வசியகப்பட்டுள்ளதாதலின் அந்த) ஆரம்பகாலத்திலேயே (ஆ லயவழிபாடும்) உண்டாக்கப்பட்டுவந்திடும்— அந்தச்சிருஷ்டி கர்த்தாவினால் வகுக்கப்பட்டதுமல்லாமல் அஃது பரமாசிரிய ராகிய பரமேசுவரருடைய ஆக்கினையாயிருப்பதையும் (அறி வாளிகளே! வேதசிவாகமங்களிலும் நீங்கள்) கண்டிருக்கிறீர் கள். அப்படியில்லாமற்போனால் (ஆலயவழிபாடுதான்) உலக த்தில் ஏது? (சுருதிசம்மதமென்னுஞ் சிவாக்ஞைகொண்டு ஜ கோதயப்பிரதமத்திலேயே பிரமதேவனால் வகுக்கப்பட்டிருக் கு மேரமேதுவினாற்றான் இவ்வாலயவழிபாடு உலகத்திலுண் டாயிருக்கிறதென்றுணர்க) (எ—று)

இங்கே ஆலயவழிபாடு அநாதியாமென்பதற்கு இவ்வாதா ரமொன்றே போதுமானதென்கின்றேன். மேலும் விரிவஞ் சிப் பலவிடப்பட்டன. இந்தக்கவியில்" அந்தக்கண்ணாளன்,, எ ன்பதை" மாந்தைக்கண்ணாளன் ,, என்று திரித்துக்கொண்டு கம்மியர்மயங்குகின்றனர். அங்ஙனந் திரித்துக்கோடலாற்பிர யோசனமென்னையோதெரிகின்றலம். ஏதும் பயனில்லாதே, கவியை மணங்கெடுப்பான் கருதியநண்பர் (கம்மாளர்) மேலா யினும்" அந்தக்கண்ணாளன்.,என்பதை"மாந்தைக்கண்ணாளன்" என்ன மடங்கி யிடர்ப்படாதிருப்பாராக.

இனி இந்தக்கவியிற்கண்டபடி உலகத்திலேகாணப்படு கிற திருநாளும்,தீர்த்தமுமன்றி வேறுகவொன்று: யாண்டுஞ் சேதனவிசிட்டருக்குங்கூட வுண்டாயிருக்கவில்லையென்னுமு ண்மையை, காஞ்சிப்புராணம் திருவேகம்பப்படலத்தில்

[87.] " மருள்புரிகருத்தினன் மாயனேத்தலுங்
கருதுமப் பெரியகள்ளக் கம்பனே,,

[88.] " உருத்திரனலத்தகு மொருமைபூண்டுயர்
கருத்தொடும் வழிபடு நல்லகம்பனே,,

(89.) "வாலிய சிந்தையான் மலர்ப் பொகுட்டணை
மேலவன் வழிபடு வெள்ளக்கம்பனே" என்ற கவிகளைக் கொண்டுந்தெரிந்துகொள்ளலாம். இதனாலே திரிமூர்த்திகளா லும்பூசிக்கப்பட்டசிவலிங்கங்கள்" கள்ளக்கம்பலிங்கம்; நல்ல கம்பலிங்கம்; வெள்ளக்கம்பலிங்கம்" என்ற திருநாமங்களோடு காஞ்சிபுரத்தி லுண்மை ஸ்பஷ்டமாம். இன்னமும். அங்கே"சா மாட்சியம்மையாற்பூசிக்கப்பட்ட" "பெரியகம்பலிங்கம்" என் னுமொன்றனுண்மையுங் கேட்கப்படுகிறது. இங்ஙனம்பிறதல ங்களிலுண்மையாகவுஞ் சரித்திரங்களுண்டாயிருக்கின்றன.ஆ தலின் மண்மிசையுள்ளனவன்றி வான்மிசையொன்றுமின்றெ ன வுணர்க.

அத்தகைய [திரிமூர்த்திகளாலும் பூசிக்கப்பட்ட] லிங்கங்கடாமே நம்மாலும் வணங்கப்படுகின்றன. ஏனையதேவர்களும் அவற்றைத்தாமேவழிபடுகின்றனர். ஆனது பற்றியே "ஒருநான்குசாதிக்கு மூவகைத்தேவர்க்கு முப்பருக்குந்— திருநாளுந் தீர்த்தமும் வேறுளதோவந்., தென்றார் எமதுபட்டினத்தடிகள். அப்பாலும், "அத்திசை முகநெல் வருநாளில் வந்திடும்," மன்றது: திரிமூர்த்திகளுஞ் சிவார்ச்சனைசெய்து இறைவனனுக்கிரகம் கைவந்தபின்னர்த்தான் முத்தொழில்கட் கருகராயினார் என்னு மொருகேள்வியைஸ்திரப்படுத்தியதாம். அதுகொண்டு ஜகோதயப்பிரதமத்திலேயேவெளிப்பட்ட "ஆலயவழிபாடு," அநாதியேயாமென்பது குன்றின்மேலிட்டதீபமாதல் தேற்றம்.

இங்கே அநாதியென்பது— உலகந்தோன்றுநாளிற் றோன்றுமுறையின் முன்னர்த் தோன்றியும், உலகமுள்ளகாறும் நிற்குமுறையின் மதிக்கப்படுமாறுநிலைகொண்டுநின்றும், ஒடுங்குநாளில் ஒடுங்குமுறையிற் பின்னரொடுங்கியும், மீண்டுமுற்பவமாகுங்கால் அவ்வாறே வெளிப்படும், என்றுமழியாதுள்ளதாம். நித்தியமெனப்படுதலும் அதுவே. "கடவுள்" நித்தியமாதலின் அவரதுவழிபாடு அநித்தியமாமோ? பஞ்சகிருத்தியம்நித்தியமாதலின் அத்திருநடனம் அநித்தியமாமோ? ஆதலின் "ஆலயவழிபாடு" அநாதியாமென்பதில் அறிஞரொருவருக்கும் ஆக்ஷேபமிருக்காதென்பதும் நிச்சயம். அந்தவுண்மை,

விம்பம், காமிகம், வாதுளம், காரணம், சுவாயம்பு, சந்தானம், சர்வோத்தமம், முதலிய சிவாகமங்களினாய்ச்சிவல்ல பெரியோரால் வெளிப்படுத்தருளிய எழுவகைப்பட்டசிவலிங்கங்களினுண்மையை வினவியுணர்வார்க்கே நன்குபுலப்படும். அவை வருமாறு:—

I, பரார்த்தலிங்கம்— இது ஜகோதயப்பிரதமகாலந் தொடுத்து மகா சங்காரகாலம்வரையும் சிவபெருமான் சாந்நித்தியராயிருந்து ஆன்மகோடிகட்கு அநுக்கிரகிக்கப்பெறும் இலிங்கமாம். தாவரலிங்கம், திரலிங்கம், எனப்படுவதுமிதுவே.

II சுயம்புலிங்கம்— இது அநுக்கிரகார்த்தமாத் தானே தோன்றியதாம். ஸ்வயம்+பு=தானேயுண்டானது.

III. காணலிங்கம்—இது விநாயகர், வைரவர், வீரபத்திரர், சுப்பிரமணியர், முதலிய சிவகணநிபர்களாலும், கணங்களாலும் ஸ்தாபிக்கப்பட்டது.

IV. தைவிகலிங்கம்—இது விட்டுணு, பிரமன், இந்திரன், முதலிய தேவர்களாலே ஸ்தாபிக்கப்பட்டது.

V, ஆரிடலிங்கம்— இது அகத்தியர், புலத்தியர், நாரதர், அத்திரி, வசிட்டர், விசுவாமித்திரர், காசிபர், வாமதேவர்,

பிருகு, முதலாய முனிவர்களாலே ஸ்தாபிக்கப்பட்டது. அசுரர், இராக்கதர், முதலினோராலுந் தாபிக்கப்பட்டதுமிதுவே,

VI மானுடலிங்கம்- இது மனுமுதலிய வரசர்களாலும் அறிவுடைய கண்ணர், பரசுராமர், இராமர், முதலாயினோராலும், ஸ்தாபிக்கப்பட்டதாகும்.

VII க்ஷணிகலிங்கம் = இதுபூசித்தவுடன் விடப்படுவதும்-மண், அரிசி, அன்னம், ஆற்றுமணல், கோமயம், வெண்ணெய், உருத்திராட்சம், சந்தனம், கூர்ச்சம், புட்பமாலை, சருக்கரை, மா, என்னும் பன்னிரண்டனுள்ளே ஏதாவதுஒன்றனுல் பூசிக்குமவ்வப்போது செய்துகொள்ளப்படுவதுமாகும்.

இவ்வேழனுள், க்ஷணிகலிங்கத்தினுயர்ந்தது மானுடலிங்கம். அதனினுயர்ந்தது ஆரிடலிங்கம். அதனினுயர்ந்தது தைவிகலிங்கம். அதனினுயர்ந்தது காணலிங்கம். அதனினுமுயர்ந்தது சுயம்புலிங்கமாம். சுயம்பு வொருவராற் பிரதிட்டிக்கப்படாததும், கருணைகனிந்தன்பருக்கின்பருளுவானிறைவன் முனேவெளிப்படுத்தருளியதும், ஆதலின் - அது [சுயம்புலிங்கம்] அநாதியென்பதும் பிராட்சேபத்தினிலையுதல்கண்டாம். அங்ஙனமேபரார்த்தலிங்கமுமாதலுண்மை. இதுகொண்டும் அறிஞர்க்கெல்லா முண்மையினிதுவிளங்குதல்திண்ணம். இந்தமட்டில் "ஆலயவழிபாடு,, அநாதியாமென்பது வலியுறுத்தப்ப

ட்டது. அத்தகைய ஆலயவழிபாட்டைப்பிரதிபாதிக்கிற சைவசமயத்தை—நீர்மேற்குமிழிபோல் தோன்றிமறைந்தழிகின்ற பொய் மார்க்கங்களோடு ஒப்புவைத்து நோக்கலாமா? அதுமரபன்று. பின்னை, ஒப்புயர்வற்ற சைவசமயமொன்றே!நித்தியமாமென்பது சத்தியம், சத்தியம், சத்தியம், முக்காலும்சத்தியம். அப்படித்தானே ஆலயவழிபாடும் நித்தியமாதலறிக.

ஆனல், "சைவசமயிகள்,, உலகத்திலே மிகச்சுறுக்கமாக விருப்பானேன்? "ஆலயவழிபாடு,,அநேகஜனங்களா லங்கீகரிக்கமார்க்கமில்லாமற்கிடப்பானேன்?! என்றகேள்விகளை நீங்கள் என்பால்கேட்கவுந்துணியலாம். அதற்குநான் உங்களைநோக்கி,

I. பாதைகளிலேஉடைகற்களும்,சரற்கற்களும், வண்டி வண்டியாகக்குவிந்துகிடக்கின்றன.நவரத்தினங்களோ குறைவினுங்குறைவாய்ச் சிறியசெப்புகளிற் பத்திரப்படுத்தி இரும்புப் பெட்டிகளுள் வைத்துப்பூட்டப்பட்டிருக்கின்றன. இவற்றுளே நன்கு மதிக்கத்தக்கது எது?

II. "ஆர்த்த சபை நூற்றொருவராயிரத்தொன்றாம் புலவர்–வார்த்தை பதினுயிரத்தொருவர்" என்றபடி படித்து அவைக்களமேறி, மதிக்கப்பட்டு, பேசவல்ல படித்த வகுப்பார் ஜன சமுதாயத்தின் மிகக்குறைவாயேயிருக்கின்றனர். அவரைக்காட்டிலும் படியாத வகுப்பார் எத்தனையோ பங்கு அதிகமாகவேகாணப்படுகின்றனர்.இருவள்மதிக்கத்தக்கார்யாவர்?

என்னுமிரண்டு கேள்விகளை மாத்திரமிங்கே விடுக்கின்றேன். இக்கேள்விகட்கு நீங்களென்ன விடையிறுப்பீர்களோ அன்னமாதிரியே என்பாற் கேட்கத்துணியுமக் கேள்விகட்கும் பதிலுணர்ந்து கொள்வான் வேண்டிக்கொள்கின்றேன். ஆனபடியால் "மெஜார்ட்டி" யில்லாததுகொண்டு "சைவசமயம்" குறைவானதாக மதிக்கப்படுமென்பது அறிவாளிகளின் கொள்கையன்று. பெரும்பாலாரு மங்கீகரியாத படியால் மைனாரிட்டியின் வைத்த "ஆலயவழிபாடு" மூடர்கொள்கையா மென்பவரே மூடராவர். இது யான்விசாரித் தறிந்ததோருண்மையாம்.

அங்ஙன மாயினும், "சைவசமய" த்தின் திருமுன்பிலே இதரமார்க்கங்களுக்கும் ஆதிக்கமுண்மைபோல ஒவ்வொரு காலத்திற் காணப்படுவது முண்டு. அது கொண்டும் "சைவசமயம்" அகௌரவப் படுவதாகப் பெரியோர் கருது கின்றிலர். ஏன்? எனில்:—

"தோல் வியும் வெற்றியுந்தொன் மதங்கட்கெலாங்
கால பேதத்திலுண்டுந்திபற,
கருத்தன்- செயல தன்றுந்திபற.

"வாதி கடங்களுக்கல்லான் மதங்களுக் கோதார் வலியின்மையுந்திபற.

வோதி யுணர்ந்தோரென்றுந் தீபற" என்ற சாந்தலிங்க சுவாமிகள் திருவாக்கி னுண்மையாலந்த வுண்மையினிது போதருமென்க. இங்கேதோன் மதங்களென்றதால் அவை,

"அன்றென்று மாமென்று மாறு சமயங்கள்,
ஒன்றொடொன் றொவ்வா துரைத்தாலும்-- என்றும்.
ஒருதனையே நோக்குவாருள்ளத் திருக்கும்.
மருதனையே நோக்கிவரும்" என்றபடி ஆறு சமயங்களுடனேயும் "கருகிருணிறத்து மாயனாகமமே கமலம்வாழ் பிரமனாகமமே,
யருகனாகமமே புத்தனாகமமே யறையுலோ காயிதநூலே
மருவு சாங்கியமே தருக்க சாத்திரமீ மாஞ்சமே யிவைகளு மின்னு
மிருநிலத்துள பன்னூல்களுஞ் சுயமே யெம்பிரான் படைத்தனன் மாதோ"

என்று கேட்கப்படுகிற புறச் சமயங்களனைத்து மாமென்னலாம். அவ்வெல்லாச் சமயங்களும் பொதுத் தருமங்களில் பெரும்பாலும் ஒற்றுமை யுடையதாகவே காணப்படும். படினும் ஒவ்வொரு மதாநுசாரிகளின் தகுதிக்குத் தக்கவாறு சிலவேற்றுமைகளும் அவ்வமதங்களிலுண்டாயிருக்கலாம். அது கொண்டொருதோஷமு மின்று. அப்பால் எல்லாமதங்களிலுங்கேட்கப்படுகிற சிறப்புத் தருமங்கள் முழுவதும் சைவ சமயத்திலே

சோபானக் கிரமத்தின் வைத்துச் சொல்லப்படாது போசவு
மில்லை. அனலவை ஆன்மலாபத்தைப் பெறுவான் முன்னேறு
கின்ற அறிவாளியாகிற ஒருமனுஷியனுடைய அறிவானது அ
வன் மதிபூகியான நாடொட்டுப் பூரணமான மனுஷன(ஞானி
யா)கிறவனை நாளுக்கு நாள் வளர்தொறும் வளர்தொறும்
யாண்டியாண்டுநின்.றுமே விடுகின்றதோ அவ்வவவத்தையில்
ஆண்டாண்டு அநுபவித்த இன்பத்திற்குலட்சியமான விஷயம்
எதெதுஉண்டுமோ அஃதஃதை அவ்வப்போதுமேலாகச்சொ
ல்லிஆண்டாண்டு நிறுத்தி நிறுத்தி மேற்கொண்டு போமொரு
முறையிலெழுந்த போதங்களேயாம். அப்போதங்கடாம்
பலமதங்களாக்காணப்படுகின்றன. அவையனைத்துமேதொன்ம
தங்களெனப்பட்டன. அவற்றைப்பூர்வபட்சஸ்தானத்தில் வை
த்து எடுத்துக்காட்டி மேனிலையின் வைத்து மதிக்கப்பட்டு விள
ங்குவது எதுவோ அதுவே சைவசித்தாந்தமாம். ஆகவே அத்
தெய்வநெறிக்கெதிரே இதரவெல்லா நெறிகளும் நிலைபெற
லானன்றே அதன் மகிமைபிரகாசப்படுகிறது. அத்திருநெறி
யின் திருமுன்பில் ஒரு சமயத்திற்கும் மிதமிஞ்சிய ஆதிக்கமு
ண்டாதலில்லையென்பதும் நிச்சயமாம். ஆகவே, வாதிகளுக்குள்
அவரவர் சாமர்த்தியம்போலவெற்றிதோல்விகளுண்டாவதுஞ்
சகஜந்தானே: அந்தவழக்கில் பலவீனமான ஒருசைவன் மற்
றோரசைவனிடத்திற்றோல்வியடைந்து விட்டால் அவன்கதை
யில் சைவந்தோற்றுப்போகக்கூடியதொரு சாதாரணமதமெ

ன்றெழுதிவைத்துக்கொள்ளலாமா? அன்றியும் ஒருகாலத்தி லே பௌத்தன் அரசனேயாகவும் சைவன் கீழ்ப்படிந்தொழு கியிருக்கவும் கூடும். அதுஉலகநீதியைப் பொறுத்ததோவொழு க்கமாமென்றுணராமல், சைவந் தாழ்ந்ததென்று கதைகட்ட லாமா? மேலும், சைவனால் ஆளப்பட்ட ஒந இராஜ்ஜியத்தை வைணவன் கைப்பற்றியிருக்கலாம். அதுகொண்டு சைவத்தை அடக்கிவிட்டோமென்னலாமா? எந்த விதத்திலும் தோல்வி வெற்றிகள் ஆளைப்பொறுத்தல்லாமல் மதத்தைப் பொறுத்து ண்டாவதாக அறிஞர் அங்கீகரிக்கின்றிலரெனவறிக. இனித்தற் காலத்தில்சில நவீனமதங்கள் மிகவும்கண்ணியமுள்ளதுபோலக் காணப்படுகின்றன. அவைசுவயம்பானநவரத்தினங்களுக்கெதி ரே "இமிட்டேஷன்" கற்கள் மதிக்கப்படத்தக்கதாகவிளங்கு தல்போலவும், "சுவர்ணாபரணங்களுக்கெதிரே" கில்ட்டுநகைகள் கண்ணியமுள்ளதாகக்காணப்படுவதுபோலவும் வழங்குவனவா ம். கில்ட்டுநகைகளும் இமிட்டேஷன்செகப்புகளும் எளியஜன ங்களாலும் நாடகக்காரராலும் பயங்காளிகளாலும் கையாளப் படாமற்கிடக்கவுமில்லை. அப்படிப்போல புதுமதாநுசாரிகள் என்உலகத்தில் பெருமிதமாகயிருக்கமாட்டார்கள். நம்மவரிற் கூட அவ்விதரார் ஆசாரங்களைக்கண்ணுற்றசிலர் புனர்விவா கம்செய்தலை நமதுவழக்கத்திலுங்கொண்டுவரவேண்டுமென்று ம், ஜாதிபேதங்களால் அநேகந்தீங்குகள் நேரிடுகின்றன வாதலி ன் வரம்பழித்து மனுஷஜாதியென்றொருஜாதியே யாக்கிவிட வேண்டுமென்றும், பேசிக்கொள்ளுகின்றார்களல்லவா! இதரம

தங்களில் ஒருதேவனேபோதிக்கப்படுகிறுரென்றும் நமதுமதத்தில் பலதேவவணக்கமுண்டாயிருப்பதாகவும்,கரைகின்றுர்களல்லவா! இதரமதத்தார் அவிக்கிரகாராதனர்களாகி மதிக்கப்படவும் நம்மவர்மாத்திரங்கல்லுகளையுஞ் செம்புகளையுங் கும்பிட்டுப்பிள்ளைகள மணல்வீடுகட்டி மரத்தால் மாப்பிள்ளைபெண்ணுகள்வைத்துமணப்பித்து மணற்சோறுக்கி யுண்டுமகிழ்தல்போலக் களிப்பாட்டமாடவுந் தகுமோவென்றுங்கத்துகின்றுர்களல்லவா! அப்படியாஞல் இதர மதாநுசாரிகளால் அவரவர்மதங்கள் மதிக்கப்படு வனவாதல் வியப்பன்றே! ஆதலின் ஒவ்வொருமதத்தவருமவரவர்மதத்திலிருந்து கொள்ளட்டும்.எந்தமதத்தையும், தெய்வஞ்சுதந்தரித்துக்கொண்டிருந்து அததினின்று ஆண்டாண்டுள்ளவர்கட்சநுக்கிரகிக்குமோருண்மையை யெவராலுமறுக்கமுடியாது. ஆயினும்,எல்லாச்சமயமுமெம்பிராற்கேற்றதாகுமென்னு முண்மை போதிக்குஞ்சைவமொன்றேதாய்மார்க்கமாமென்றறிசருனேயுய்த்துணர்ந்தோர்கொள்கையாம். அப்படியிருக்கவும், சைவவொழுக்கங்களைக்குறைவாகுமதிப்பானேன்: எனின்—

பட்டினத்தடிகள்.

“பொல்லாவிருளகற்றுங்கதிர்கூகையென்புட்கண்ணினுக்
கல்லாயிருந்திடுமாறுக்குமே யறிவோருளத்தில்
வல்லாரறிவா ரறியார்தமக்கு மயக்குங்கண்டா
லெல்லாம்விழிமயக்கே யிறைவாகச்சியேகம்பனே,,

(இ—ள்) காஞ்சீபுரத்தி லெழுந் தருளியிராநின்ற எமதிறைவனாகிய ஏகாம்பரேசுவரரே! [அறிவுஒர் உள்ளத்தில் வல்லார் அறிவார்] ஞானசாஸ்திரங்களை ஒதியுணர்ந்த உள்ளத்தின் வலிமையுடையவர் தாம் உம்மையறிகுவர் (அங்ஙனம் மனவலிமைபெற்று உம்மை) யறிந்துகொள்ளாதவர்க்கு (உண்மைஞானத்திலே) மயக்கமுண்டாயின், (அவர்சொல்வது)எல்லாம் (அவரது) குருட்டாட்டமேயாம். (அது எதுபோலுமெனின்) கொடியவிருளைநீக்கவல்ல சூரியப்பிரகாசமானது கூகையெனப்படு மொருவகைப் பறவையினது கண்ணினுக்கு இருண்மயமேயாயிருத்தல்போலுமாம். (என்றறிக) (எ—று) என்றபடி அவரது அறியாமையினாலேதான் சைவசமயவொழுக்கங்களைச் சிலர் குறைவாக மதிக்கின்றன ரென்பதாகக்காண்க.

இந்தக்கவியிலும் சிவநேசப் பெருஞ்செல்வராகியபட்டினத்து அடிகள் காஞ்சீபுரத் திலெழுந்தருளியிருக்கும் எமதிறைவனாகிய ஏகாம்பரேசுவரரே! என விளித்தருளலாலும், ஆலய வழிபாடு அவர்க்கு அங்கீகாரமேயாமென்பது வெள்ளிடைமலையாதலறிக.

இன்னு மொரோரொரு காரியமு மிங்கே என்ஞாபகத்திற்கு வருகிறது. அதையுஞ் சொல்லியேமுடிக்கின்றேன். அன்பர்களே! இப்போது உலகமுடிவுக்குக் காலமடுத்துவிட்டதென்று நண்பர்களாகியஇதரர் சொல்லிக்கொண்டிருப்பது உங்

கள்காதுக்குமெட்டியிருக்கலாமே! அதுவிஷயத்திலுங்களுடையநம்பிக்கை எப்படியிருக்குமோ? அது எனக்குத் தெரியாது. எனக்குத்தெரிந்ததைமட்டுமிங்கேசொல்லத்துணிகின்றேன். அநித்தியமானஉலகத்திற்கு அழிவுவருவதுசகஜந்தான். ஆனாலது நம்பாற்சொல்லிக்கொண்டுவருவதல்ல. ஒவ்வொருவனுக்கும் மரணமுண்டாவதுநிச்சயந்தான். ஆனாலும் இன்னகாலத்திலிறப்பேனென்று சொல்லவல்லானைக் காண்பதரிது. இதனால் எதுக்களைக்கொண்டு, நிச்சயிக்கமுடியாதென்பது என்னுடையகொள்கையுமல்ல. இதுமுன் ஒவ்வொருமுடிவிலும் எந்த நிலைமையிலுள்ளபோது உலகமழிக்கப் பட்டதாகக் கேட்கப்படுகிறதோ அந்தநிலைமை இப்போது வந்துவிடவில்லையென் றெனக்குத்தோன்றுகிறது. நண்பர்களபிப்பிராயப்படுகிற சமீபித்தகாலங்களுக்குள்ளேயும் அந்நிலைமை வந்துவிடுமென்னவுமுடியாது. அதாவது:—

சைவசமயிகளாயிருந்த திரிபுரத்தசுரர்கள்; எவராலுஞ்செயிக்கமுடியாத பராக்கிரமசாலிகளாயிருந்தார்களென்பதுமுலகப்பிரசித்தம். அத்தகையோரை மகாசூதரான திருமால் புத்தவடிவங்கொண்டு கலகப்பிரியராகிய நாரதர் சீடராக வுடன்வரச்சென்று மயக்கி அசைவ (பௌத்த)ராக்கிவிட்டனர். அதுவுந்தற்காலத்திற்காணப்படுகிற கண்காணிகளைப்போலுமந்த தரமாகவல்லாமல் வெகுசீக்கிரத்திற்பிரவேசிப்பித்தனர். ஆனாலும்

அவ்வசுரர்த்தலைவரும், தாரகாசுரனுக்கு மக்களுமாகிய தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்துன்மாலி, என்னு மூன்றுபேர்களைமாத்திரம் அவர்கள்சாமர்த்தியத்தினால் வசப்படுத்தமுடியவில்லை. ஆதலின் அவர்மூவர்மாத்திரம் சத்தியநிந்தசைவராயிருந்தனரென்றுமதிக்கப்படுகின்றார். அவரொழிந்த ஏனையஜனசமுதாயங்கண்முழுவதும் சைவசமயத்தினின்றுங் கடத்தப்பட்டனர். அப்படியிருந்துங்கூட ஆயிரந்தேவவருடம்வரை பெருங்கருணைத்தடங்கடலாகியபரமேசுவரர் பொறுத்துக்கொண்டிருந்தனர். அப்பால்தான் அவர்களுடைய திரிலோகங்களுமெரிக்கப்பட்டன என்று கந்தபுராணம் உபதேசகாண்டமுதலியனவாற் கேட்கப்படுமோர்சரித்திரமேயாம். அங்ஙனமே வேதங்களைஎடுத்துக்கொண்டு போய்க் கடலுக்குளொழித்துக்கொண்டான்; பூமியைப் பாயாய்ச்சுருட்டிக்கொண்டுபோய்க்கடலுக்குளொழித்துக்கொண்டான்; பகவான்அவதாரமாகி அவன்களைச்சம்மரித்து வேதங்களை நிலைநிறுத்தினார். பூமியையுத்தாரணம் பண்ணினார். என்னுஞ் சரித்திரங்களெல்லாம் ஜலப்பிரளயங் களையே குறிக்கும். ஆதலின் வைதிக, சைவ, மார்க்கிகண்முழுவதும் அன்னியமதப் பிரவேசமானான் மாத்திரம், அசைவர்களானிரம்பப்பட்ட இவ்வுலகம் அழிக்கப்படுமென்பது மேலோரபிப்பிராயமாம். அது இதரராலு மறுக்கமுடியாது. என்? எனில் :— சத்தியவேத மென்கிற விவிலிய

நூலிலே, ஆதியாகமம் 19-வது அதிகாரத்தில், சோதோம், கொமோரா வென்னும் பட்டணங்களை அக்கினி மழையாலழிக்க நேரிட்டபோது "லோத்து" என்னுமோர்பக்தனும், அவனுடன் கூடிப்பிள்ளைகளைப் பெற்றதாகக்கேட்கப்படுகிற அவனது புத்திரிகளுமே தேவனால்நாடுகடத்தப்பட்டிருக்கின்றனர். மற்றவரெல்லாம் பாவிகளாயிருந்தது பற்றித்தான் அது அழிக்கப்பட்டது, என்றோர் கதையுண்டு. அன்றியும், நோவாகாலத்திலும் பாவிகளைவைத்துத்தா னுலகைமழிக்கப் பட்டதென்பது அவர்கள்மதம். அன்றியும், "பாவத்தின் சம்பளம் மரணம்" என்பதும் அவர்களது வேத போதமாம். ஆதலின்பாவிகளை வைத்துத்தா னுலகமழிக்கப்படு மென்பதை அவர்களொப்புக்கொண்டு தீரவேண்டிய தனுலென்க.

இந்தவுண்மை கொண்டு உலக முழுவதுமே அவைதிக,அசைவத்துட்பட்ட அன்றுதான் உலகமழிக்கப் படுமென்பதே எனது அபிப்பிராயமுமாம். ஆனால்ஒன்றிரண்டு பேராவது சைவரில்லாமலும் போகார். முடிவுகாலத்திலும் சைவரில்லாதே போனால் சைவசமயம் நித்தியமா மென்பது பொய்மை யேயாய்ப்போகும். ஆதலின் கடைசிக் காலத்திலுஞ் சைவப்பூண்டிருந்தே தீரவேண்டும். இருந்தாலும் பிரளயத்தால் அவர் மற்றவரைப் போலுமழிக்கப்படமாட்டார். அழிக்கப்படு மிதரருள்ளும், நவீனப்பிரவேசகராயுள்ளோர் (முன்சைவரா யிருந்தும் அபத்த போதனையான் மயக்குற்றுப்பிரஷ்டரானோர்) எனைய இத

ரரைப்போலும் நரகம் புக்குகின்றிலர். ஆகவே சத்திபதிந்தசைவர் உயர் பதவியும், சார்புபற்றி நின்றசைவர் சமயப்பிரஷ்டராணபோதிலும் அவர் சுவர்க்க பதவியும், பெற்றாரென்று கேட்கப்படுகிறபடியே பெறுவரென்பதிலும் எனக்குப் பலமான நம்பிக்கையுண்டு. அது, திரிபுரம் எரிக்கப்பட்டபோது மூவரிரட்சிக்கப் பட்டார்.

சுந்தரமூர்த்தி.

"ஒப்பிலாமுலை யாளொரு பாகாவுத்தமா மத்தமார்தரு சடையாய். முப்புரங்களைத் தீவளைத்தங்கே மூவருக்கருள் செய்யவல்லானே. செப்பவானிழற் கீழிருந்தருளுஞ் செல்வனே திருவாவடு துறையு. ளப்பனே யென்னையஞ்ச லென்றருளா யாரெனக்குறவமரர்க ளேறே"

இரட்சிக்கப்பட்ட மூவரும் பெற்றபேறு.

மணிவாசகப் பெருமான்.

"எண்ணுடை மூவரிராக்கதர்க ளெரிபிழைத்துக்.
கண்ணுத லெந்தை கடைத்தலை முன்னின்ற தற்பின்
எண்ணிலியிந்திர ரெத்தனையோ பிரமர்களும்.
மண்மிசை மால்பலர் மாண்டனர் காண் தோணோக்கம்"

சுந்தர மூர்த்தி.

"மூவெயில் செற்ற ஞான்றுய்ந்த மூவரிலிருவர் நின்திருக் கோயிலின் வாய்தல். காவலாள ரென்றேவிய பின்னை யொருவ

ணீகரி காடரங்காக, மானை நோக்கியோர் மாநடமகிழ மணி முழா முழக்க வருள்செய்த, தேவதேவநின் றிருவடியடைந்தேன் செழும் பொழிற்றிருப் புன்கூருளானே"

இதரர் போதனையால் வஞ்சிக்கப்பட்டு அசைவராயினோர்கெதி

சுந்தர மூர்த்தி.

"ஒக்கமுப்புர மோங்கெரிதூவ வுன்னை முன்னிய மூவர் நின் சரணம்; புக்குமற்றவர் பொன்னுலகாளப் புகழினலருளீந்தமையறிந்து, மிக்க நின்கழலேதொழுதரற்றி வேதியா வாதி மூர்த்திநின் னரையில், அக்கணிந்த வெம்மானுனை யடைந்தேன் ஆவடுதுறையாதி யெம்மானே"

என்னுஞ் சுருதி போதங்களால் நன்கு போதரலுணர்க.

உண்மையிங்ஙனமிருத்தலால், வைதிக சைவ நெறியானது தம்முள்ளேயே கட்சிப்பிரதிகட்சிகளை யுண்டாக்கிக்கொண்டு உண்மையை வெளிப்படுத்தி நன்கு நிலைபேறுகொண்டு வளர்ந்தோங்கு மிக்காலத்தை உலகமுடிவைச்சமீபித்த காலமென்பது எனக்குடன்பாடன்று. இருந்தாலும், தற்காலத்துச்சில நவீன நாகரீகிகளெல்லாம் அன்னியரபத்தபோதனைக்குட்பட்டு ஆலயவழிபாட்டை இகழுகின்றனரே! சைவவொழுக்கங்களை யருவெறுக்கின்றனரே! குலதர்மங்களை முழுமூடக்கொள்கையென்றொதுக்கிப்பரிகசிக்கின்றனரே! இதுவேஉல

சமுடிவுக்கு முன் அறிகுறியாமென்றபிப்பிராயப்படுவோருஞ்சில ருளர். இவர்கொள்கையை அறிஞர்சம்மதிக்கின்றிலர். என்? எனில்:

தற்காலத்திலாவது ஆலயவழிபாடு கூடாதென்று வாயி ஞலே மாத்திரஞ் சொல்லுவோரை யிவர்கண்டனர். சைவ வொழுக்கங்களை சிற்சிலகாரணங்களைக்கொண்டு தம்முள்வெ றுத்திருப்பாரையு மிவர்பார்க்கின்றனர். கலர்களாயினோர் சி லர்குலதர்மம்அநாவசியகமென்பதையும்இவர்கேட்டிருக்கலாம். இங்ஙனமன்றி, முற்காலத்திலே ஆலயங்களெல்லாம் கொள் ளைக்காரர்களாலே யிடிக்கப்பட்டும், பிம்பங்களெல்லாமுடைத் தெறியப்பட்டும், ஆண்டுள்ள சொத்துக்களெல்லாமபகரித்துக் கொண்டுபோகப்பட்டுமிருக்கின்றனவே! சைவரைக்கண்டா லும், அவர்வார்த்தைகளைக்கேட்டாலும், "கண்டுமுட்டு, கேட் டுமுட்டு" களாகக்கிடப்பதுடன்நித்திய நைமித்திகங்களொன் றும் நடைபெறவொட்டாதே ஆலயங்களெல்லாம் அடைத்து விட்டு மிருந்தனரே! அன்னியமார்க்கங்களைக் கைக்கொள்ள வில்லையாஞல் சண்டைசச்சரவுக ளுண்டாக்குவதுடன் பூர்வ காலத்துப் புறநாட்டு வழக்கம்போல் அருமையான பெண்கள் சிறைபிடிக்கப்பட்டுப்போசவும், எதிர்ப்பட்டபெண்களைப்பிடித் துக்கர்ப்பழித்துவிடவும், அதுகாரணமாக உடன்கட்டை ஏறுத லென்னுமோர் கொடியவழக்கம் சிலகாலமாக இங்கேநடை பெறவுமேற்பட்டனவே! அந்தக்காலங்களுக்கெல்லாம் தற்காலங்

ாடியகாலமாகுமோ! அதிலும் மங்கலகரமான இங்லீஸிரா ஜியத்தின்கீழ் நடைபெறுமிக்காலம் நல்லகாலமன்றோ? இக் காலத்திலளவிறந்த நன்மைகள் நமக்குண்டாயிருக்கின்றன வெ ன்னலாமே. அத்தகைய இக்காலத்திலே சிலர்வழக்காடுவது கொண்டு தற்காலவழக்கு உலகமுடிவுக்கு அறிகுறியாமென்ப தும் பொருத்தமின்றுதலானென்க.

ஆலயவழிபாடு கூடாதென்ற வியவகாரிகள் எவ்வளவுப மாகவுண்டாகின்றார்களோ, அங்ஙனமேஅதனுண்மையாரா ய்ச்சியில் வல்லாருமதிகப்படுவரென்பதும் நிச்சயம். அப்படியொ நிகழ்ச்சியும் நன்றாகவே காணப்படுகிறது. அது நிற்க, கோ யிலுள்ளேபோய் சுவாமிதெரிசனஞ்செய்யவேண்டுமென்ற பே ராசையோடுகூடி முன்னேறும் பலஜாதியாரையும் ஏனோ நம் மவரிற் சிலர் தடுக்கின்றனர். ஆனால் அவருஞ்சிறிது சிறிதாக முன்னேறுவான் றொடங்கி முன்னர்க் கல்வியறிவொழுக்கங் களைக்கொண்டு சமாதானத்துடன் வராமல் சீக்கிரத்திற் சங்கவின் பலத்தான் மேலிடப்பார்க்கின்றனர். இவ்விருதிற த்தருஞ் சீர்திருத்த முடையவராகி ஒருசாரார் மேலிடுவாரைத் தடுக்காமலிருக்கவும், மற்றொரு சாரார் ஒழுக்கங்களோடு கூடி யவராய்ச் சமாதானத்துடன் மேலிடுவாராகவும் நல்லுணர்ச்சி யவருக்கு எப்போதுகைவருமென்றறிஞரெதிர்பார்க்கின்றனர். இங்ஙனஞ் ஜனசமுதாயத்திற் சமாதானவுணர்ச்சி கைவந்துவி ட்டால், எல்லாவரும் ஈசுவரானுக்கிரகம்பெற்று நல்லாராயிருப் பரென்பதும் எனது நம்பிக்கையாம்.

அப்படிப்பலஜாதியாராலும் விரும்பப்படுஞ்சர்வலோகைக நாயகனாகிய விறைவனை இறைஞ்சியுய்தற்காக வேற்பட்டிருப்பதேயாலயமாம். அவ்வாலயவழிபாடுதானேஏகாந்தமுஞ்சாது சங்கமுமாகக்காணப்படுகிறது. ஆலயசேவைக்கிணங்காத ஜனசமூகத்திற்கு சாதுசங்கமென்பதுமரபாமா? வித்துவஜனசமூகத்திற்குக் கல்விச்சங்கமென்பதூஉம், போதகன்மார் கூட்டத்திற்குப்பிரசங்கசபை யென்பதூஉம், வணிகர்கழகத்திற்கு வர்த்தகக்கூட்டமென்பதூஉம், உலகபரிபாலனசபைக்குப்பாராளுமன்றென்பதூஉம், ஆன்றோர்வழக்கு. அந்தவழக்கில் விஷயப்பிராந்தியிலுழலா நின்ற மனதைத்திருந்திச் சாந்திபவித்துள்ள சாதுக்கள் கூடுமாலய மொன்றைத்தானே சாதுசங்கமென்பர். அந்தச்சங்கத்திற்கு எல்லாம்வல்ல இறைவரன்றே சபாபதியா (அம்பலவாணரா) கக்கொள்ளப்படுகின்றனர். அவரது அக்கிராசனத்தின் கீழ்க்கூடியங்கே,

,,தோற்றந் துடியதனிற் றோயுந்திதியமைப்பிற்
சாற்றியிடுமங்கியிலே சங்காரம் —ஊற்றமா
வூன்றுமலர்ப்பதத்தே யுற்ற திரோதமுத்தி
நான்றமலர்ப்பதத்தே நாடு. "

என்றபடி யிறைவன்பாற்காணப்படும் பஞ்சகிருத்திய சேவையாலிறைவனைய றிந்து, தியானித்து,, சமாதித்து சாக்ஷாத்கரித்து, நிற்றலாகிற விக்கிரகாராதனமே யேகாந்தமா

லென்றுணர்க. அத்தகையசிவாலயத்தின் பெயர்ப்பொருளை இங்கே சிறிது விளக்கிக்காட்டி எனது பிரசங்கத்தை முடிக்கின்றேன், அது வருமாறு;

I கோயில்=[கோ+இல்] இறைவனிருப்பிடம்.

II தேவநகர்=[தெய்வம்+நகர்] கடவுள்வீடு.

III நியமம்=[கட்டளை] தெய்வசட்டப் புஸ்தகம் (வழிப்படுத்துவது)

IIII பள்ளி= { பண்புஎன்றுஞ்சொல்லினின்றும் வந்து குணப்படுத்துவதுஎன்றுபொருள்படும். அதற்குக் கற்குமிட மென்னலுமாம்

V விமானம்=[வி+மானம்] விசேஷித்த பெருமை தருவது.

VI பீடரம்=[பீடு+அரம்] துன்பத்தையொழிப்பது.

VII பாழி=(விஷயப்பிராந்தியின்) ஒழிபுதருவது.

VIII தளி=தட்பமென்றுஞ் சொல்லினின்றும் வந்து சாந்திபயப்பது.

IX நிகேதனம்=[நி+எதனம்] சுவாசவொடுக்கம் பயிலத்தகுமிடம்.

X சேதிமம்=இருணீக்குவது.

XI கற்கி=[கற்கம்=நிட்டை] நிட்டை கூடிநிற்ற கேற்றவிடம்.

XII நிலயம்=மனதைப்புறஞ்செல்லவிடாதுநிறுத்துவது.

XIII மந்திரம்=[மந்+திரம்] தியானத்தைநிலைபெறுவிப்பது.

XIV சினகரம்=[சின்×அகரம்] மெய்ஞ்ஞானபுரம்.

XV கோஷ்டம்=[கோ×இஷ்டம்] பசுக்களின் விடுதலைஸ்தானம்.

XVI ஆலயம்=[ஆ+லயம்] சீவபோதம் பரபோதத்திலாகும் ஐக்கியந்தருவது, என்பனவாம்.

இவற்றையுய்த்துணர்ந்து மேலும் அறிஞர்வாய்க் கேட்டுத்தெளிந்து ஆலயவழிபாடே (விக்கிரகாராதனமே) மேலாமுத்திநெறியென்னுமுண்மைபற்றி நின்றுய்வீர்களாக. மேலும்,

ஞானம் யோகம் கிரியை சரியைநாலும்
நாதன்றன்பணி—ஞானி நாலினுக்கு முரியன்
ஊனமிலா யோகமுதல் மூன்றினுக்கு முரியன்

யோகி—கிரியாவான்ருன் ஒண் கிரியையாதி
ஆனவிரண்டினுக்குரியன் சரியையினினின்றேன்
அச்சரியைக் கேயுரியன்,, என்றும்,

ஞாலநீதியும் நான்மறை நீதியும்
பால ருன்மத்தர் பிசா சரிலெனவும்
உறங்கினேன்கை வெறும் பாக்கெனவும்
தானே தவிராதானுற் புரியா
தொழிந்திடினிரயத் தழுந்துதறிடமே,, என்றும்,

சுருதிபோதங்களுண்மை யாதலின், மகாஞானிகளுக்கே மிகப்பொறுப்பாகவுள்ள ஆலயவழிபாட்டை (விக்கிரகாராதனத்தை) அறிவாளிகளாகிய நாமனைவரும் முறையே பற்றி நின்றுய்வோமாக.

நமப்பார்வதிபதே! அரகர மகாதேவ.
சிற்சபேசா! சிவசிதம்பரம்.
கெஜமுகாநுக்கிரகம்பஜே! விநாயகேச.
கார்த்திகேயநாம சங்கீர்த்தனம்! சிவசுப்ரமண்யோம்.

திருச்சிற்றம்பலம்

மெய்கண்டதேவன்றிருவடி வாழ்க.

| பக்கம். | வரி, | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| 3 | 1 | என்பா | என்பர் |
| ஷ | 2 | ஓரு | ஒரு |
| 5 | 17 | ஓரு | ஒரு |
| 15 | 1 | அத்தகை | அத்தகைய |
| ஷ | 4 | சொல | சொல் |
| 16 | 7 | ஓவ்வொரு | ஒவ்வொரு |
| ஷ | 18 | யென்ற | சுட்டியென் |
| 17 | 15 | ஞானனந்த னுபவ | ஞானனந்தா னுபவ |

| | | | |
|---|---|---|---|
| 18 | 15 | மாதா வினங்காத்தலின் | மாதாவி னங்காத்தலின் |
| 19 | 16 | இவரீன வரும் | இவரீனவரும் |
| ஷை | last | ஒருவருவுூம் | ஒருவருஷம் |
| 21 | 11 | படுத்தும் | படுத்து |
| ஷை | 18 | ஸ்பஸ்ட | ஸ்பஷ்ட |
| 22 | 3 | புஸ்த்தக | புஸ்தக |
| ஷை | 8 | பாஷை | பாஷை |
| ஷை | 18 | ஒருவ | ஒருவ |
| 23 | 12 | பூதார | பூதாரா |
| 25 | 3 | இருப்பதல்லால் | ஈசனிருப்பதல்லால் |

| | | | |
|---|---|---|---|
| ஷை | 3 | விளக்கமுறுவதல்லாமல் | ஈசனுக விளக்கமுறுவதல்லாமல் |
| 26 | 14 | எதுவடா | எது அடா |
| 27 | 10,12 16 | பிரதிஸ்டிக்க | பிரதிஷ்டிக்க |
| ஷை | 20 | எதுவடா | எது அடா |
| ஷை | 21 | ரூபகரணம் | ரூபகரண |
| ஷை | last | அசெ | அசை |
| 29 | 1 | என்பனவாதி யமுது | என்பனவாதிய முது |
| ,, | 17 | [ஈக] | [ஈ] |
| 31 | 3 | பெரியாயரருண்மொழி | பெரியாரருண்மொழி |
| ஷை | 13 | தருக்களில் | தருக்களில் |

| | | | |
|---|---|---|---|
| 32 | 6 | ன் | னை |
| ஷை | 13 | [மற்றவர்என்பதன்முன்னர்] | 33-வது பக்கத்துமுதன் 3 வரியும் சேர்த்துவாசித்துக் கொள்க. |
| ஷை | 20 | ணரால் | ணரவ் |
| ஷை | last | இறைவனை | இறைவனை எவரெவரெவ் வெவ்விடங்களில் வழிபடி னும் அவரவருக்கு இறை வன் அங்கங்கே நின்றநுக் கிரகிப்பன். |
| 47 | 16 | பேற்றார் | பெற்றார் |
| 53 | 2 | ஒதும் | ஓதும் |
| 60 | 14 | ஓன்பதாவது | ஒன்பதாவது |
| 62 | 1 | பெறுகிகள்கிறார் | பெறுகின்றார்கள் |

| | | | |
|---|---|---|---|
| 67 | 14 | செயித்தற்ககத்தான் | செயித்தற்காகத்தான் |
| 71 | 13 | தாலத்தும் | காலத்தும் |
| 73 | 5 | னபது | ன்பது |
| 76 | 3 | மாவக்கியந்தானே | மாவாக்கியந்தானே |
| ,, | 6 | மூண்டோகோ | மூண்டகோ |
| ,, | 10 | மதிக | மதிக்க |
| 77 | 7 | சிவலிங்ககார | சிவலிங்காரா |
| ,, | 15 | சொருப | சொரூப |
| 79 | 17 | கவ | கௌ |
| 80 | 14 | யெழும் | யென்றும் |

| | | | |
|---|---|---|---|
| 83 | 2 | ஒரு | ஒரு |
| 84 | 1 | அங்கிரி | அங்கீகரி |
| 97 | 4 | னளவை | ளளவை |
| 107 | 6 | "சதாசிவ னுக்கு" | "சதாசிவ னுக்கு" [உரூபாரூபம்.] |
| 109 | 4 | முக்கியய் | முக்கியப் |
| ,, | 6 | அங்கிரிகரிக் | அங்கீகரிக் |
| 110 | 7 | நிகளும் | நிகழும் |
| 116 | 2 | வைகலான | வைகளாலான |
| ,, | 16 | சுத்தசட்குணங்கள் | — |

| | | | |
|---|---|---|---|
| ,, | last | ஷை | தன்வயத்தனுதல், முதலில னுதல், உடம்பிலனுதல், எல்லாநலமுளனுதல், எங்குவியாபகனுதல், எவற்றிற்குங் காரணனுதல், என்னும் ஆறு குணங்களாகவும், அவாவின்மை, ஈசுரத்தன்மை, கீர்த்தி, செல்வம், ஞானம், வீரியம், என்னும் ஆறுகுணங்களாகவும், வேறுவிதத்துங்கூறுவாருமுளர். |
| 125 | 13 | ஜன்னியங்களே | ஜனனியங்களுமே |
| 126 | 15 | அங்நம் | அங்கனம் |
| 127 | 18 | சொல்ல | — |
| 129 | 12 | கண்மகலேந | கணமகலேந் |

| | | | |
|---|---|---|---|
| ,, | last | வாறே | வாறே, |
| 130 | 1 | விளம்பிடுவோர் | விளம்பிடுவோர், |
| ,, | 11 | முடிக்கினறேன் | முடிக்கின்றேன் |
| 137 | 10 | அவரவர்கள் | அவர்கள் |
| ,, | 13 | கிழிததெரிந்து | கிழித்தெறிந்து |
| 157 | 4 | ெருமா | பெருமா |
| 160 | 10 | வேறுளதோவந்தத் | வேறுளதோவத் |
| 163 | 5 | வேறுளதோவந்,, தென்றூர் | வேறுளதோ வென்றூர் |
| 166 | 16 | தூற்றொருவர் | நூற்றொருவர் |
| 168 | 14 | மாதே | மாதோ |
| 169 | 6 | மே விடுகின்றதோ | மேவிடுகின்றதோ |
| 176 | 6 | மூவரிரட்கிக்க | மூவரிரட்சிக்க |